REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 246 | Tuesday 15, October, 2024 | 20பக்கங்கள் | 50/-




## ரூ. 355 கோடி VAT வரி செலுத்த தவறியமை

# அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு 06 மாத கால சிறை

## கால அவகாச கோரிக்கையும் நிராகரிப்பு

### கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 355 கோடி ரூபா (3.5 பில்லியன்) 'வற்' வரியை செலுத்தத் தவறியுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், டபிள்யூ. எம். மென்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் பண்டார இலங்கசிங்க, 06 மாத சிறைத் தண்டனை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

'வற்' வரியை செலுத்தத் தவறியுள்ளமை தொடர்பில், இறைவரி திணைக்களம் தாக்கல் செய்த வழக்குடன் சம்பந்தப்பட்ட வரித் தொகையை செலுத்துமாறு கடந்த வருடம் நவம்பர் (14) நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இருந்தபோதும் அந்த வரித் தொகையை செலுத்தத் தவறியதாலேயே, நீதிமன்றம் நேற்று மேற்படி தண்டனையை விதித்தது.

அர்ஜுன் ஜோசப் அலோசியஸ், எந்தனி ரண்டிவென், கே.பி. குமாரசிறி டி சில்வா ஆகிய சந்தேக நபர்களுக்கே ஆறு மாதங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு உள்ளதா? என்பதை நீதவான் நீதிமன்றத்தில் விசாரித்தார். அவ்வாறு இடைக்கால 06

## வெள்ளத்தை கட்டுப்படுத்த சரியான, நிலையான வேலைத் திட்டம் அவசியம்

### உடனடி நிவாரணங்களுக்கும் ஜனாதிபதி பணிப்பு

நிவாரணம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக பணம் தேவைப்படுமாயின், அதற்கான நிதியை ஒதுக்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வருடம் இரண்டு தடவைகள் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதாகவும், அதற்கமைவாக அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு, சரியான மற்றும் நிலையான வேலைத் திட்டம் அவசியமெனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று (14) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்படுகிறது. இப்பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துக்களை 06

## சீரற்ற காலநிலை சில தினங்கள் நீடிக்கும்; பல பகுதிகளில் 100 மில்லி மீற்றர் மழை

### இதுவரை மூவர் உயிரிழப்பு; 1,34,484 பேர் பாதிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டை அண்மித்த பகுதிகளில் வானிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால், நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்குத் தொடரும் என, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேல் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு 06

## இந்திய விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

### அவசரமாக தரையிறக்கப்பட்ட 'எயார் இந்தியா' விமானம்

எயார் இந்தியா விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து, விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இச்சம்பவம் மும்பையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மும்பை சத்ரபதி சிவாஜி மஹராஜ் சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று (14) அதிகாலை நியூயோர் நோக்கிப் புறப்பட்ட எயார் இந்தியா விமானத்துக்கே, இவ்வாறு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மிரட்டல் விடுக்கப்பட்டது. இதையடுத்து நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானம் டெல்லிக்குத் திருப்பப்பட்டு, அவசரமாக தரை இறக்கப்பட்டது.

குண்டு செயலிழப்பு நிபுணர்களால் விமானம் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதும், விமானத்தில் சந்தேகத்துக்கிடமான எந்தவித பொருட்களும் அடையாளம் 06

## பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு மூவருக்கு



2024ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுக்கு மூவரின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு நோபல் பரிசுகள் வழங்கப்படும். மருத்துவம், இயற்பியல், வேதியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

டெரன் அசோமோக்லு, சைமன் ஜோன்சன், ஜேம்ஸ் ஏ.ரொபின்சன் ஆகியோருக்கே பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டை வடிவமைப்பதில் அமைப்புகளின் பங்கு பற்றிய ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. பலவீனமான சட்டம் மற்றும் சுரண்டல் அதிகம் 06

போதைப்பொருள் ஒழிப்புக்காக

## சைக்கிளில் பயணம் செய்த காத்தான்குடி மாணவி

### பிரதமரிடம் மகஜர் கையளிப்பு



காத்தான்குடியிலிருந்து கொழும்புக்கு சைக்கிளில் பயணம் செய்த 14 வயது பாத்திமா நடா என்ற மாணவி நேற்று (14) பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தார்.

இளைஞர் சமூகத்தை பாதிப்புக்குள்ளாக்கியுள்ள போதைப்பொருள் நெருக்கடிக்கு எதிராகவும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறும் கோரி மாணவி மகஜரை கையளித்துள்ளார்.

## யாழ். தையிட்டியில் திறக்கவுள்ள புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்பு

### கடும் மழையிலும் ஆர்ப்பாட்டம்



**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தையிட்டியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு முன்பாக, வலிகாமம் வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில், இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடும் மழைக்கு மத்தியிலும் நேற்று சுலோக அட்டைகளை ஏந்தியவாறு, மக்கள் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்னரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.



03 தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கட்சி செயலாளர்களுடன் சந்திப்பு



03 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படாது புள்ளிகளே வழங்கப்படும்

10 பேர்ச் காணியை வழங்கினால்

## அரசுக்கு நாம் ஆதரவு வழங்கத் தயார்

### பழனி திகாம்பரம் பகிரங்கமாக அறிவிப்பு



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மலையக பெருந்தோட்ட மக்களுக்கு பத்து பேர்ச் காணியை வழங்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்க தயாரென, தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்டப்பகுயில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் (13) கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதைய நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வறுமை நிலையிலிருந்து வந்த ஒருவர். மலையக மக்களுக்கான வீட்டுரிமை, மலையக இளைஞர் யுவதிகள் தொழிலுக்கு அமர்த்தப்படுவது குறித்து எதிர்கட்சியிலிருந்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் அதிகமாக குரல் கொடுத்தவர். 06

## என்னை கட்சியை விட்டு வெளியேற்ற பலர் முயற்சி

### ஒரு போதும் வெளியேறமாட்டேன்



இலங்கை தமிழரசுக் கட்சியை விட்டு நான் வெளியேறி விடுவேன் எனப் பலரும்தெரிவிக்கின்றனர். ஆனால் ஒருபோதும் தமிழரசுக் கட்சியை விட்டு நான் வெளியேறமாட்டேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். என்னை வெளியேற்றுவதற்கும் பலர் முயற்சிக்கின்றனர். எனினும் இறுதிவரை போராடுவேனென்றும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக்கு இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கட்சியே இலங்கைத் தமிழரசு கட்சி.

அதனுடைய கொள்கை பிறழாது, அதனுடைய தாகம் தீராது, அதனுடைய அடிப்படை மாறாது எங்களுடைய கட்சி இப்போதும் நிலையான பயணத்தைச் செய்து வருகின்றது. தற்போது நாட்டிலேயே மாற்றம் பற்றி அதிகம் பேசப்பட்டு வருகின்றது. 06

# சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறும் நிலையில் கடும் தாக்குதல்

## கூடாரங்கள், பாடசாலை மீது குண்டு மழை



வடக்கு காசாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கைகள் தொடரும் நிலையில் மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனை வளாகத்தில் இடம்பெயர்ந்த மக்களின் கூடாரங்கள் மீது இஸ்ரேல் நேற்றுக்காலை நடத்திய வான் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டு குறைந்தது 70 பேர் காயமடைந்திருப்பதோடு பெரும்பாலானவர்கள் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலால் கூடாரங்கள் தீப்பற்றி பெரும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதோடு உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

'அனைத்து பக்கங்களிலும் கூடாரங்கள் தீப்பற்றி எரியும் நிலையிலேயே நாம் விழித்தோம். அல் அக்ஸா மருத்துவமனைக்குப் பின்னால் நாம் வசிப்பதோடு எமது கூடாரம் மற்றும் அதற்கு வெளியில் பயங்கர வெடிப்பு இடம்பெற்றது' என்று உயிர் தப்பிய அஹமது ரதி என்பவர் அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அல் அக்ஸா மருத்துவமனை மீது இந்த ஆண்டில் இஸ்ரேல் நடத்தும் ஏழாவது தாக்குதல் இதுவென்றும் கடந்த சில வாரங்களில் நடத்தப்படும் மூன்றாவது தாக்குதல் என்றும் இதனால் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்த பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் காசா மருத்துவ அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மருத்துவ வளாகத்தில் ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டு மற்றும் கட்டளை மையம் இருந்ததாக எந்த ஆதாரத்தையும் வெளிப்படுத்தாது குறிப்பிட்டு இத் தாக்குதலை இஸ்ரேல் நியாயப்படுத்தியுள்ளது.

முன்னதாக மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேலிய டாங்கிகள் கடந்த ஞாயிறன்று நடத்திய தாக்குதலில் குறைந்தது 22 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 15 சிறுவர்கள் மற்றும் பெண்கள் இருப்பதாக காசா அரசு குறிப்பிட்டது. இதில் மேலும் 80 பேர் காயமடைந்திருப்பதாகவும் அது கூறியது.

இத் தாக்குதலுக்கு சில மணி நேரத்திற்கு முன்னர் காசா நகரில் செட்டி அகதி முகாமில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஐந்து சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது இஸ்ரேலிய ஆளில்லா விமானம் ஒன்றில் இருந்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா மற்றும் ஹமாஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை வடக்கு காசாவில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக முற்றுகை மற்றும் தீவிர படை நடவடிக்கையில் இஸ்ரேலிய படையினர் ஈடுபட்டு வருவதோடு இஸ்ரேலிய டாங்கிகள் காசா நகரின் வடக்கு முனையை அடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஷெய்க் ரத்வான் பகுதியில் இடம்பெற்று வரும் கடும் தாக்குதல்களால் அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

'வடக்கு காசாவில் நடப்பது வார்த்தைகளால் கூற முடியாத பயங்கரமாக உள்ளது' என்று ஐ.நா. நிவாரண நிறுவனத்தின் பதில் தலைவர் எக்ஸ் சமூகதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'இஸ்ரேலியப் படையின் தாக்குதல்கள் தீவிரமாக உள்ளன. மருத்துவமனைகள் தமது நோயாளிகளை வெளியேற்றி வருகின்றன. அத்தியாவசிய பொருட்கள் தீர்ந்து வருகின்றன. மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, உதவி துண்டிக்கப்பட்டு, பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தக் கொடுமைகள் முடிவுக்கு வர வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா அறிக்கையைக் கொண்டு அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக வடக்கு காசா முழுவதும் உணவு இல்லை' என்று கூறியுள்ளார். 'தேவையானவர்களுக்கு உதவி செல்ல இஸ்ரேல் வசதி செய்ய வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 62 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 220 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் குறைந்தது 42,289 பேர் கொல்லப்பட்டு மேலும் 98,684 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஏவுகணை எதிர்ப்பு அமைப்புடன் அமெ. படை இஸ்ரேல் விரைவு



ஈரானின் ஏவுகணை தாக்குதலை அடுத்து இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பை பலப்படுத்தும் வகையில் மிக அரிதான நடவடிக்கையாக அமெரிக்காவின் மேம்பட்ட தாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புடன் அமெரிக்கத் துருப்புகளும் இஸ்ரேலுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி ஈரான் 180 இற்கும் அதிகமான ஏவுகணைகளை இஸ்ரேல் மீது வீசி எதிர்பாராத தாக்குதலை முன்னெடுத்தது. அதனையடுத்து 'இஸ்ரேலை காக்கும்' நடவடிக்கையாக இது உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான இஸ்ரேலின் பதில் தாக்குதலை பரந்த அளவில் போர் ஒன்றை தூண்டாத வகையில் செய்யும்படி அமெரிக்கா தனிப்பட்ட முறையில் வலியுறுத்தி வரும் நிலையில் ஈரானிய அணு நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதை எதிர்க்கும் பைடன் ஈரானின் எண்ணெய்த் தளங்கள் இலக்கு வைக்கப்படும் அச்சுறுத்தல் பற்றி கவலை வெளியிட்டுள்ளார்.

'ஈரான் மற்றும் ஆதரவுக் குழுக்களின் தாக்குதல்களில் இருந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக மற்றும் அமெரிக்கத் தரப்புகளை பாதுகாப்பதற்கு அண்மைய மாதங்களில் மேற்கொண்ட அமெரிக்க இராணுவத்தின் பரந்த அளவான மாற்றங்களின் ஓர் அங்கமாகவே இந்தப் படையினர் அனுப்பப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகனின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பட்ரிக் ரைடன் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக போர்ப் பயிற்சிகள் தவிர்த்து அமெரிக்க துருப்புகள் இஸ்ரேலில் நிலை நிறுத்தப்படுவது மிக அரிதான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

ஆனால், ஈரான் தாக்குதல் நடத்திய அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அது போர்க் கப்பல்களிலிருந்தும் போர் விமானங்களிலிருந்தும் இஸ்ரேலைத் தற்காக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது. அப்போதெல்லாம் அவை இஸ்ரேலுக்கு அப்பாலில் இருந்து செயல்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 4 படையினர் கொல்லப்பட்ட பின்னரும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா தாக்குதல்



இஸ்ரேலியப் படையினர் நால்வர் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பின் விமானத் தாக்குதலை அடுத்து நேற்று (14) இஸ்ரேலிய கடற்படை தளம் ஒன்றை இலக்கு வைத்து அந்த அமைப்பு மீண்டும் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.

கொல்லப்பட்ட தலைவர் ஹசன் நஸ்ரல்லாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடக்கு இஸ்ரேலின் ஹைபா நகருக்கு அருகில் உள்ள கடற்படை தளம் ஒன்றின் மீது போராளிகள் ரொக்கெட் குண்டுகளை வீசியதாக ஹிஸ்புல்லா அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹைபாவுக்கு அருகில் இருக்கும் பின்யமீனா பயிற்சி முகாம் ஒன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலை இடைமறித்ததாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது. முன்னதாக இங்கு கடந்த ஞாயிறன்று (13) ஹிஸ்புல்லா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் நான்கு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டு 60 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்நிலையில் பின்யாமினாவில் உள்ள பயிற்சி முகாம் ஒன்றுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இஸ்ரேலிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்சி ஹலெவி கூறியதாவது, 'நாம் போர் ஒன்றில் இருப்பதோடு நாட்டுக்குள் இருக்கும் பயிற்சித் தளத்தின் மீதான தாக்குதல் கடினமானது. அதன் விளைவு வருத்தம் அளிப்பதாக உள்ளது' என்றுள்ளார்.

கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் வெடித்திருப்பதோடு இஸ்ரேலிய தரைப்படை எல்லை கடந்து ஹிஸ்புல்லா போராளிகளுடன் சண்டையிட்டு வருகிறது.

இந்நிலையில் லெபனானில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தால் இஸ்ரேல் மீது இன்னும் தாக்குதல்களை நடத்துவது குறித்து ஹிஸ்புல்லா எச்சரித்துள்ளது. 'அதன் தாக்குதல்களைத் தொடர தீர்மானித்தால், அது எதிர்கொள்ள வேண்டியதை ஒப்பிடுவதற்கு முடியததாக இருக்கும்' என்று ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளது.

லெபனானில் ஹிஸ்புல்லா பலம் கொண்டுள்ள பகுதிகளில் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வரும் இஸ்ரேல் லெபனானின் தெற்கு எல்லையில் இஸ்ரேலியத் தரைப்படை கடும் மோதலில் ஈடுபட்டு வருகிறது.

எல்லை கிராமங்களில் இஸ்ரேல் கடும் வான் தாக்குதல்களை நடத்தி வருவதாக லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் கடந்த ஞாயிறன்று 51 பேர் கொல்லப்பட்டு மேலும் 174 பேர் காயமடைந்ததாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் 1978 ஆக்கிரமிப்பு தொடக்கம் லெபானின் நிலைகொண்டிருக்கும் ஐ.நா அமைதிகாக்கும் படை தற்போதைய போரில் அடிக்கடி இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலக்காகி வரும் நிலையில் அது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த அமைதி காக்கும் படையினரை தமது நிலையில் இருந்து வெளியேறும்படி இஸ்ரேல் தொடர்ந்து கூறி வருகிறது. தெற்கு லெபனானில் உள்ள ஐ.நா. அமைதிகாக்கும் படைத் தளம் ஒன்றியின் வாயிலை இஸ்ரேலிய துருப்புகள் உடைத்து ஊடுருவியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு ஞாயிற்றுக்கிழமை குற்றம்சாட்டியது.

# எங்கள் மக்களை பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்வோம்

## ஈரான் வெளிவிவகார அமைச்சர்



தங்களையும் தங்கள் மக்களையும் பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்வோம் என்றும் இதில் சிகப்பு கோடு எதனையும் பின்பற்றப் போவதில்லை என்றும் ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், தங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடுவோருக்கு கடும் பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஈரான், இஸ்ரேல் மீது கடந்த முதலாம் திகதி பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியது. அதற்கு ஈரான் மீது பதில் தாக்குதல் நடாத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது. இந்நிலையில் தான் ஈரான் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில், 'இதுவரை இல்லாத அளவுக்கு இஸ்ரேலுக்கு மிகப் பெரியளவில் ஆயுதங்களை வழங்கி அமெரிக்கா உதவி வருகிறது. எங்கள் பிராந்தியத்தில் போர் ஏற்படாமல் இருக்க நாங்கள் பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஆனால், எங்கள் மக்களை பாதுகாப்பதில் எங்களுக்கு எந்த சிகப்பு கோடும் கிடையாது. எந்த எல்லைக்கும் செல்வோம்.

நாங்கள் போரை விரும்பவில்லை. அதேநேரம் முழு வீச்சில் போர் தொடங்கினால் அதை எதிர்கொள்ளவும் தயாராகவே இருக்கிறோம்" என்றும் உறுதிபடக்கூறியுள்ளார்.

# அமெரிக்கர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை



பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் சீனாவில் தடுத்து வைக்கப்பட்டும், சிறைத் தண்டனை பெற்றும் உள்ள அமெரிக்கர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் சீன ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ஜோ பைடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளதைத் தொடர்ந்து இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இரு தசாப்தங்களாக சீனாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதகர் ஒருவரும் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளார். .

இவ்வாறான சூழலில் அமெரிக்க பாராளுமன்றப் பிரதிநிதிகளான கிறிஸ் ஸ்மித்தும், சென். ஜெஃப் மெர்க்லியும் ஜனாதிபதி பைடனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'தங்கள் பதவிக்காலம் முடிவதற்குள் சீனாவில் தடுப்பு காவலில் உள்ள அமெரிக்கர்களை விடுவிக்க முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதே கோரிக்கையை மனித உரிமைகள் அமைப்புக்களும் முன்வைத்துள்ளன.

# ட்ரோனை பறக்கவிட்டதாக வட கொரியா குற்றச்சாட்டு



தங்கள் வான்பரப்பில் தென்கொரியா ட்ரோன்களைப் பறக்கவிட்டதாக வட கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு பதிலடி கொடுக்கத் தயார் நிலையில் இருப்பதாக வட கொரியா கூறியுள்ள நிலையில் கொரியத் தீபகற்பத்தில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவிவரும் சூழலில் தென்கொரியா தங்கள் நாட்டின் மீது சட்ட விரோதமாக ட்ரோன்களை பறக்கவிட்டதாக வட கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில் தெற்கு எல்லையின் முக்கிய இடங்களில் உள்ள இராணுவம் ஒருங்கிணைந்து தாக்குதல் நடாத்தத் தயார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எல்லையில் ஏதாவது எதிர்பாராத மாற்றம் நடந்தால் உடனடியாக துப்பாக்கிச் சூடு நடத்தவும் ஆயத்த நிலையில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடகொரிய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தலைநகரமான பியாங்யாங்கிற்குள் ட்ரோன்கள் ஊடுருவி எங்கள் இறையாண்மையை மீறியுள்ளது. இதனால் தான் கொரியத் தீபகற்பத்தில் இராணுவ பதற்றம் அதிகரித்துள்ளது' என்றுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
ளுஹர் - 11.58
அஸர் - 03.16
மஃரிப் - 05.56
இஷா - 07.06

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 29
ராகுகாலம் : காலை : 7.32 - 9.02வரை
சுபநேரம் : பகல் : 12.02 - 1.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# இலஞ்சம், ஊழலுக்கு சிறிதளவு இடமும் வழங்க மாட்டோம்

## விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பம்

நாம் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கேற்ப இலஞ்சம், ஊழலுக்கு சிறிதளவும் இடம் வழங்கப்படாது. இலஞ்சம், ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, ஏற்கனவே ஊழல் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பை தளமாக கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில், உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

இவ்விடயங்கள் குறித்து அரசாங்கம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



நெறிமுறையான நிர்வாகம்,ஊழலை ஒழித்தல், அரச சேவையில் வினைத்திறன், சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாசாரத்தை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார். பொருளாதார வெற்றியுடன், இந்த முக்கியமான தூண்கள் இணைந்திருக்க வேண்டுமென நாங்கள் கருதுகிறோம். நாங்கள் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கு ஏற்ப, இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள இடமளிக்கப்படாது என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியம் வழங்கும் பணி

## அம்பாறையில் நேற்று ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பெரும்போக நெற் பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உர மானிய விநியோக செயற்பாடுகள், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி அதிகரிக்கப்பட்ட உர மானியமாக முதற்கட்டத்தில் 15,000 ரூபாவும் இரண்டாம் கட்டமாக 10,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில், உர மானியம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதையடுத்து பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் மகாவலி வலயங்கள் உள்ளிட்ட பகுதி விவசாயிகளுக்கு இந்த மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியம் வழங்கும் செயற்திட்டம் தொடர்பில், கடந்த வாரம் அமைச்சரவையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெரும் போக நெற் பயிர் செய்கை ஆரம்பமாகவுள்ள நிலையில், விரைவாக இந்த உர மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதானி குழும காற்றாலை மின் திட்டம் மீள் பரிசீலனைக்கு

## சட்டமாஅதிபர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் அதானி நிறுவனம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை, மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக உயர் நீதிமன்றத்துக்கு சட்ட மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

விடத்தல்தீவில் காற்றாலை மின் நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பாகவுள்ள அரசுக்கும் இந்திய அதானி நிறுவனத்துக்குமிடையிலான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சட்ட மாஅதிபர் நீதிமன்றத்தில் இதை,அறிவித்தார்.

சட்ட மாஅதிபரின் சார்பில் நேற்று நீதிமன்றத்தில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா அதனைத் தெரிவித்துள்ளார்.

மனுக்கள் மீதான விசாரணை நேற்று எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனுக்கள் வனவிலங்கு மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம், சுற்றுச்சூழல் நீதி மையம் உள்ளிட்ட தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.



நேற்றைய தினம் விசாரணையில் போது, அமைச்சரவையின் செயலாளர் மற்றும் எரிசக்தி அமைச்சர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, இந்த உத்தேச காற்றாலை மின் திட்டத்தை, மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, இலங்கை அரசுக்கும் அதானி நிறுவனத்துக்கும் இடையேயான ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் மற்றும் மனுக்களின் உள்ளடக்கத்தை கருத்திற்கொண்டு, உரிய திட்டம் தொடர்பில் மறுபரிசீலனை செய்து, அதன் பின் முடிவு மேற்கொள்ளப்படும் என, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார். தற்போதைய இடைக்கால அமைச்சரவையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் அமையவுள்ள புதிய அமைச்சரவையில் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை அறிவிப்பதற்காக திகதியை வழங்குமாறும் நீதிமன்றத்தை கோரியுள்ளார். அதுவரை திட்டத்தின் தற்போதைய நிலை அவ்வாறே தொடரும் என்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இந்த விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்த மனுதாரர்களின் சட்டத்தரணிகள், அந்தந்த மனுக்களில் பிரதிவாதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், உத்தேச அமைச்சரவை உறுப்பினர்களை பிரதிவாதிகளாக நியமித்து மனுவில் திருத்தம் செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

# அரியநேத்திரன் உட்பட மூவர் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அரியநேத்திரன் பாக்கிய செல்வம் உட்பட 3 வேட்பாளர்கள் இதுவரை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகளை இதுவரை சமர்ப்பிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகளை சமர்ப்பித்துள்ள ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தொடர்பான அறிவிப்பை, நேற்றைய தினம் தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிட்டுள்ளது. இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்கள் தமது வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பத்தரமுல்லை சீலரத்ன தேரர், சரத் கீர்த்திரத்ன மற்றும் அரிய நேத்திரன் பாக்கிய செல்வம் ஆகிய மூன்று வேட்பாளர்களும் இதுவரை தமது வருமானம் மற்றும் செலவுகளை சமர்ப்பிக்கவில்லை என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலை; கொழும்பில் இன்றும் பாடசாலைகளுக்கு பூட்டு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையை கருத்திற் கொண்டு, கொழும்பு கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் இன்றைய தினம் மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அதே வேளை, நாட்டின் ஏனைய பகுதி பாடசாலைகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாகாண பிரதம செயலாளர்,மாகாண கல்விச் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு கல்வியமைச்சு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

06

# ஜனநாயக தேசிய கூட்டணியின் 03 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

## பிரபா கணேசன் கவலை



பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட ஜனநாயக தேசிய கூட்டணியின் மூன்று வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.22 மாவட்டங்களில் இக்கட்சி வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்ததாக, கூட்டணியின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எனது தலைமையில் 22 மாவட்டங்களிலும் தனித்துவமாக எமது கட்சி களமிறங்கியுள்ளது. மட்டக்களப்பு, வன்னி, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், அனைத்து மாவட்டங்களிலும் நாங்கள் போட்டியிடுகிறோம். நிச்சயமாக, பாரிய வெற்றியை எதிர்பார்க்கிறோம்.

நேர்மையாக செயற்படும் இந்த அரசாங்கத்துடன் இணைந்து, எதிர்வரும் காலங்களில் செயற்படுவோம்.

# எல்பிட்டிய உள்ளூராட்சி தேர்தல் தபால் மூல வாக்களிப்பு நேற்று

## 18 ஆம் திகதியும் வாய்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

எல்பிட்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று இடம் பெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

நேற்றைய தினத்தில் தபால் மூலம் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் எதிர்வரும் (18) வாக்குகளை அளிக்க முடியும் என்றும் அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. எல்பிட்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 10 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 02 சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தின. இருந்தபோதும் அவற்றில், அங்கீகரிக்கப்பட்ட 08 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் மாத்திரமே தமது வேட்புமனுக்களை சமர்ப்பித்திருந்தன என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்தது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# மீண்டும் நடத்தப்படாது புள்ளிகளே வழங்கப்படும்

## அமித் ஜயசுந்தர



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லையென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று (14) தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய 03 கேள்விகளுக்கு புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை இவ்வருடம் மீண்டும் நடத்தப்படுமா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்காக 07 பேர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் திலக்கா ஜயசுந்தர தெரிவித்தார்.

06

# தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கட்சி செயலாளர்களுடன் சந்திப்பு




பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குமிடையிலான கலந்துரையாடல் இன்று (15) நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பு, ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணையகத்தில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் அரசியல் கட்சி செயலாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

இதன்போது, தேர்தல் காலத்தில் ஒரு வேட்பாளருக்கு செலவிடப்படும் குறைந்தபட்ச தொகையும் இன்று தீர்மானிக்கப்படவுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தவிர பாராளுமன்றத் தேர்தலின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளது.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



இறலீனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு

விளைவுகளைப் பற்றி நினைக்காமல் பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பினால் அழிவும், அத்தகைய விருப்பம் கொள்ளாதிருந்தால் வாழ்க்கையில் வெற்றியும் கிட்டும்.

## விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கும் நடவடிக்கை அவசியம்

எமது நாடு பண்டைய காலத்தில் விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக இருந்தது. அன்றைய மன்னர்கள் விவசாயத்துக்கு முன்னுரிமையும் உதவிகளும் வழங்கினர். நாடெங்கும் நீர்ப்பாசனக் குளங்களை அன்றைய மன்னர்கள் அமைத்தனர். அன்றைய காலத்தில் அரசர்களால் நிர்மாணிக்கப்பட்ட குளங்களின் மூலமே இன்றும் விவசாயிகள் நீர்ப்பாசனத்தைப் பெற்று வருகின்றனர். விவசாயத்துக்கு மாத்திரமன்றி, குடிநீர் விநியோகத்துக்கும் அக்குளங்களையே மக்கள் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

அன்றைய காலத்தில் சமூகத்தில் மிகவும் உயர்ந்த தொழிலாக நெற்செய்கையே போற்றப்பட்டது. மக்களுக்கு உணவளிக்கும் விவசாயிகள் சமூகத்தில் கௌரவத்துக்கு உரியவர்களாக மதிக்கப்பட்டனர். அக்காலத்தில் இளம்பெண்களுக்கு மணமகன் தேடுகின்ற போது, நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளையே பெற்றோர் பெரிதும் விரும்பினர்.

நெற்செய்கைக்கு ஏற்றதான விளைநிலங்கள் அதிகம் இருந்தன. நீர்ப்பாசனத்துக்கென குளங்களும் அதிகம் இருந்தன. அக்குளங்கள் பராமரிக்கப்பட்டும் வந்தன. அக்காலத்தில் விவசாயத்துக்கென நீர்ப்பற்றாக்குறை இருந்ததில்லை. விவசாயிகளும் செல்வந்தர்களாகவே வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறான விவசாயப் பொருளாதாரம் 1977 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை உச்சத்தில் நிலவி வந்தது. அரசாங்க உத்தியோகத்துக்கு நிகரானதாக விவசாயமும் கருதப்பட்ட காலப்பகுதி அதுவாகும்.

1977 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னரான பொருளாதாரக் கொள்கைகளால் எமது நாட்டின் விவசாயம் படிப்படியாக வீழ்ச்சி நிலைமைக்குச் சென்றது. திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதன் பேரில் வெளிநாடுகளில் இருந்து அரிசியையும் இறக்குமதி செய்கின்ற நிலைமைக்கு இலங்கை உள்ளானது.

பண்டைய அரசர்கள் காலத்தில் இலங்கையில் இருந்து தென்னிந்தியாவுக்கு அரிசி நிவாரணம் அனுப்பப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இலங்கை மன்னனுக்கும் தென்னிந்திய மன்னனுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு நிலவிய காலகட்டத்தில் அவ்வாறான சம்பவமொன்று நிகழ்ந்ததாக வரலாற்றுத் தகவலொன்று கூறுகின்றது.

தென்னிந்திய மன்னன் ஒருவனின் நாட்டில் கடுமையான பஞ்சம் நிலவிய வேளையில், இலங்கை மன்னன் ஒருவன் பெருந்தொகை அரிசியை அம்மன்னனுக்கு நிவாரணமாக அனுப்பியதாக அந்தத் தகவல் கூறுகின்றது.

இந்தத் தகவலுக்குப் பின்னால் மற்றொரு செய்தியும் உள்ளதை இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. தென்னிந்திய மன்னனுக்கு பெருந்தொகை அரிசியை நிவாரணமாக அனுப்பி வைக்கும் அளவுக்கு, இலங்கையில் அரிசியில் தன்னிறைவு நிலவியுள்ளதென்பதே அத்தகவல் ஆகும்.

இன்றைய நிலைமை அவ்வாறானதாக இல்லை. திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் அரிசியும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது ஒருபுறமிருக்க, விவசாயத் தொழில் என்பது படிப்படியாக புறக்கணிப்புக்கு உள்ளாகத் தொடங்கியது. வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகையில், உள்ளூர் அரிசி உற்பத்தி மீதான அக்கறை படிப்படியாகக் குறையத் தொடங்கியது.

அக்கால விவசாயிகளின் அடுத்தடுத்த தலைமுறையினர் நெற்செய்கையை முற்றாகவே கைவிடும் நிலைமை உருவானது. விவசாயம் என்பது அகௌரவத்துக்குரிய தொழிலென்று இளைஞர்கள் கருதும் நிலைமை ஏற்பட்டது. அன்றைய அரசாங்கங்கள் விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்காமல் விட்டதனால், இளைஞர்களும் விவசாயம் மீது வெறுப்புக் கொள்ளத் தொடங்கினர்.

அரசாங்கத் தொழில் மீதான மோகம் அதிகரித்தது. விவசாயம் என்பது கடினமான தொழிலென்ற அபிப்பிராயம் சமூகத்தில் உருவாகியது. இலகுவான தொழில் புரிந்து வாழ்வதே மேலானதென்ற எண்ணம் இளவயதினர் மத்தியில் உருவாகத் தொடங்கியது.

இது ஒருபுறமிருக்க, நெற்செய்கை நிலங்கள் படிப்படியாக கபளீகரம் செய்யப்பட்டு குடிமனைப் பிரதேசங்களாக மாறத் தொடங்கின. நெற்செய்கை மீதான அக்கறை பெருமளவு இல்லாமலேயே போய் விட்டது. விவசாய நிலங்கள் வெறும் தரிசு நிலங்களாக மாறிப் போய் விட்டன.

விவசாயத்தின் மீதான புறக்கணிப்பு ஒருபுறமிருக்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உரப்பாவனை நிறுத்தப்பட்டமை விவசாயத்தின் மீது மற்றொரு சிக்கலை ஏற்படுத்தியது. அதன் காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், உணவுப் பற்றாக்குறையும் உருவானது. விவசாயத்தை உதாசீனம் செய்த நாடாக இலங்கை மாறிப் போனது.

இத்தகைய நிலைமை இனிமேலும் தொடர்வதற்கு இடமளிக்கலாகாது. மனித இனம் நிலைத்திருப்பதற்கு உணவு உற்பத்தியே அத்தியாவசியமானதாகும். புறக்கணிக்கப்பட்ட விவசாயத்தை மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவது அவசியமாகும்.

விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது தேர்தல் பிரசாரங்களின் போது கூறியிருந்தார். அதன்படி விவசாயத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயம் மீது இளவயதினருக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வுகளும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# வலுவான எதிர்க்கட்சியொன்று தேவைப்படுகின்ற தருணம் இது!

**'இலங்கை வரலாற்றில் ஒரு வலுவான எதிர்க்கட்சி தேவைப்படும் தருணம் இதுவாகும்' என்று மவ்பிம மக்கள் கட்சியின் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். எமக்கு வழங்கிய பேட்டியிலேயே ரொஷான் ரணசிங்க இவ்வாறு தெரவித்தார்.**



**மவ்பிம மக்கள் கட்சியின் தவிசாளரான முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறுகிறார்**

**கேள்வி: ஜனாதிபதி வேட்பாளரான பிறகு மிகக்குறுகிய காலத்தில் ஏன் கட்சி மாறினீர்கள்?**

கட்சி மாறுவதை விட எங்களின் கொள்கைதான் முக்கியம். நாங்கள் மத்திய இடதுசாரி முகாமில் இருக்கிறோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் தேசியம், பூர்வீகம், மதம் ஆகியவற்றுடன் தொடர்புடைய மத்திய இடதுசாரிகளின் கௌரவத்தை களங்கப்படுத்தியதன் விளைவுதான் வாக்காளர் தீவிர இடதுசாரி முகாமை நோக்கிச் சென்றமை ஆகும். மத்திய இடதுசாரி அதன் இடத்திற்குத் தகுதியானது. அதற்கான தெளிவான திட்டத்தை உருவாக்கவே திலித் ஜயவீரவுடன் இணைந்தோம். அங்குதான் இந்த நாட்டுக்குப் பொருத்தமான தெளிவான பாதை உள்ளது.

**கேள்வி: இன்று நாட்டுக்கு ஒரு மத்திய இடதுசாரி முகாம் தேவை என்று சொல்கிறீர்களா?**

பதில்: கண்டிப்பாக, இந்த நாட்டில் 60 வீதம் மத்திய இடதுசாரிகள். 40 ஆண்டுகளாக வலதுசாரி முகாமுக்கு நாட்டில் அதிகாரம் வழங்கப்படவில்லை. தீவிரவாத, இடதுசாரி முகாம் அரசியலமைப்பின் காரணமாக ஜனாதிபதி ஆனாலும் 50.1 வீதம் வாக்குகள் இல்லை. இந்த நாட்டின் அரசாங்கம் மத்திய இடதுசாரி தலைவர்களிடம் சென்றது.

**கேள்வி: இந்த முகாமின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நிவாரணங்கள் எவை?**

பதில்: நாட்டு மக்களுக்கு அரசாங்கம் தாயாகவும் தந்தையாகவும் இருக்க வேண்டும். இளம் தலைமுறைக்குத் தேவையான தொழில்முனைவோரை உருவாக்கி வருகிறோம். இன்று நம் நாட்டில் ஒரு புதிய தொழில்முனைவோரை ஆதரிக்க எந்த நிறுவனமும் நிதியுதவியும் இல்லை. அரசாங்கம் வேலை வழங்கி பெரும் பொறுப்பை ஒப்படைக்கிறது. நம் நாட்டில் அபிவிருத்தி வங்கிகள் என்று எதுவும் இல்லை. வங்கியின் அதிகப்படியான இலாபம் யாருக்கு வழங்கப்படும்? பெரிய அளவிலான தொழில்முனைவோருக்கு குறைந்த வட்டி வீதத்தில் இலாபம் குறைவாக வழங்கப்படுகிறது. புதிய தொழில்முனைவோரை ஊக்குவிக்கவே அதனை வழங்க வேண்டும். ஊழலை ஒழிக்க அனைவருக்கும் குறியீட்டு எண் வழங்க வேண்டும். அனைவருக்கும் ஒரே மாதிரியான காப்புறுதி மற்றும் ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

**கேள்வி: இந்தக் கருத்தியலை முன்னெடுத்துச் செல்ல நினைத் நீங்கள், ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியில் இருந்து பிரிந்து ஏன் போட்டியிட்டீர்கள்?**

பதில்: இந்த நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்க நான் தயாராக இருந்ததால் உண்மையாகவே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். எனக்கு ஒரு இலக்கு இருந்தது. நான் அமைச்சரவையில் இருந்தபோது நடந்த ஊழல், முறைகேடுகளைப் பார்த்தேன். கொள்முதல் செயல்முறை இல்லாமல் எப்படி எண்ணெய் ஊழல், எரிவாயு ஊழல் நடந்தது என்பதைப் பார்த்தேன். இதையெல்லாம் பார்த்துத்தான் கிரிக்கெட்டிலிருந்தும் வெளியே வந்தேன். சில குறைபாடுகள் இருந்தபோதிலும், அப்போது இருந்த அரசாங்கத்தை அகற்றுவதில் ஜனதா விமுக்தி பெரமுன பெரும் பங்கு வகித்தது. ஆனால் எந்தத் திட்டத்தையும் கொண்டுவரவில்லை. இந்த நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் முன்வந்து ரணிலை வீட்டுக்கு அனுப்பினேன். சம்பாதித்து ஒரு குடும்பத்தை ஆதரிக்கும் ஒருவனே இந்த நாட்டின் ஆட்சியை ஏற்க வேண்டும்.

**கேள்வி: வலுவான எதிர்க்கட்சியை உருவாக்குவதே நீங்கள் உள்ளிட்ட உங்கள் குழுவினரின் தேவையா?**

பதில்: வெளிப்படையாகவே, இலங்கை வரலாற்றில் ஒரு வலுவான எதிர்க்கட்சி தேவைப்படும் தருணம் இதுவாகும். 'இணைந்த இடத்தில் வெற்றி, பிரிந்த இடத்தில் தோல்வி' என்ற கூற்று முக்கியமானது. நாடு பிரிவினைவாத நிலைக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. இனவாதம் வெளிப்படுகிறது. எனவே, அரசியலமைப்புச் சட்டத்தை சீர்குலைக்கக் கூடாது.

**கேள்வி: ஆட்சிக்கு வந்தால் திருடர்களைப் பிடிப்போம், வரியைக் குறைப்போம் என்று தேசிய மக்கள் சக்தி கூறியது. அவர்களின் ஆட்சியை இப்போது எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பதில்: ஆட்சிக்கு வந்தால் உழைக்கும் போதே அறவிடும் வரியை குறைப்போம் என்றார்கள். வற் வரி குறைக்கப்படும், 200 ரூபாவுக்கு எண்ணெய் தரலாம் என்றார்கள். IMF திருத்தம் குறித்து தொடர்ந்து ஆலோசித்து வருவதாக அவர்கள் கூறினார்கள். ஆனால் IMF பல பெரிய ஆவணங்களைக் கொண்டு வந்தாலும், ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் அதிகாரிகள் ஒரு ஆவணத்தைக் கூட கொண்டுவரவில்லை. மேடையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினார்களா? ஒரு முறையான வேலைத்திட்டமே தேவை. ஊடகக் கண்காட்சிகள் அல்ல.

சுபாஷினி ஜயரத்ன
(தமிழில்: வயலட்)

# அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் தேசியப் பட்டியல் ஆசனம்!

**த.ம.வி.பு அம்பாறை மாவட்ட வேட்பாளர் விஸ்கரன் தெரிவிப்பு; 'வெள்ளை வேட்டி, வெள்ளை ஷேர்ட் அணிந்து தேசியம் பேசி வருவார்கள். மக்கள் ஏமாந்துவிடக் கூடாது'**



த.ம.வி.பு அம்பாறை மாவட்ட வேட்பாளர் விஸ்கரன் தெரிவிப்பு; 'வெள்ளை வேட்டி, வெள்ளை ஷேர்ட் அணிந்து தேசியம் பேசி வருவார்கள். மக்கள் ஏமாந்துவிடக் கூடாது'

அம்பாறை மாவட்டத்தில் எங்களால் வெற்றி பெற முடியாமல் போய்விட்டால், எமது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தேசியப் பட்டியல் ஆசனம் அம்பாறை மாவட்டத்திற்கு நிச்சயம் வழங்கப்படுமென்று எமது கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உறுதியாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் அற்புதலிங்கம் விஸ்கரன் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பு காரைதீவு பிரதான வீதியிலுள்ள அம்பாறை மாவட்ட ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வேட்பாளர் அற்புதலிங்கம் விஸ்கரன் மேலும் தெரிவித்ததாவது:

"நான் முதன் முதலாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் காரைதீவிலிருந்து போட்டியிடுகின்றேன். எமது கட்சியின் தலைவர் பிள்ளையான் மட்டக்களப்பில் மேற்கொண்ட அபிவிருத்திகள் பற்றி அனைவரும் அறிவார்கள். அதேபோல் அம்பாறை மாவட்டத்திலும் அதனை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் நம்புகின்றோம். அதற்காகவே வெற்றி பெறும் அணியில் இறங்கி இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் எம் மத்தியில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். யாருமே எதுவும் செய்யவில்லை. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இன்னும் ஒரு கணக்காளரைக் கூட நியமிக்க அவர்களால் முடியவில்லை. திருக்கோவில் இல்மனைற் அகழ்வு மற்றும் வீரமுனை வரவேற்பு வளையி என்று பட்டியல் தொடர்கிறது.

இம்முறையும் வெள்ளை வேட்டி, வெள்ளை ஷேர்ட் அணிந்து கொண்டு தேசியம் பேசி மக்களை ஏமாற்றுவதற்கு வருவார்கள். தேசியம் என்பதே கிடையாது. அது ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. ஏமாற வேண்டாம் மக்களே! அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. பிரிந்து சின்னாபின்னமாகி உள்ளனர். ஆளுக்கொரு சின்னம் வைத்துள்ளனர். நான் ஒரு விளையாட்டு வீரன். வெற்றி பெறுவோம் என்று ஆடுகளத்தில் இறங்குவோம் .நாங்கள் வெற்றி பெற்று வருகின்ற அரசாங்கத்தில் இணைந்து அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்க இருக்கின்றோம்.

சிலவேளை எமது கட்சி அம்பாறை மாவட்டத்தில் வெற்றி பெறாவிட்டால் எமக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்துக்குத் தருவதாக எமது தலைவர் வாக்குறுதி அளித்து இருக்கின்றார். இப்படி யாரும் இதுவரை வாக்குறுதி அளிக்கவில்லை .

கடந்த முறை இங்கே ஆசனம் பறிபோகும் என்பதற்காகவே நாங்கள் போட்டியிடவில்லை. ஆனால் இம்முறை நிச்சயம் ஆசனம் கிடைக்கும் என்பதால் இம்முறை முதன்முதலாக களம் இறங்கி இருக்கின்றோம். மக்கள் இதனை நன்கு உணர்ந்து கொண்டு, அதற்கு ஏற்றவாறு வாக்களிக்க வேண்டும்".

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் அற்புதலிங்கம் விஸ்கரன் தெரிவித்தார்.

காரைதீவு குறூப் நிருபர்

# சல்மான் கான் உட்பட பிரபலங்கள் ஆறு பேரின் உயிரைக் குறிவைக்கும் சர்வதேச கொலைக்குழு!



இந்தியாவின் மகாராஷ்டிராவைச் சேர்ந்த அரசியல்வாதி பாபா சித்திக்கை கடந்த சனிக்கிழமை லோரன்ஸ் பிஷ்னோய் குழு சுட்டுக் கொன்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குஜராத்தில் உள்ள சிறையில் இருந்தாலும் கூட லோரன்ஸ், வெளியே இருக்கும் தனது சகாவான கோல்டி ப்ரர் என்பவருடன் இணைந்து குற்றச் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இதுவரை இந்த லோரன்ஸ் பிஷ்னோய் குழுவினர் 6 பிரபலங்களுக்கு குறி வைத்துள்ளனர்.

இந்தியா மட்டுமின்றி கனடாவிலும் கூட இந்தக் குழு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது.

சல்மான் கான் அல்லது தாவூத் குழுவுக்கு உதவுவோர் கொல்லப்படுவார்கள் என்று அந்தக் குழு கூறியுள்ளது. இந்தளவுக்கு வெளிப்படையாக அவர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

பிஷ்னோய் குழு கடந்த 1998 ஆம் ஆண்டு முதலே சல்மான் கானை குறி வைத்து வருகிறது. அந்தச் சமயத்தில் அவர் அரியவகை கலைமானை வேட்டையாடியிருந்தார். கலைமானை பிஷ்னோய் மக்கள் கடவுளாக வழிபடுவார்கள். இதன் காரணமாகவே சல்மான் கானை பிஷ்னோய் குழு குறிவைத்து வருகிறது. முன்னதாக சல்மான் கானை கொலை செய்யும் நோக்கில் கடந்த ஜூலை மாதம் அவரது வீட்டில் இந்தக் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தது.

அதேபோல பிரபல பஞ்சாபி பாடகர் சித்து மூஸ் வாலாவை கடந்த 2022 மே மாதம் பட்டப்பகலில் பிஷ்னோய் குழு சுட்டுக் கொன்றது.

பாபா சித்திக் போலவே சல்மான் கானுடன் நல்லுறவைக் கொண்டிருந்த பஞ்சாபி பாடகர் ஜிப்பி கிரேவால் மீதும் துப்பாக்கிச் சூடு நடந்தது. கடந்த 2023 நவம்பர் மாதம், கனடாவின் வான்கூவரில் உள்ள கிரேவால் வீட்டில் பிஷ்னோய் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியது.

அடுத்து மற்றொரு பஞ்சாபி பாடகர் ஏபி தில்லான் என்பவரும் சல்மான் கான் உடனான தொடர்பாக குறி வைக்கப்பட்டவர். இவர் சல்மான் கானுடன் இணைந்து ஒரு பாடலை உருவாக்கியதால் பிஷ்னோய் கேங் இவரைக் கொல்ல முயன்றது.

அதைத் தொடர்ந்து பிஷ்னோய் குழு இவருக்குப் பகிரங்க மிரட்டலையும் விடுத்தது. கடந்த 2023 டிசம்பர் மாதம் சுக்தேவ் சிங் கோகமேடி என்ற முக்கிய இந்துத் தலைவரை இந்த பிஷ்னோய் குழு கொன்றது.

கடந்த சனிக்கிழமை மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் அமைச்சர் பாபா சித்திக் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு லோரன்ஸ் பிஷ்னோய் குழு பொறு ப்பேற்றது. அவரது குழு இந்தியாவில் 11 மாநிலங்களில் சுமார் 700 துப்பாக்கி பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு இயங்குவதாக என்.ஐ.ஏ தெரிவித்துள்ளது. சிறிய அளவில் தொடங்கி அவரது குழு மிகப்பெரிய அளவில் விரிவடைந்துள்ளது.

அதன் மூலம் அவர் வட இந்தியாவில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறார். அவரது குழுவை சத்விந்தர் சிங் என்கிற கோல்டி பிரார் இயக்கி வருகிறார். அவர் கனடா மற்றும் இந்திய அளவில் தேடப்படும் குற்றவாளி. பிஷ்னோய் குழுவில் உள்ள 700 பேரில் 300 பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.



"பாவிகள் மனந்திரும்ப செப, தவ முயற்சிகளை மேற்கொள்ளவும்"

# புனித பாத்திமா அன்னை திருவிழா

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தாயும் திருச்சபையின் தாயுமான அன்னை கன்னி மரியாள் உலகெங்கும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறார். அவ்வாறான பெயர்களில் உலகம் முழுவதும் அவருக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டு திருநாட்களில் திருவிழாக்கள் மற்றும் வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மாதாவுக்கு புனித பாத்திமா அன்னை என்ற பெயர், போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகரில் 1917 மே 13 முதல் 1917 அக்டோபர் 13 வரை லூஸியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று சிறாருக்கு அன்னை மரியாள் அளித்த காட்சியின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற பெயராகும்.

இந்த உலகின் பல்வேறு இடங்களில் மரியன்னை அளித்த காட்சிகளில் சிறப்பு வாய்ந்ததாக பாத்திமா நகர் காட்சி விளங்குகிறது.

இரண்டாம் உலகப் போர், ரஷ்யாவின் மனமாற்றம் ஆகியவை பற்றி பாத்திமா அன்னை வழங்கிய முன்னறிவிப்புகள் அப்படியே பலித்ததால்,




பாத்திமா அன்னையின் காட்சி மிகவும் பிரபலமடைந்தது.

அந்த வகையில் கத்தோலிக்கத் திருச்சபையானது பாத்திமா அன்னையின் திருவிழாவை ஒக்டோபர் 13ஆம் திகதி கொண்டாடுகிறது,

1916ஆம் ஆண்டு வசந்த காலத்தில், போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா கிராம பகுதியில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களான லூசியா சான்ட்டோஸ், ஜெசிந்தா மார்த்தோ, பிரான்சிஸ்கோ மார்த்தோ ஆகியோருக்கு முன்பாக ஒரு வானதூதர் தோன்றி, தன்னை சமாதானத்தின் தூதுவர் என்று அறிமுகம் செய்தார். அத்துடன் அவர், நான் போர்த்துக்கல் நாட்டின் காவல் தூதர். நீங்கள் பாவிகளுக்காக செபிக்க வேண்டும் என்றும் சிறார்கள் மூவரிடமும் கேட்டுக்கொண்டார்.

1917 மே 13ஆந் திகதி அதே வானதூதர் மீண்டும் சிறார்கள் மூவர் முன் தோன்றிய கையில் நற்கருணையை ஏந்தியிருந்தார். அவரது கையில் இரசக் கிண்ணமும், அதன் மேலே அந்தரத்தில் மிதந்தவாறு நற்கருணை அப்பமும் காட்சியளித்தன.

நற்கருணையில் பிரசன்னமாகியிருக்கும் இயேசு கிறிஸ்துவிடம் கூறுமாறு பின்வரும் செபத்தை வானதூதர் அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.

"என் கடவுளே,நான் உம்மை விசுவசிக்கிறேன், நான் உம்மை ஆராதிக்கிறேன்,நான் உம்மை நம்புகிறேன், நான் உம்மை நேசிக்கிறேன்.உம்மை விசுவசிக்காதவர்களுக்காகவும், உம்மை ஆராதிக்காதவர்களுக்காகவும், உம்மை நம்பாதவர்களுக்காகவும், உம்மை நேசிக்காதவர்களுக்காகவும். உம்மிடம் மன்னிப்பு கேட்கின்றேன்."

இறுதியாக, "இயேசு மற்றும் அன்னை மரியாளின் இதயங்கள் நம் மன்றாட்டுகளுக்கு செவிகொடுக்கக் காத்திருக்கின்றன" என்று கூறி வானதூதர் அவர்களிடமிருந்து மறைந்தார்.

அந்த தூதர் மறைந்தவுடன் சிறிது நேரத்தில், சிறார்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு புதர் செடியின் மீது ஒளிமயமான ஒரு மேகம் வந்து இறங்கியது.அந்த மேகத்தின் மேல் அன்னை மரியாள் தோன்றி காட்சியளித்தார். லூசியா சான்டோஸ், ஜெசிந்தா மார்த்தோ, பிரான்சிஸ்கோ மார்த்தோ ஆகிய மூன்று பேரும் அந்த காட்சியைக் கண்டனர்.

மரியன்னை அவர்களிடம், "நான்செபமாலை அன்னை" என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார். மேலும், அந்த மூன்று சிறாரும், தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் 13ஆந் திகதி அதே இடத்திற்கு வர வேண்டும் என்று மரியாள் கட்டளையிட்டார்.

ஜுலை 13ஆந் திகதி அன்னை மரியாள் காட்சியளித்தபோது சிறுவர்களுக்கு நரகத்தின் கொடிய வேதனைகளைக் காண்பித்தார். "பாவிகள் மனம் திரும்ப செப, தவ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்றும் மரியன்னை அறிவுறுத்தினார்.

பாத்திமாவில் நிகழ்ந்த சூரியனின் அற்புதத்தை வெளியிட்ட இலுஸ்ட்ராக்கோ போர்ச்சுக்யூசா செய்தித்தாள்,( 29 அக்டோபர் 1917)

மக்கள் நரகத்தில் விழாமல் இருக்க, "ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பிலிருந்து எங்களை மீட்டருளும். எல்லாரையும் விண்ணகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகம் தேவையோ, அவர்களுக்கு சிறப்பாக உதவி புரியும்" என்ற செபத்தை செபிக்குமாறு மரியாள் கற்றுக்கொடுத்தார்.காட்சியை உறுதிப்படுத்தும் வகையில் அக்டோபர் 13ஆந் திகதி சூரியனில் ஓர் அதிசயம் நிகழும் என்றும் அவர் முன்னறிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் 13ஆந் திகதி, லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கோ மூவரும் அதிகாரிகளால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர். எனவே அன்றைய தினத்துக்கு பதிலாக, மரியாளின் விண்ணேற்பு தினமான ஆகஸ்ட் 15ஆந் திகதி சிறார் மூவரும் அன்னையின் காட்சியைக் கண்டனர்.மக்கள் பலரும் அன்னையின் அற்புதத்தைக் காண இச்சிறாரைப் பின்தொடர்ந்தனர்.

மேலும் அன்னை தனது காட்சிகளின்போது, மனிதரின் தீய நடத்தையையும் இறைவனின் கோபத்தையும் வெளிப்படுத்தினார். மரியாள் காட்சி அளித்த வேளையில் நிகழ்ந்து கொண்டிருந்த முதல் உலகப் போர் விரைவில் முடியப் போவதாகவும், மக்கள் தொடர்ந்து பாவம் செய்தால் அதைவிடக் கொடிய உலகப் போர் மூளும் என்றும் அன்னை எச்சரிக்கை செய்தார். வானில் காரணமின்றி தோன்றும் ஓர் ஒளியே அந்த போருக்கு அடையாளமாக இருக்கும் என மரியன்னை முன்னறிவிப்பு செய்தார்.

கிறிஸ்தவர்கள் செபித்தால் மக்களிடையே (குறிப்பாக ரஷ்யாவில்) மனமாற்றம் நிகழும் என்றும் கிறிஸ்துவை அறியாதவர்கள் விரைவில் மனம் திரும்புவார்கள் என்றும் அன்னை மரியாள் மொழிந்தார். தலை வணங்கி கடவுளிடம் மன்னிப்புக் கேட்குமாறும், கிறிஸ்துவின் திருச்சிலுவை முன் மண்டியிட்டு செபிக்குமாறும் மரியன்னை அறிவுறுத்தினார். "இறுதி காலத்தில் மக்கள் கடவுளின் கட்டளைகளை மதிக்காமல் நடப்பர், மக்களிடையே மனக்கசப்பும் வெறுப்பும் நிலவும், மனிதர்கள் உலகையே அழிக்கும் பயங்கர ஆயுதங்களைக் கண்டுபிடிப்பர்" என்றும், "இயற்கை சக்திகளால் சிறிது சிறிதாக அழிவுகள் ஏற்பட கடவுள் அனுமதிப்பார். குளிர்ந்த இரவில் ஏற்படும் கொடிய நிலநடுக்கத்திற்கு பின் உலகத்தில் பேரழிவுகள் தொடங்கும், கடவுளுக்கு விருப்பமான மக்கள் மட்டுமே அதில் தப்பி பிழைப்பர்" என்றும் அன்னை மரியாள் கூறினார்.

1917 அக்டோபர் 13ஆந் திகதி, அன்னையின் காட்சியைக் காண சுமார் 70 ஆயிரம் பேர் கூடி இருந்ததாக நம்பப்படுகிறது.அப்போது வானில் வியத்தகு அதிசயங்கள் தோன்றின.

வானிலிருந்து பல வண்ணங்கள் தோன்றி மக்கள் மேல் ஒளிர்ந்தன. பெரிய மழை பெய்த வேளையிலும் அன்னை மரியாள் காட்சியளித்த புதரும் 3 சிறார்கள் இருந்த இடமும் உலர்ந்தே காணப்பட்டன.

மக்கள் பலரும் அன்னை தோன்றிய ஒளிரும் மேகத்தைக் கண்டனர். அப்போது அவர் சிறாரிடம், "மக்கள் செபிக்க வேண்டும்; பாவத்தினால் கடவுளின் உள்ளத்தை புண்படுத்தக்கூடாது" என்று மிகவும் வலியுறுத்தி கூறினார். மக்களின் மனமாற்றத்திற்காக செபமாலை



செபிக்கப்பட வேண்டுமென்றும், இறுதியில் தனது மாசற்ற இதயம் வெற்றி பெறும் என்றும் மரியன்னை மொழிந்தார்.சூரியனின் அற்புதம் நிகழ்ந்தபோது, சூரியன் மக்களின் கண்களுக்கு குளிர்ந்த நிலவு போன்று தோன்றியது. அது பம்பரம் போல சுழன்றவாறு, சிறிது நேரம் அங்கும் இங்கும் தள்ளாடியது. அவற்றை அங்கிருந்த அனைவரும் பார்த்தனர். இந்த செய்தி போர்த்துக்கல் நாட்டு பத்திரிகைகள் அனைத்திலும் நிழற்படங்களுடன் வெளிவந்தன.

**அருட்சகோதரி மேரி ஆனந்த்**




# நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

## திருப்பயணிகள் மத்தியில் திருத்தந்தை பிரான்சிஸ்



உண்மையான செல்வம் என்பது இந்த உலகத்தில் உள்ள பொருள் அல்ல. மாறாக உண்மையான செல்வம் என்பது கடவுளால் அன்பு செய்யப்படுவதும், அவரைப் போல அன்பு செய்யக் கற்றுக்கொள்வதுமே என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

இந்த ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தி வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய செப உரையின் போது இவ்வாறு கூறிய திருத்தந்தை, தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும், அவர்களின் குரலுக்கு செவிகொடுப்பவர்களாகவும் நாம் இருக்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார். பொதுக்காலத்தின் 28ஆம் ஞாயிறு நற்செய்தி வாசகமான இயேசுவைப் பின்பற்ற விரும்பிய செல்வர் பற்றிய நற்செய்திக் கருத்துக்களைத் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, செல்வரின் செயல்களான ஓடி வந்து வணங்குதல் முகம்வாடி வருத்தத்தோடு செல்லுதல் என்னும் இரண்டு நிலைகள் பற்றி சிந்திக்க வலியுறுத்தினார்.

"நல்ல போதகரே, நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று இயேசுவைக் கேட்ட செல்வரிடம், உனது உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று இயேசு கூறியதும் முகவாட்டத்துடன் அவர் திரும்பிச் சென்று விட்டார் என்றும், தன்னிடம் இருந்த ஏராளமான சொத்துக்களை வேண்டாம் என்று மற்றவர்களுக்குக் கொடுத்துவிட அவருக்கு மனமில்லை என்றும்



எடுத்துரைத்தார் .

முதலில் இயேசுவைக் கண்டதும் அவரது இதயத்தால் தூண்டப்பட்டு அவரைக் காண ஓடி வந்த செல்வர், அவர் முன் முழந்தாள்படியிடுகின்றார் என்று எடுத்துரைத்த திருத்தந்தை, ஏராளமான சொத்துக்கள் இருந்தாலும் செல்வருக்கும் மனம் திருப்தி அடையவில்லை என்றும், அமைதியின்றி வாழ்ந்து வந்த அவர் நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக இயேசுவிடம் ஓடி வந்தார் என்றும் கூறினார்.

செல்வராக இருந்தாலும் இயேசுவின் காலடியில் விழுந்து, தனது மனநலம் குணமடைய வேண்டுகின்றார் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, செல்வரின் மனநோய்க்கு சிகிச்சையாக, மருந்தாக உனக்கு ஒன்று குறைவுபடுகின்றது உனக்குள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு என்று இயேசு கூறியதையும் நினைவுகூர்ந்தார்.

இயேசுவின் இத்தகைய பதிலை சற்றும் எதிர்பார்க்காத செல்வர் மிகுந்த மனவருத்தத்துடன் அங்கிருந்து சென்றுவிடுகின்றார் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், முதலில் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புடன் ஓடி வந்த அவரின் செயல் மிகவும் தளர்ந்து போய், வாடி வதங்கி வருத்தத்துடன் செல்வதாக முடிவடைந்தது என்றும் கூறினார்.

எல்லையற்ற மகிழ்ச்சிக்கான தேவையையும் அர்த்தமுள்ள வாழ்க்கையையும் நம் இதயங்களில் சுமந்து செல்லும் நாம், இவ்வுலகப் பொருள்கள் மற்றும் பூமிக்குரிய செல்வங்களை வைத்திருப்பதில் தான் வாழ்க்கையின் கேள்விக்கான பதில் இருக்கிறது என்று நினைக்கும் மாயையில் விழ நேரிடும் என்றும் விளக்கமளித்தார் திருத்தந்தை.

நாம் விரும்பும் நன்மை கடவுளே, நம்மீது அவர் வைத்திருக்கும் அன்பும், நம்மை அன்பு செய்யும் அவரும் மட்டுமே நாம் அடையவேண்டிய நிலைவாழ்வு என்பதை நாம் கண்டறிய வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார் என எடுத்துரைத்த திருத்தந்தை, உண்மையான செல்வம் என்பது ஆண்டவரால் அன்பு செய்யப்படுவதே என்றும் கூறினார்.

நமது வாழ்க்கையை மற்றவர்களுக்குக் கொடையாக மாற்றி ஒருவரையொருவர் அன்பு செய்யவே இயேசு நமக்கு அழைப்பு விடுக்கின்றார் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், ஏழைகளை அன்பு செய்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்று இயேசு வலியுறுத்துவதை சுட்டிக்காட்டினார்.

**மெரினா ராஜ்**

நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக முழுவாழ்வையும் அர்ப்பணித்த

# நற்செய்தியாளர் புனித லூக்கா

## அக்டோபர் 18ல் திருச்சபை சிறப்பிக்கின்றது

நற்செய்தியாளர் புனித லூக்கா ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு பவுலோடு உடன் சென்று நற்செய்திப் பணி ஆற்றி வந்தவர். அவர் அந்தியோக்கு நகரில் பிறந்தவர். அவர் யூதரல்லாத ஒரு புறவினத்தார்; கிரேக்க மொழியை நன்றாகக் கற்றுத் தெரிந்தவர். ஒருசிலர் இவரை ஆண்டவர் இயேசுவை தன்னுடைய வாழ்நாளில் சந்திக்காதவர் என்று கூறுவர். இன்னும் ஒருசிலர் இயேசுவின் எழுபத்தி இரண்டு சீடர்களில் ஒருவர் எனவும் கூறுவார். இவர் ஒரு மருத்துவர், கைதேர்ந்த ஓவியர்.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு இவர் பவுலோடு உடன் சென்று நற்செய்திப் பணி ஆற்றி வந்தார். பவுல் செசரியா மற்றும் உரோமை நகரில் சிறையில் அடைக்கப்பட்ட போது லூக்காதான் அவரோடு இருந்து, பவுலுக்கு பேருதவியாக இருந்து வந்தார். பவுலும் லூக்காவைக் குறித்து பெருமிதம் கொள்வதை அவருடைய திருமுகங்களிலிருந்து படித்தறிகின்றோம். லூக்கா மட்டுமே தன்னோடு இருந்து தனக்குப் பக்கபலமாக இருக்கின்றார் என்பதை பவுல் மிக அழுத்தமாகப் பதிவு செய்கின்றார் ( 2 திமோ 4:11). பவுலின் மறைவிற்குப் பிறகு லூக்கா போயேதியா என்னும் இடத்திற்குச் சென்று, ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை மிகத் துணிச்சலாக அறிவித்து, அங்கே கிறிஸ்துவுக்காக தன்னுடைய உயிரைத் துறந்தார் என்று அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். ஆண்டவர் இயேசு தனக்குக் கொடுத்த தாலந்தை, திறமையை ஆண்டவரின் மகிமையும் பெருமையும் விளங்கச் செய்த லூக்கா நற்செய்தியாளர் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி.

மூன்றாம் நற்செய்தி நூலான லூக்கா நற்செய்தி

லூக்கா தன்னுடைய நற்செய்தி நூலை கி. பி 65 ஆம் ஆண்டிலிருந்து 85 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் எழுதியிருக்கலாம் எனச் சொல்வார்கள். இரக்கத்தின் நற்செய்தி என அழைக்கப்படும் இந்த நற்செய்தி நூலில் இன்னும் ஒருசில உண்மைகள் மேலோங்கி இருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலாவதாக லூக்கா நற்செய்தி எல்லாருக்கும் பொதுவான நற்செய்தி என அழைக்கப்படுகின்றது. லூக்கா நற்செய்தி நூலை நாம் படித்துப் பார்க்கும்போது ஆண்டவராகிய மெசியா யூதர்களுக்கு மட்டுமல்ல, அவர் எல்லாருக்கும் பொதுவானவர் என்ற உண்மையை உணர்ந்துகொள்ளலாம். ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தன்னுடைய சீடர்களுக்குக் காட்சி கொடுக்கின்றபோது, "மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும், 'பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என எருசலேம் தொடங்கி




அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்படவேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்" என்று கூறுகின்றார்.

இவ்வார்த்தையை நாம் கூர்ந்து நோக்கும்போது லூக்கா நற்செய்தி எல்லா மக்களுக்கும் எழுதப்பட்டிருகின்றது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

இரண்டாவதாக லூக்கா நற்செய்தி பெண்களுக்கு அதிக முன்னுரிமை தரும் நற்செய்தி எனவும் அழைக்கப்படுகின்றது. வானதூதர் சக்கரியாவிற்கு தோன்றினார் என்றால், அதற்கு அடுத்து, அவர் மரியாளிற்கு தோன்றுவதாக லூக்கா நற்செய்தியாளர் எழுதுகின்றார். அதைப் போன்று குழந்தையை சிமியோன் கண்டுகொண்டார் என்று படிக்கின்ற நாம், அதற்கு அடுத்து அன்னா என்ற பெண்மணி குழந்தை இயேசுவைக் கண்டுகொண்டார் என்றும் படிக்கின்றோம். ஊதாரி மகனின் உவமையை வாசிக்கின்ற அதே வேளை, பெண் ஒருவர் தான் தொலைத்த நாணயத்தைத் தேடிக் கண்டுகொள்வதையும் படிக்கின்றோம். இவ்வாறு லூக்கா நற்செய்தி பெண்களுக்கு அதிக முன்னுரிமை தருகின்ற ஒரு நற்செய்தியாகவும் உள்ளது.

மூன்றாவதாக லூக்கா நற்செய்தி ஜெபத்திற்கு அதிக முக்கியத்தும் தருகின்ற ஒரு நற்செய்தி நூலாகவும் விளங்குகின்றது. அதே போன்று தூய ஆவியைக் குறித்து அதிகம் பேசுகின்ற ஒரு நற்செய்தி நூலாகவும் மகிழ்ச்சியின் நற்செய்தியாகவும் லூக்கா நற்செய்தி விளங்குகின்றது. திருத்தூதர் பணிகள் நூலும் லூக்காவால்தான் எழுதப்பட்டது என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.தூய லூக்காவின் விழாவைக் கொண்டாடும் நாம் அவரிடமிருந்து பல பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம்.நற்செய்தியாளர் லூக்கா கடவுள் தனக்குக் கொடுத்த திறமையைப் பயன்படுத்தி, ஆண்டவர் இயேசுவைப் பற்றி எல்லா மக்களுக்கும் அறிவித்தார்; நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக தன்னுடைய வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தார். அவருடைய விழாவைக் கொண்டாடும் நாம் நற்செய்தி அறிவிப்பதில் தாகம் கொண்டு வாழ்கிறோமா? என சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

.நம்முடைய நற்செய்திப் அறிவிப்புப் பணியில் எத்தனை இடர்கள் வந்தாலும் தொடர்ந்து நற்செய்திப் பணி செய்ய வேண்டும் என்பதை அவரது வாழ்வு எடுத்துரைக்கின்றது.

லூக்கா நற்செய்தியாளர் நற்செய்தி நூலை எழுத நினைத்தபோது அவருக்கு இயேசுவின் குழந்தைப் பருவம் குறித்த போதிய தகவல்கள் தெரியவில்லை. எனவே அவர் எருசலேமில் வாழ்ந்து வந்த இயேசுவின் தாயிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் எனத் தீர்மானித்தார்.

அதன்படியே அவர் அன்னை மரியாளைச் சந்தித்து வானதூதர் கபிரியேல் மங்கள வார்த்தை சொன்னது, அதன்பிறகு மரியாள் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தது, இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது, சிறுவன் இயேசு கோவிலில் காணாமற் போய் கண்டுபிடிக்கப்பட்டது போன்ற தரவுகளை கேட்டுத் தெரிந்துகொண்டு, அதனை தான் எழுதிய நற்செய்தி நூலில் எழுதி வைத்தார். அது எக்காலத்திற்கு அழியாமல் உள்ளது.'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க' ஆண்டவர் இயேசு வந்ததாக லூக்கா நற்செய்தியாளர் கூறுவார் (லூக் 4:18). நாம் ஆண்டவர் இயேசுவைப் போன்று லூக்காவைப் போன்று ஏழைகளுக்கும் எல்லா மக்களுக்கும் நற்செய்தி அறிவித்து வாழ்வோம், எதிர்கொள்ளநேரும் இன்னல்களை துணிவோடு எதிர்கொள்வோம்..

**அருட்தந்தை மரிய அந்தோனிராஜ்**

மழை, குளிர் காலநிலை:

# குழந்தை பருவ ஆஸ்துமா, சுவாச தொற்றுகள் அதிகரிக்கும்

## சிறுவர் நல வைத்தியர் எச்சரிக்கை

மழையுடன் கூடிய காலநிலை மற்றும் குளிர் கால நிலையையடுத்து குழந்தைப் பருவ ஆஸ்துமா, குறிப்பாக இன்புளுவன்சா உள்ளிட்ட சுவாச வைரஸ் தொற்றுக்கள் அதிகரிக்கும் என, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை ஆலோசகர் சிறுவர் நல வைத்தியர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

தற்போதைய காலநிலையில் இன்ஃப்ளுயன்ஸா (Influenza) அடினோவைரஸ் (Adenovirus) மற்றும் ரைனோவைரஸ் (Rhinovirus ) போன்ற சுவாச வைரஸ் தொற்றுக்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருமல், மூக்கு ஒழுகுதல் அல்லது அடைத்தல் ஆகியவை இதன் பொதுவான நோய் அறிகுறிகளாகும்.

குழந்தை பருவ ஆஸ்துமா குளிர் காலநிலை மற்றும் வைரஸ் காய்ச்சலுக்குப் பிந்திய காலப்பகுதியில் ஏற்படக்கூடிய நோய் அனர்த்தமாகும்.

பாதுகாப்பற்ற உணவு மற்றும் தண்ணீரால் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்குஏற்படலாம். இளைஞர்களுக்கும் பாதுகாப்பற்ற உணவு மற்றும் தண்ணீரால் வயிற்றுப்போக்கு ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

மழை தொடர்வதால், ஈக்களின் எண்ணிக்கை அதிகரித்து, உணவு, தண்ணீர் முதலானவற்றின் சுகாதாரமும் பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவை வயிற்றுப்போக்கு மற்றும் டைபோய்ட் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களுக்கு வழிவகுக்கும் என்பதால், ஈக்கள் அதிகமாக இருக்கும் திறந்த வெளிகளில் உணவை உட்கொள்வதைத் தவிர்க்குமாறும் பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் மஞ்சள் காமாலை நோய் பரவும் அனர்த்தம் இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

ஐந்து அல்லது ஆறு நாட்கள் நீடிக்கும் காய்ச்சல், வயிற்று வலி, கண்கள் மஞ்சளாகுதல் மற்றும் கருமையான சிறுநீர் ஆகியவை இதன் நோய் அறிகுறிகளாகும்.

பாதகமான காலநிலையின் போது நுளம்புகள் பெருகும் இடங்கள் அதிகரிப்பதன் காரணமாக, டெங்கு காய்ச்சலின் அதிகரிப்பும் ஏற்படலாம். மழைக்கு பின் தண்ணீர் தேங்காமல் இருக்க மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்வதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மெலியோடோசிஸ் (Melioidosis) என்பது மண் காய்ச்சல் என்றும் அழைக்கப்படும் பாக்டீரியா தொற்றுக்கள் வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் பரவக்கூடும். அசுத்தமான மண், காற்று அல்லது நீர் தொடர்பு மூலம் மெலியோடோசிஸ் பரவுகிறது. இதனால் சேற்று அல்லது குட்டை நிரம்பிய நீரில் பொது மக்கள், குறிப்பாக சிறுவர்கள் மிதிப்பதை தவிர்கதுக்கொள்ளுமாறும் டொக்டர் பெரேரா அறிவுறுத்தினார்.

குருநாகல் மாவட்டத்தில் மெலியோடோசிஸ் நோய் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வீங்கிய நிணநீர் கணுக்கள், கர்ப்பப்பை வாய் நிணநீர் கணுக்கள் மற்றும் நீடித்த காய்ச்சல் ஆகியவை இந்த நோயின் அறிகுறிகளாகும்.





குளியாப்பிட்டிய , கனதுல்ல, லயனல் ஜயதிலக்க மாவத்தையில் அமைந்துள்ள ஆதிபராசக்தி கோவிலின் தீமிதிப்பு உற்சவம் அண்மையில் நடைபெற்றது. ஆலய தர்மகர்த்தா எஸ். கனகரத்தினம், ஆலய செயலாளர் ஏ. ரஜிவ்காந்த் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# இன்றைய பலன்கள்

(15.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
மாணவ மாணவிகளுக்கு பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு குடும்ப பொறுப்புகள் கூடும். சுப செய்திகள் வந்து சேரும்.

**ரிஷபம் :**
மாணவ மாணவிகளுக்கு எதிர்பார்த்த இலக்கை அடையும் வாய்ப்பு உண்டு. பெண்களுக்கு உறவினர்களால் நன்மை ஏற்படும். வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் வரலாம். கலைஞர்களின் திறமை பளிச்சிடும்.

**கடகம்:**
கலைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாணவ மாணவிகள் படிப்பில் அக்கறை காட்டுவர். பெண்களுக்கு தங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**சிம்மம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகார அந்தஸ்து கிடைக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவ மாணவிகளுக்கு எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வர். கலைஞர்களுக்கு புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:**
வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் உண்டு. கலைஞர்களுக்கு இடமாற்றம் சிந்தனைகள் உருவாகும்.

**விருச்சிகம்:**
மாணவ மாணவிகளுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு வரன்கள் வாசல் தேடி வரும். வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்றுகொள்ளலாமா என்று சிந்திப்பார்கள். கலைஞர்களுக்கு நட்பால் நன்மை உண்டு. மாணவ மாணவிகளுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மகரம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கலைஞர்கள் எடுக்கும் முயற்சி வெற்றி பெறும்.

**கும்பம்:**
கலைஞர்களுக்கு விலகிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். ஆசிரியர்களின் ஒத்துழைப்பால் மாணவ மாணவிகள் கல்வியில் அக்கறை செலுத்துவர்.

**மீனம்:**
மாணவ மாணவிகளுக்கு கவன சிதறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பெண்களுக்கு வரவைக்காட்டிலும் செலவு கூடுகிறது என்ற கவலை மேலோங்கும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடவடிக்கை

வத்தளை பள்ளியாவத்தை வடக்கு கிராம சேவகர் பிரிவில் இருக்கும் ஹிக்காவத்தை மற்றும் ஆரிசிய்ய தோட்டத்தில் வசிக்கும் 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மலையக அபிவிருத்தி அமைப்பு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பொருட்களை சேர்த்து மனிதாபிமான உதவிகளை செய்ய முன்வந்துள்ளது. பட்டினியால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அரிசி, மா, பால்மா, மற்றும் சாப்பாட்டு பொருட்கள் கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இதற்கு முடிந்தளவு உலர் உணவுப் பொருட்கள் தந்து உதவுமாறு இவ்வமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் பொருட்கள் அனைத்தும் ஹிக்காவத்தை சமூக நிலையத்தில் பொதிசெய்யப்பட்டு சரியான முறையில் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக மலையக அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சொ.மகேந்திரன் தெரிவித்துள்ளார். பொருட்களை 127/32/1, ஹமில்டன் மாவத்தை, பள்ளியாவத்தை, ஹந்தலை, வத்தளை என்ற இடத்திற்கு கொண்டு வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உடப்பு அறுவாய் முகத்துவாரம் திறப்பு

**உடப்பு குறூப் நிருபர்**

புத்தளம் மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக உடப்பு பகுதியிலுள்ள அறுவாய் முகத்துவாரம்(13) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வெட்டப்பட்டு கடலுக்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அருகிலுள்ள புளிச்சாக்குளம்,முந்தல் உள்ளிட்ட கிராமத்திலுள்ள நீர்மட்டம் குறையும் சாத்தியம் ஏற்படும். இருந்தும் உடப்பு கிராமத்திலுள்ள 1ம் வட்டாரம், 2ம் வட்டாரம் பகுதியில் வசிக்கும் கடலோரப் பகுதி மக்களின் இயல்பு நிலை பாதிப்படையும் சாத்தியம் காணப்படுகின்றது. காரணம் இந்த அறுவாய் திறப்பதால் கடலரிப்பு ஏற்பட்டு ஊர்மனையிலுள்ள வீடுகள் சேதமடைவதுடன், கடல் கிராமத்துக்குள் புகும் நிலையும் ஏற்படும். ஆகவே இதனை நிவர்த்தி செய்ய பாரிய கற்கள் கடலின் பகுதியில் இட வேண்டும். அந்தத் திட்டம் இப்பகுதியில் இடம்பெறவில்லை. இதனை தகுந்த அதிகாரிகள் கூடிய விரைவில் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

அந்த வேலைத்திட்டம் நடைபெற்றால் இவ்வாறான கட்டத்தில் இந்த கிராமத்தை கடலரிப்பிலிருந்து காப்பாற்ற முடியும். னவே இதனை கூடிய விரைவில் செய்து தருமாறு உடப்பூர் மக்கள் சம்பந்தப்பட்ட கரையாரப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# துண்டுவிழும் தொகையை நிவர்த்தி செய்ய கடன் பெறுவது தவிர்ந்த மாற்று வழி இல்லை

## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிரதி வருடமும் வரவு செலவுத் திட்டதின்போது துண்டு விழும் தொகையை நிவர்த்தி செய்வதற்கு, புதிதாக பணத்தை அச்சடிக்க முடியாததால் கண்டிப்பாக அரசாங்கம் தேசிய சந்தையில் கடனைப் பெற்றுக் கொள்வதைக் தவிர, வேறு மாற்று வழி கிடையாது என நிதி யமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் பாரியளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சிலர், சுமத்தும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, நிதி யமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

பல்வேறு அரசாங்கங்களும் வருடாந்தம் அதிகரிக்கும் வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகையை எதிர்கொள்வதை ஞாபகப்படுத்திய நிதியமைச்சின் செயலாளர், அந்த கடன் சுமையிலிருந்து மீள வேண்டுமானால், கண்டிப்பாக கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு சாத்தியமானதாக அந்த செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசாங்கத்தினால் சுமக்கக்கூடிய வருமானம், செலவு,நிதி நிலைமையை முன்னெடுக்கும்போது முடிந்தளவு மக்கள் மீது சுமை ஏற்படாத வகையில், வரி வருமானத்தை சேகரிப்பது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் தேசிய கடன் தொகை தொடர்பில் சிலர் பல்வேறு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் விமர்சனங்களை மேற்கொண்டாலும் அரசாங்கம் என்ற வகையில் அதனை முகாமைத்துவம் செய்யும் போது பாரிய சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எத்தகைய விமர்சனங்கள் வருகின்ற போதும் முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் நடத்தப்படாது... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப்பரிசில் பரீட்சையில், சில வினாக்கள் கசிந்தமையினால் பிரச்சினையான சூழ்நிலை உருவானதால், பரீட்சைகள் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

புலமைப்பரிசில் வினாத்தாள் கேள்விகள் சில, பரீட்சைக்கு முன்னர் கசியவிடப்பட்டிருந்தன.

இது தொடர்பில், குற்றம் சுமத்தப்பட்ட, மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைதாகினர்.இவர்களை எதிர்வரும் (22) வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற காலநிலை... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவை மற்றும் கடுவலை கல்வி வலயங்களுக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகள், கம்பஹா மாவட்டத்தில் களனி, வத்தளை கல்வி வலயங்களுக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளும் நேற்றைய தினம் மூடப்பட்டிருந்தன. அதனையடுத்து நேற்றைய தினம் நாட்டில் நிலவிய காலநிலையை கவனத்திற் கொண்டு கல்வியமைச்சு மேற்படி புதிய அறிவிப்பை விடுத்து,இன்றைய தினமும் பாடசாலைகளை மூடுமாறு உத்தரவிட்டுள்ளது

## அரசுக்கு நாம் ஆதரவு...

பொதுத் தேர்தல் என்பது மலையக மக்களுக்கு முக்கியமான ஒரு தேர்தலாகும்.ஏனெனில் மலையக பிரதிநிதிகளை இல்லாமல் செய்வதற்கான சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.மலையகத்தில் புதிய மாற்றம் வேண்டுமென சுயேச்சையாக சிலர் போட்டியிடுகின்றனர்.சிலர் மலையக மக்களுக்கு எவ்வித அபிவிருத்திகளும் முன்னெடுக்கவில்லை எனக் கூறுகின்றனர்

மலையகத்தின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் குறைவடைந்தால், மலையக மக்களின் பிரச்சினைகள், உரிமைகளுக்கு குரல் எழுப்ப முடியாது. மலையக மக்களின் சம்பள பிரச்சினை முதல் அனைத்து அடிப்படை பிரச்சினைகளுக்கு போராடக் கூடிய ஒரு கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணி மாத்திரமே உள்ளது.மலையகத்தின் உண்மையான பிரதிநிதிகள் நாங்கள் மாத்திரமே என்றும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளத்தை கட்டுப்படுத்த...

புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இவ்வருடத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேதமடைந்த சொத்துக்கள், புனரமைக்கப்படாத கட்டடங்கள் குறித்த மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்த, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி. தர்மதிலக்க, அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) டபிள்யூ.டபிள்யூ.எஸ். மங்கள, தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிறி கருணாவர்த்தன, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. கருணாநாயக்க, தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நாமல் இந்திக லியனகே, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ, ஜி.ஏ.கே. திலகரத்ன ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## சீரற்ற காலநிலை சில தினங்கள்...

பகுதிகளிலும் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும் என்றும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறற்ற காலநிலை காரணமாக இதுவரை மூன்று பேர் உயிரிழந்துள்ளது, ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 484 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

அனர்த்தங்களினால் மேல் மாகாணத்திலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் மேல் மாகாணத்தில் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 693 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது. அதே வேளை, மழையுடனான காலநிலை காரணமாக வெள்ளப்பெருக்கு அபாயம் தொடர்பில், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

களுகங்கை, ஜின்கங்கை, கிளை ஆறுகளான குடாஓயா, மகுரு ஓயா ஆகியவற்றை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், வெள்ளம் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது .

ஆறுகளை அண்மித்த பகுதிகளில் வள்ளங்களை செலுத்துதல்,நீரில் விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை, மேல் மாகாணம் சப்ரகமுவ மாகாணம்,வடமேல் மாகாணம் மற்றும் வட மாகாணம், காலி, மாத்தறை மாவட்டங்களில் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றர் மழை பெய்யும் என்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் அதிகரிக்கும் நிலையில் கடற்தொழில் செய்வோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் திணைக்களம் கேட்டுள்ளது.

## என்னை கட்சியை விட்டு...

தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றம் ஒரு மாயையாக இருக்கலாம். அல்லது நீண்ட பயணத்தினுடைய ஒரு ஆரம்பமாக கூட இருக்கலாம். ஆனால், அது நல்லதாக இருந்தால் நாங்களும் அவர்களோடு கைகோர்க்கத் தயாராகவுள்ளோம் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

சிங்களத் தலைவர்கள் இதயசுத்தியோடு தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் தருவார்களா? என நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

25 வருடங்களாக கிடப்பிலிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, 2004 ஆம் ஆண்டு மீண்டும் வெளியே வந்தது. அந்தக் கட்சியினுடைய பாரம்பரியம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மீண்டும் ஒரு புதுப்பொலிவைப் பெற்றுப் பயணம் செய்து வருகின்றது.

நாம் குறைந்தபட்சம் 15 பாராளுமன்ற ஆசனங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு பெற்றால் எங்களுக்கான மாற்றத்தைத் தருங்களமாக அது மாறும். அதிலிருந்து நாம் பின்வாங்கினால், எங்களுடைய மக்கள் சரியான முடிவுகளை எடுக்கத் தவறினால் நாங்கள் தோற்றுப் போன இனமாக மாறிக் கொண்டே போவோம்என்றும்அவர் தெரிவித்தார்.

## அர்ஜுன் அலோசியஸ்...

தடையுத்தரவு இல்லை என்றும் 'வற்' வரிக்கு மேன்முறையீட்டு உரிமை இல்லை என்பதன் அடிப்படையிலேயே, நேற்றைய தினம் நீதிமன்ற உத்தரவுக்கமைய இத் தொகையை செலுத்த வேண்டுமென சந்தேக நபர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், அவ்வாறு செலுத்தத் தவறினால் ஆறு மாதங்களுக்கு சிறைத் தண்டனை வழங்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி 10 மில்லியன் ரூபாவை நேற்றைய தினம் நீதி மன்றத்துக்கு வழங்குவதாகவும் மீதித் தொகையை தவணை முறையில் வழங்குவதற்கு கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தார். இருந்தபோதும் நீதவான் அந்த வேண்டுகோளை நிராகரித்தார்.

2016 மற்றும் 2019 க்கு இடைப்பட்ட காலத்தில், அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வரி தொகையான 3.5 பில்லியன் ரூபாவை, வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரி இறைவரி ஆணையாளர் மேற்படி வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய விமானத்துக்கு...

காணப்படவில்லை. இச் சம்பவத்தால் இப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பொருளாதாரத்துக்கான...

கொண்ட நாடுகள் பெரியளவில் வளர்ச்சியை அடையாது என்பதை அவர்களின் ஆய்வு நிரூபித்துள்ளது.

ஒரு அமைப்பு எப்படி உருவாகிறது. அவை எப்படி ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு காரணமாக இருக்கிறது. நிலையான வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் ஆகிவை குறித்து இவர்கள் விரிவான ஆய்வுகளை செய்துள்ளனர்.

# மலேசியாவில் உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு; இலச்சினை மூன்று மொழிகளில் வெளியீடு

உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு, *Global Connect Conference, Women Leadership Forum* என பன்முக விழாவாக எதிர்வரும் 2025 ஜனவரி 4 ஆம், 5 ஆம் திகதிகளில் மலேசிய நாட்டு பினாங்கு மாநிலத்தில் டேவான் ஸ்ரீ அரங்கில், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இரு நாட்களாக நடைபெற உள்ளது. இது 11 ஆம் வருட மாநாடு ஆகும்.

இந்நிகழ்வில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

கலை, கலாசாரம், பாரம்பரிய உணவு, உடை திருவிழா, பண்டையகால தமிழரின் வரலாறு, பன்னாட்டு சிறு, குறுந்தொழில் அதிபர்கள் கருத்தரங்கம் மற்றும் கல்வி, மருத்துவம், பொறியியல், சித்த, ஆயுர்வேத இயற்கை மருத்துவம், உணவு பதப்படுத்துதல் போன்ற பல்வேறு துறை சார்ந்த அரங்கங்கள் கண்காட்சியில் இடம்பெற உள்ளன. சிறு குறுந்தொழில் முனைவோர்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றன என்று ஆராய்வதுடன், அரசாங்க உதவிகளை அறியும் வகையிலும் இந்த கண்காட்சி அமைய உள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தக சங்கங்கள், வர்த்தக ஆணையங்கள், வர்த்தகர்கள் தொழில்வாய்ப்புகளை தேடுவோர், ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் போன்றோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் சாதனை புரிந்த தமிழர்களுக்கு சாதனைத் தமிழன் விருது, ஆசிரியர்களுக்கு நல்லாசான் விருது, இளம் சிறார்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களின் திறமை அறிந்து இளம் சிறார் விருது போன்ற விருதுகளும் வழங்கப்பட உள்ளன. மேலும், பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக பெண்களுக்கென தனி ஒரு அமர்வு நடைபெற உள்ளது.

மேலும், பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், துணைவேந்தர்கள், மேயர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் மலேசியாவில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் விதமாக








பல்வேறு நாடுகளில் இருந்து பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

தமிழக அரசின் *MSME* மற்றும் மலேசிய *SME Corp* ஆதரவும், மலேசிய இந்திய வர்த்தக சங்கத்தின் ஆதரவும் கோரப்பட்டுள்ள இந்நிகழ்விற்கு மலேசிய ஒற்றுமை அரசாங்கத்தின் கீழ் செயல்படும் அனைத்து பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மாநில மத்திய அமைச்சர்களும் அழைக்கப் பட்டுள்ளனர். இந்தப் பன்முக விழா பினாங்கு மாநில அரசு ஆதரவுடன் நடைபெற உள்ளது.

மாநாட்டின் இலச்சினையை மூன்று மொழிகளில் பினாங்கு மாநில சட்டமன்றவளாக அரங்கில் சுற்றுலாத்துறை அமைச்சர் வாங் ஹான்வாய், வீட்டு வசதி துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சுந்தர் ராஜு, பினாங்கு முதலமைச்சரின் அலுவலக மேலாளர் டத்தின் பாரதி, *PCEB* தலைமை அதிகாரி அஸ்வின் குணசேகரன் மற்றும் ஏற்பாட்டுக் குழு தலைவர் செல்வகுமார் அதிகாரபூர்வமாக வெளியிட்டனர்.

மேலும் விபரங்களுக்கு J. செல்வகுமாருடன் (+60166167708)தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பினால் அருகிச் செல்லும் வாசிப்புப் பழக்கம்!

மனிதர்களை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அறிவியல் சார்ந்த கல்வியாகும். அதனை வழங்கும் ஊக்கியாக அமைவது வாசிப்பு. மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க கல்வி அமைச்சும் மற்றும் பல்வேறு சமூகச் செயற்றிட்டங்களும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டாலும், அவற்றால் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை.

பாடசாலை நேரம் போக மீதமுள்ள நேரத்தில் நூலகத்திற்குச் செல்வதாக இருந்த காலம் மலையேறி விட்டது. பத்திரிகை வாசிப்பின் வீதம் பெருமளவு குறைந்து வருகின்றது. பிரயாணத்தின் போது புத்தகத்தை மீட்டுகின்ற மனிதர்கள் அபூர்வமாகியுள்ளனர். கைத்தொலைபேசிக்கு அடிமையாகி விட்டது இன்றைய தலைமுறை.

வாசிப்பானது பாடசாலைப் பருவத்திலிருந்து விதைக்கப்பட வேண்டியதாகும். இதனால் ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகக் கல்வியமைச்சு பிரகடனம் செய்து பல்வேறு செயற்றிட்டங்களை வருடந்தோறும் முன்னெடுத்து வருகின்றது. ஒக்டோபர் 21 முதல் 25 ஆம் திகதி வரையிலான 5 நாட்கள் பாடசாலை நூலக வாரமாக இவ்வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதனை 21 ஆம் திகதி பாடசாலை நூலக தினமாகவும், 22 ஆம் திகதி நூலகச் சூழல் சுத்தம் செய்யும் தினமாகவும், 23 ஆம் திகதி நூல்களைப் பாதுகாத்தல் தினமாகவும், 24 ஆம் திகதி நூல் சேகரிப்பு தினமாகவும், 25 ஆம் நாள் நூலகப் பயன்பாட்டு மாணவர்களை கௌரவிக்கும் தினமாகவும் கல்வியமைச்சு பிரித்தறிவித்துள்ளது.

பிறந்தநாள் பரிசாக நூல்களை அன்பளிப்புச் செய்தல், புத்தகக் கண்காட்சியை நடத்துதல், புத்தக நன்கொடை தினமொன்றை அறிமுகம் செய்தல், வாசிப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலான போட்டிகளையும் விரிவுரைகளையும் ஏற்படுத்துதல், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், வாசிப்பு முகாம்களை நடத்துதல் முதலியன வாசிப்பினைத் தூண்டுவதற்கான சிறந்த ஆலோசனைகளாகும்.




'கருவுற்றிருக்கும் தாய் நல்ல நூல்களை வாசிக்கும் போது அக் குழந்தைகளின் மூளை விருத்தி உந்தப்படுகின்றது' என்கின்ற உளவியலாளர்களின் கூற்றினை ஒன்றிணைத்துப் பார்க்கும் போது வாசிப்புக்கான கரு வீட்டிலிருந்தே விதைக்கப்பட வேண்டுமென்பது வெளிப்படையாகின்றது. ஒரு குழந்தையின் புகுந்த வீடாக அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலையின் மூலமே இதனைக் கட்டியெழுப்புவதற்கான சாத்திப்பாட்டு நகர்வுகளை அதிகரிக்க வேண்டிய தேவையுண்டு. அதற்கான மிக நல்லதொரு களத்தை வழங்குவது பாடசாலைகளின் நூலகங்களே. அந்நூலகங்களை வளப்படுத்துவதுதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான பங்காளிகளாக மாற வேண்டியவர்கள் மாணவர்களே.

வாசிப்பின் மூலம் சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல் முதலிய திறன்கள் வளருகின்றன. ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பொழுதை திருப்திகரமாகப் போக்குவதற்கும் வாசிப்பு துணை நிற்கிறது. மகிழ்ச்சியாக உள்ளவனே சுயமாக சிந்திக்கும், ஆராயும், கருத்துக்களை வெளியிடும் நிலையில் எப்போதும் தம்மை வைத்திருப்பான். அவனே சமூகத்தின் பார்வைக்குட்பட்டவனாக மாறுகின்றான்.

வாசிப்பின் மூலம் தகவல் தேவைகள் நிறைவு செய்யப்படுவதுடன் அறிவு மேலோங்குகிறது. அறிவாளியையும் அறிவிலியையும் வேறுபடுத்துவது வாசிப்பேயாகும். மொழி விருத்தி அடைவதுடன் தன்னம்பிக்கை வளர்கிறது.

நவீன ஊடகங்களின் வருகையினால் வாசிப்புத்திறன் தூரமாகிச் செல்கிறது என்கின்ற கருத்தினை ஏற்காமல் இருக்க முடியாது. முறையான நேர்மையான ஆழமான வாசிப்புக்கு வழிகாட்டும் நூல்களையும் அதன் உறைவிடமான நூலகங்களையும் நோக்கி மாணவர்கள் ஒவ்வொருவரும் நகர வேண்டும்.

ஜெஸ்மி எம்.மூஸா
(முதுகலை தத்துவமாணி - தமிழ்)
பெரியநீலாவணை தினகரன் நிருபர்

# நுவரெலியாவில் பாழடைந்த நிலையில் மற்றுமொரு அரச வாகனம் கண்டுபிடிப்பு

(நானுஓயா நிருபர்)





முன்னாள் போக்குவரத்து அமைச்சுக்கு சொந்தமான வாகனமொன்று கைவிடப்பட்ட நிலையில் நுவரெலியா பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனம் மறைவான ஒரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தர்.

நுவரெலியா பதுளை பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சொந்தமான கட்டடத்துக்கு அருகிலேயே இவ்வாகனத்தை கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த வாகனம் பல வருடங்களாக ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது முன் பக்க இலக்கத்தகடு இன்றி பின்பகுதியில் மாத்திரம் இலக்கத்தகடு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த ஜீப் வாகனமும் மற்றுமொரு ஜீப் வாகனமும் நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட தொடர்பு அதிகாரியின் பாவனைக்காக வழங்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எனினும் இதனுடன் தொடர்புடைய மற்றொரு ஜீப் வண்டியை கண்டுபிடிக்க பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா பிரதேசத்தில் அரச வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போதே ஜீப் வண்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.



தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட தமிழ் வேட்பாளர் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் நேற்றுமுன்தினம் கண்டி பிள்ளையார் கோவிலில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டார். கண்டி பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயா, கண்டி பிரபல வர்த்தகர் மோகன் மற்றும் சமூக வர்த்தகர்கள் பலரும் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசத்தை வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

(படம்: மாவத்த கம தினகரன் நிருபர்)

# மாத்தளை மாவட்டத்தில் ஐந்து ஆசனங்களுக்காக 184 வேட்பாளர்கள் போட்டி

(தம்புள்ள தினகரன் நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் ஓர் தேசியப் பட்டியல் உறுப்பினர் அடங்கலாக ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு 184 வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதாக மாத்தளை மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரி தேஜாணி திலக்கரத்ன தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை, தம்புள்ள, இறத்தோட்டை மற்றும் லக்கல ஆகிய 04 தொகுதிகளிலிருந்தும் 05 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவிருப்பதாக தெரிவித்த தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரி; மாத்தளை மாவட்டத்தில் 16 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 07 சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்ததாகவும், பூரணப்படுத்தப்படாத ஒரேயொரு சுயேட்சைக் குழுவின் வேட்பு மனு மாத்திரம் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 16 அரசியல் கட்சிகள் மற்றும் 07 சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 184 வேட்பாளர்கள் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் வாக்களிப்பதற்கு 4,27,851 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும், இவற்றுள் தம்புள்ள தொகுதியிலிருந்து 1,05,663 பேரும், மாத்தளை தேர்தல் தொகுதியிலிருந்து 95,133 பேரும், இறத்தோட்டைத் தேர்தல் தொகுதியிலிருந்து 1,04,403 பேரும், லக்கல தேர்தல் தொகுதியிலிருந்து 77,652 பேரும் இம்முறை வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் கடந்த தடவையையும் விட இவ்வாண்டு மேலதிகமாக 4,000 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பலமான அரசாங்கத்தை அமைப்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

இராதாகிருஷ்ணன் எம்.பி



தேர்தலில் அநேகமானவர்கள் பலமான எதிர்கட்சியை அமைப்பதற்காக வாக்கு கேட்கின்றார்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி வாக்கு கேட்பது பலமான ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்காகவும் சஜித் பிரேமதாசவை பிரதமராக கொண்டு வருவதற்குமே என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் நேற்றுமுன்தினம் (13) ஹட்டன் கோல்டன் மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன், பழனி திகாம்பரம் மயில்வாகனம் உதயகுமார் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

மலையக மக்களை பொறுத்தவரையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்களான நாங்கள் மூவரும் இந்த மக்களுக்கு ஆளும் கட்சியில் இருக்கின்ற பொழுதும் எதிர் கட்சியில் இருக்கின்ற பொது மக்களுக்காக சேவை செய்திருக்கின்றோம். அது மட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் இந்த மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்திருக்கின்றோம். ஆனால் ஏனைய வேட்பாளர்கள் தேர்தல் காலத்தில் வருவதும் பின்பு காணாமல் போவதும் வழமையான ஒரு விடயமாக மாறிவிட்டது.

எனவே இவர்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று பலரும் பல சின்னங்களில் பணத்தை பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு எமது சிறுபான்மை மக்களின் வாக்குகளை பிரிப்பதில் ஆர்வமாக இருக்கின்றார்கள். இது எமது இனத்திற்கு செய்கின்ற ஒரு சாபக்கேடாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.10.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5624
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.33,288,340.00
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 4 4 5 0 7 0

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 199
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 5 0 7 0

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3866
சீட்டிழுப்பு திகதி: 2024.10.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.61,899,983.60
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 01 11 31 46
விசேட எழுத்து: P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 78349

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1972
2024.10.13
99367
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ.449,353,578.00
ஆங்கில எழுத்து: A
சுப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 16 25 38 53
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**VIP**
திகதி: 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம்: 450
ஆங்கில எழுத்து: X
L7 எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 8 3 3 1 2 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 21,059,500.56

**ராசி சுப பலன்**
திகதி: 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம்: 933
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ.3,298,956.00
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 10 20 36 53
தனயோக இலக்கம்: 48971
நாளுக்கான விதி எண்: 21

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1654
2024.10.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 83,605,476.48
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 03 09 23 30
விசேட எழுத்து: K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 52998

# கிழக்கின் குரல்

## மட்டக்களப்பு இளைஞர்கள் தே.ம.சவுடன் இணைய வேண்டியது காலத்தின் தேவை

### மட்டு. வேட்பாளர் கந்தசாமி பிரபு



**ஆரையம்பதி தினகரன் நிருபர்**

பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அதிகபட்ச ஆசனங்களை பெறுவது உறுதி எனவும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதனூடாகவே அவர்களின் எதிர்காலம் சிறக்கும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை அழகு நிறைந்ததே எமது நாடு. அதிலும் மட்டக்களப்பு மாவட்டம் பிரத்தியேக இயற்கை வளங்களைக் கொண்டுள்ளது. இம் மாவட்டத்தில் வாழ்கின்ற இளைஞர், யுதிகளுக்கான சிறந்த வழிகாட்டல்களை செய்துகொடுப்பதற்கு நாம் ஒருபோதும் பின்னிற்க போவதில்லை.

மட்டு. மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இன்றும் மக்கள் குடிநீர் வசதி இன்றி உள்ளனர். குறுகிய நோக்கோடும் இலாபமீட்டும் நோக்கோடும் சில அபிவிருத்தி பணிகள் மக்கள் மத்தியில் செய்யப்பட்டுள்ளது. மாறாக தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்காக தொழிற்றுதுறை சார்ந்த அபிவிருத்தி பணிகள் இடம்பெறவில்லை. மறுபுறம் அரச காணிகளை சூட்சுமமாக அடாவடித்தனமாக பிடிக்கப்படுகின்றது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம்நாட்டை கையளித்திருக்கிறோம்.

இந் நாட்டை பொருளாதார நெருக்கடியில் தள்ளி, பல்வேறு ஊழல் மோசடிகளை செய்தவர்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பார்வையிலிருந்து ஒருபோதும் தப்பவே முடியாது. மக்கள் விரைவில் அதனை உணர்வார்கள்.

எனவே, எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தேசிய மக்கள் சக்தியின் கரங்களை பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என அவர் குறிப்பிட்டார்.

## செந்நெறி வித்தியாலயம் காட்டு யானைகளால் சேதம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட போரதீவுப்பற்று மண்டூர் 39 ஆம் கிராமத்திலுள்ள செந்நெறி வித்தியாலயம் காட்டுயானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று (14) அதிகாலை பாடசாலை வளாகத்துக்குள் உள்நுழைந்த காட்டு யானைகள், பாடசாலை சுற்று வேலி, வகுப்பறை கட்டடம், பாடசாலை மேற்கூரை ஆகியவற்றை இவ்வாறு சேதப்படுத்தியுள்ளது.

அதிகஷ்டப் பிரதேச பாடசாலையான இவ் வித்தியாலயத்தில் 148 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வரும் இப் பாடசாலையானது அடிக்கடி காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருவதுடன், மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியிலே கற்றல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, இப் பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக்குறையை தீர்த்து வைப்பதற்கு, பிரதேச அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெ மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## யானை தாக்கி ஒருவர் காயம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

புல்மோட்டை ஜின்னா நகர் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகிய நபரொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புல்மோட்டை ஜின்னா நகர் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான, 35 வயதுடைய நெய்னா லெப்பை முகம்மது அஸ்பர் என்ற நபரே நேற்று (14) அதிகாலை இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர், புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புல்மோட்டை பிரதேசத்தில், மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் உட்புகும் யானைகள் குடியிருப்புக்களையும், வீட்டிலுள்ள பொருட்களையும் சேதப்படுத்தி வருவதுடன், பயிர் நிலங்களையும் அழித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### கல்முனை மாநகர சபையின்

## 2025 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்துக்கு மக்களின் முன்மொழிவுகள் எதிர்பார்ப்பு

**(கல்முனை விசேட நிருபர்)**



கல்முனை மாநகர சபையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு பொது மக்களிடமிருந்து ஆக்கபூர்வமான முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுவதாக மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தெரிவித்தார்.

அதன்படி, பொது நல அமைப்புகள் மற்றும் பொது மக்கள், தமது முன்மொழிவுகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக சமர்ப்பிக்க முடியும் எனவும் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மக்களினதும் பொது அமைப்புகளினதும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை உள்வாங்கி சிறந்ததொரு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து, மாநகர சபையை முன்னோக்கி கொண்டுச்செல்வதற்காக இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படுவதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## திருமலையில் குடிசன மதிப்பீடு கணக்கெடுப்பு ஆரம்பித்து வைப்பு



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

2024 ஆம் ஆண்டுக்கான குடிசன தொகை மதிப்பீடானது திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் நேற்று (14) பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தம்பலகமம் பிரதேச செயலக பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் குறித்த குடிசன தொகை மதிப்பீடு இடம்பெற்றது.

இக்கணக்கெடுப்பானது இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற 15 ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

## 'ரன்விமன' வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியுதவியின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரிவுகளில் அமைக்கப்பட்ட 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று வீடுகளை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் P.T. இர்பானின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதியாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி. அஹமது ஷாபீர் கலந்துகொண்டார்.

மேலும், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர்கள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பாராளுமன்றத்தில் சிறுபான்மை ஆசனங்களை தக்கவைத்து கொள்ள வேண்டியது அவசியம்

### திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் எம்.எம்.மன்சூர்

**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**



சிறுபான்மையினர் தங்கள் இனத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களை தக்க வைத்துக் கொள்ளும் வகையில், தமது வாக்குகளை பயன்படுத்தவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் திகாமடுல்ல மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருமான எம்.எம்.மன்சூர் தெரிவித்தார்.

வெற்றி வாய்ப்பில்லாத கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்குகளையளித்து, தமது சமூகத்துக்கான பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடாது என அவர் குறிப்பிட்டார்.

மேலும், முஸ்லிம் மக்கள் தங்களின் வாக்குகளை, திகாமடுல்ல மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அளிப்பதனூடாக பாராளுமன்ற பிரதிநிதிகளை பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக, கட்சி ஆதரவாளர்களுடனான கூட்டம் நேற்று முன்தினம்(13) சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

திகாமடுல்ல மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய கட்சியில் போட்டியிடாமல் தனித்து மரச் சின்னத்தில் களமிறங்கியுள்ளது.

சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகள், ஒரு சிலரை பகடைக்காய் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளன.

அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாகும். முஸ்லிம் காங்கிரஸின் இதயம் அம்பாறை மாவட்டமாகும். எமது கட்சி விமர்சனங்களுக்கு மத்தியில் பல சமூகப் பணிகளைச் செய்துள்ளது.

எனவே, இம் மாவட்டத்திலிருந்து மூன்று பாராளுமன்ற பிரதிநிதிகளை பெற்றுக்கொள்ள அனைவரும் பேதங்களை மறந்து பெருந்தலைவர் அஷ்ரஃபின் கட்சியினை பலப்படுத்த ஒன்றிணைய வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்த புலம்பெயர் தொழிலதிபர்கள் சதி!

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



இலங்கை தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்த வேண்டும், கட்சியை இல்லாமல்செய்யவேண்டுமென புலம்பெயர் நாடுகளிலுள்ள சில பிரதான தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் சதிகளை மேற்கொண்டுள்ளதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் இரா.சாணக்கியனுக்கும் முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம், இலங்கை தமிழரசுக்கட்சியின் பட்டிருப்பு தொகுதி கிளைகளின் முக்கிய உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது, மேலும் கருத்து தெரிவித்த இரா.சாணக்கியன்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வெற்றியானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நாட்டில் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும். அத்துடன் நிகழ்த்தப்பட்ட உரிமை மீறல்கள், இனப்படுகொலைக்கு நீதிவேண்டும் என்ற கோரிக்கைளை நாம் கடந்த காலத்திலிருந்தே முன்னிறுத்திவருகின்றோம்.

புதிய அரசாங்கத்தால், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் ரவீந்திரநாத்தின் வழக்கு மீள ஆரம்பிக்கப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கு மீள ஆரம்பிக்கப்படுகின்றது. இதில், தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்றவர் இருவர், மட்டு மாவட்டத்தில் ஒருவர் விரைவில் சிறைக்குச் செல்வர். அத்துடன், புதிய அரசாங்கத்துடன் பேசி எதிர்வரும் காலத்தில் மிகுதியாகவுள்ள அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற பதவியையும் சில அரச அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு மக்களுக்கு வரவேண்டிய நிதிகளை இல்லாமல் செய்த அரச அதிகாரிகளுக்கு இனிவரும் அரசாங்கத்தில் நிச்சயம் தண்டனைகள் வழங்கப்படும்.

இங்கு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட எத்தனையோ கிலோமீற்றர் கணக்கான வீதிகள் மீண்டும் மத்திய அரசாங்கத்தினால் மீளப் பெறப்பட்டது. ஏனெனில் சாணக்கியன் கூறி வீதிகளை புனரமைத்தால் அம் மக்கள் சாணக்கியனோடு நிற்பார்கள் என்பதாலாகும். 2020,2021,2022,2023 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதிகூட எனக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

## நாமகள் வித்தியாலயத்தில் சரஸ்வதிசிலை திறந்துவைப்பு



**மணல்சேனை நிருபர்**

சம்மாந்துறை கல்வி வலயத்துக் குட்பட்ட 7 ஆம் கிராமம் நாமகள் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதிசிலையை திறந்து வைக்கும் நிகழ்வு 9 ஆம் திகதி அதிபர் இ.தவேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

அக்கிராமத்தைச் சேர்ந்த அமரர்களான மார்க்கண்டு சின்னத்தங்கம் தம்பதியினர்களின் ஞாபகார்த்தமாக, அவர்களின் பிள்ளைகளால் நிர்மாணித்துக்கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில், சிவசிறி சுதந்திரன்குருக்கள் பிரதிஷ்ட செய்து சிலையினை திறந்துவைத்ததுடன் நிகழ்வில், அப்பாடசாலையின் முன்னாள் அதிபர் சா.நடனசபேசன், ஓய்வுபெற்ற ஆசிரியை சந்திரமணி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

## அம்பாறையில் காற்றுடன் கடும் மழை: வெள்ளத்தால் பொதுமக்கள் பாதிப்பு





அம்பாறை மாவட்டத்தில் நிலவும் காற்றுடன் கூடிய மழையுடனான காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாவிதன்வெளி, கல்முனை முஸ்லீம் பிரிவு, தமிழ் உப பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேலும் பிரதான போக்குவரத்து வீதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளமையால் தூர பிரதேசங்களுக்குச் செல்லும் அனைத்து போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளன. கடந்த இரு நாட்களாக திடீரென பெய்த அடைமழை காரணமாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேசங்களின் பிரதான வீதிகளில் வெள்ள நீர் நிரம்பி ஓடுவதுடன் குடியிருப்புக்கள் பலவும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

சில வீதிகளில் வடிகான்கள் நிறைந்து, வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதாகவும் வடிகான்களை விரைந்து சீர்செய்யுமாறும் கல்முனை மாநகர சபையிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாறுக் ஷிஹான்

## ரயிலுடன் மோதி வேன் விபத்து

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை பாலையூற்று பகுதியில் தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான வேன் ஒன்று ரயிலுடன் மோதி நேற்று (14) காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலுடன், இந்த வேன் மோதியுள்ளதுடன், வேனின் சாரதி மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் சம்பவ இடத்திலிருந்த மக்கள் தெரிவித்தனர்.

மேலும், இப் பகுதியில் விபத்துக்கள் இடம்பெறுவதற்குரிய காரணத்தை கண்டறிந்து உரிய அதிகாரிகள் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# நகர்வலம்



## களுத்துறை பகுதி ரயில் விபத்தில் மூவர் உயிரிழப்பு

### விபத்தா அல்லது தற்கொலையா; பொலிசார் தீவிர விசாரணை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

களுத்துறை தெற்கு, கட்டுக்குருந்த ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் ரயிலில் மோதுண்டு மூவர் உயிரிழந்த சம்பவம் விபத்தா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு மேற்படி மூவரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் களுத்துறை, வெனிவெல்கெட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடைய தந்தையும் அவரது 01 வயது 10 மாத மகன் மற்றும் 49 வயதுடைய மற்றொருவருமே இவ்வாறு ரயிலில் மோதுண்டு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். ரயில் நிலையத்தின் இரண்டாவது மேடையில் காத்திருந்த போது தந்தையும் மகனும் விபத்தை எதிர்கொண்டதுடன் அதனைத் தடுக்க முயன்ற 49 வயதுடைய அயலவர் ஒருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு, குழந்தை களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது உயிரிழந்த 21 வயதுடைய நபர் தற்கொலை செய்து கொள்வதாக உறவினர்களிடம் கூறிவிட்டு ஆண் குழந்தையுடன் ரயில் நிலையத்திற்கு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.அவர் போதைக்கு அடிமையானவர் என்றும், அவரது மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## UNDP உதவிச் செயலாளருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் சந்திப்பு

### அரச நிர்வாகம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க உறுதி



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா இன்று (14) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. "பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதியினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது குறித்தும் இந்த சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மட்டுப்படுத்தியிருப்பது நிதித் துறையில் குறிப்பிடத்தக்க சவால்களுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் சுட்டிக்காட்டியது. மேலும், தேசியப் பொருளாதாரத்தில் விவசாயத் துறை குறைந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதும் இதற்கு காரணமாகிறது.

ஆசிய வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விவசாய உற்பத்தித் திறன் மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை தமது பிரதான வருமான வழியாக கருதவில்லை எனவும் ஜனாதிபதி எடுத்துக்காட்டினார் . இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, பேரம் பேசும் சக்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியாக உள்ள விவசாய சங்கங்களை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், ஊழலைக் குறைப்பதில் முக்கிய கருவியாக டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டினார். தேர்தல் முறைமை சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான சீர்திருத்தங்கள் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண்நிதித் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக பெண் தொழில் முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். புதிய அரசாங்க சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் பாராளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்த சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிட்டல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் ஹாபிஸ் எஸ்.எம். ஹனிபா



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இன்று (15) இரவு 8.05 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சித் தொடரில் முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் ஹாபிஸ் எஸ்.எம். ஹனிபா அதிதியாக கலந்து கொள்கிறார்.

1981ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளராக இணைந்து கொண்ட எஸ்.எம்.ஹனிபா, 1982 ஆம் ஆண்டு தனது இளவயதில் முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளராக நியமனம் பெற்றார். தர்ஜுமத்துல் குர்ஆன் நிகழ்ச்சி மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான நேயர் நெஞ்சங்களை ஈர்த்துக் கொண்டவர்.

பின்னாளில் முஸ்லிம் சேவையின் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றார். பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரின் அமைப்பாளரும் ஸ்தாபக தயாரிப்பாளரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.

## சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினம்



மகான் சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினம் கடந்த 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை கொழும்பு சீரடி சாயி பாபா மத்திய நிலையத்தில் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நடைபெற்றது.

விஜயதசமி தினமான சனிக்கிழமை காலை சீரடி சாயி பாபாவிற்கு "தங்க மகுடம் அணியும் நிகழ்வில் தலைவர் தங்கத்திலான கிரீடத்தை சாயி பாபாவின் ஆசீர்வாதத்துடன் பக்தர்கள் முன்நிலையில் ஊர்வலமாக கொண்டு வருவதையும், அதனை சீரடி சாய் பாபாவிற்கு மகுடாபிஷேகம் செய்வதையும்,



சாய் பஜனையும் மங்கள ஆராத்தியையும், தொடர்ந்து சாயி நிலையத்தில் சூரிய மின் சக்திக்கான மின் இணைப்பை முருகேசு தெய்வநாயகம் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும் காணலாம்.

## வெள்ளத்தினால் கொட்டராமுல்லை பிரதேசத்தில் 200 குடும்பங்கள் பாதிப்பு



(புத்தளம் தினகரன் நிருபர்)

நாட்டில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புத்தளம் மாவட்டத்தில் கொட்டராமுல்லை கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் வீடுகள் மழை வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளமையினால் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றமையை களவிஜயம் மேற்கொண்ட முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய பாராளுமன்ற வேட்பாளருமான எஸ்.எச்.எம். நியாஸிடம் சுட்டிக்காட்டப்பட்டது.அவசரமாக செயற்பட்ட அவர், கொட்டராமுல்லையில் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் போத்தல்கள் ஒரு தொகையை கொட்டராமுல்லை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது.

## ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் தின நிகழ்வு



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 C1 கொழும்பு செரண்டிப் லயன்ஸ் கழகம் இந்த ஆண்டு உலக சிறுவர் தினத்தை கொழும்பு ரிட்ஜ்வே வைத்தியசாலையில் கொண்டாடியது.

இவ்விழாவில் சர்வதேச லயன் கழக மாவட்ட 306 C1 லயன் தலைவர் சின்ஹ சமன் ஜினதாச மற்றும் முதலாவது உப தலைவர் சின்ஹ மகேஷ் பொரலுகொட, மாவட்ட இரண்டாவது உப தலைவர் வைத்திய சிங்க சுசித சேனாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 250 பேர் தேர்தலில் போட்டி

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றதேர்தலில் 16 அரசியல் கட்சிகளும் 09 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவதாக மாவட்ட பிரதான தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான எச். பீ. சுமனசேகர (13) தெரிவித்தார்.

ஒரு அரசியல் கட்சி நிராகரிக்கப்பட்டு, 16 அரசியல் கட்சிகள் உட்பட 09 சுயேச்சைக் குழுக்களினது வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு அணியிலிருந்து பத்துப்பேர் போட்டியிடுவதோடு மொத்தம் 250 பேர் இம் முறை ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதோடு இவர்களிலிருந்து ஏழு பேர் மாத்திரமே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவத்தாட்சி அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தேசியமக்கள் சக்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பத்தி தலைமையிலும் புதிய ஜனநாயக கூட்டணி முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையிலும் ஸ்ரீலங்காபொதுஜன பெரமுன முன்னாள் பிரதியமைச்சர் டி. வி. சானக தலைமையிலும் தேசியமக்கள் சக்தி முன்னாள் பிரதியமைச்சர் திலிப் வெதஆரச்சி தலைமையிலும் போட்டியிடுகின்றது.



2024 பாராளுமன்ற தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு அநுராதபுரம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க அனுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு (11) வருகை தந்த போது பிடித்த படம்.

(படம்:அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## தமிழ் மொழித்தினப் போட்டிகளில் அறபா மாணவிகள் மூவர் சாதனை







(வெலிகம தினகரன் நிருபர்)

அகில இலங்கை தமிழ் மொழித் தின போட்டிகளில் வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக கல்லூரி அதிபர் எம்.டி.எம். முதஹ்ஹர் தெரிவித்தார்.

கலந்து கொண்ட போட்டிகளுள் மூன்று போட்டிகளில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடங்களைச் சுவீகரித்து, பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.

பிரிவு 3 கட்டுரை வரைதல் போட்டியில் எம்.எப்.எப். அம்ரா, பிரிவு 4 இலக்கிய நய போட்டியில் எம். ஆர்.எப். ரிஹ்மா மற்றும் பிரிவு 5 சிறுகதை ஆக்கப் போட்டியில் ஏ.ஐ. எப். இப்லா ஆகியோரே இவ்வாறு தேசிய மட்டத்தில் மூன்றாம் இடங்களைச் சுவீகரித்தவர்களாவர்.

## காட்டு யானை தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் எப்பாவல பகுதியில் இடம்பெற்ற காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக எப்பாவல பொலிஸார் (13) தெரிவித்தனர்.இதன்போது உயிரிழந்தவருடைய மனைவியும் மகளும் காட்டு யானைகளின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.இச்சம்பவம் எப்பாவல பொலிஸ் பிரிவின் நல்லமுதாவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தவர் எப்பாவல நல்லமுதாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 52 வயதுடைய குடும்பஸ்தர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, சம்பவதினம் தனது மகளுக்கு மருந்து எடுப்பதற்காக வேண்டி எப்பாவல நகருக்கு வந்துகொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தற்காப்பு துப்பாக்கிச் சூடு

## பெறுமதியான மரங்களுடன் இருவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**





வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது தற்காப்புக்காக பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரை கைதுசெய்துள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஓமந்தையிலிருந்து மறவன்குளம் நோக்கி கடத்தப்பட்ட மரக்குற்றிகளுடனான வாகனத்தை பொலிஸார் வழிமறித்த போது பொலிஸாரை மோதி விட்டு மரக்குற்றிகளுடன் வாகனத்தில் தப்பிச் செல்ல முற்பட்ட போதே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனையடுத்து வாகனமும் அதிலிருந்த மரக்குற்றிகளும் மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெடிபொருள் வெடித்ததில் இளைஞன் படுகாயம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

மண்ணில் புதையுண்டிருந்த வெடிபொருளை இழுத்து எடுத்தபோது, அது வெடித்ததில் இளைஞனொருவன் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பளை அரசங்கேணி பகுதியில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 19 வயது இளைஞன் படுகாயமடைந்தார்.

அந்தப் பகுதியில் தனக்கு சொந்தமான வயலில் துப்புரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் அது வெடித்து சிதறியதில் அவர் படுகாயமடைந்தார்.

இதில், படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழரசு கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் இன்று சங்கை ஊதுகின்றனர்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**ஓமந்தை விசேட நிருபர்**



தமிழரசு கட்சியிலிருந்து பிரிந்தவர்களே இன்று சங்கை ஊதிக்கொண்டு திரிவதாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நேற்று காலை கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பில் ஏன் நீங்கள் போட்டி போடுகின்றீர்கள் என சிலர் கேட்டிருந்தார்கள். நீண்டகாலமாக ஐக்கியபட வேண்டும் தமிழ்மக்களின் ஒற்றுமையை தென்னிலங்கைக்கு, இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கு காட்டவேண்டும் அப்போதுதான் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கலாம் என கூறிகொண்டிருக்கிறார்கள்.

இது நேற்று இன்றில்லை 1974ஆம் ஆண்டு தொடக்கம் மக்களை உசுப்பேத்தி விடுவதற்காக கோஷங்களாக அரசியலில் திட்டங்களாக, கருத்தாக இருந்திருக்கின்றது.

ஆனால் 74ஆம் ஆண்டில் இருந்து இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகள் தீர்ந்ததாக இல்லை. தீராபிரச்சினையாக, பிரச்சினை அதிகரித்து தான் இருக்கின்றது.

இடப்பெயர்வு, சொத்துக்கள், உயிர்களை இழக்கவேண்டி வந்திருக்கின்றது. அங்கவீனம், இரத்தம் சிந்துதல் என பல துன்பங்களுக்கு மத்தியிலே இந்த கோஷங்களை எழுப்பியிருக்கின்றார்கள். இது ஒரு பிழையான சுயநலமான கோஷமாக தான் உள்ளது.

தமிழரசு கட்சியை எடுத்தால் அது இன்று மூன்று கட்சிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. தமிழரசுகட்சி, ஜனநாயக தமிழரசுகட்சி, சுயேட்சை என பிரிந்திருக்கிறார்கள். தமிழரசு கட்சி என இருப்பவர்களே இரண்டு அணியாக பிரிந்து செயற்படுகின்றார்கள். ஜனநாயகத்தில் கருத்து சுதந்திரம் இருக்க வேண்டும் .அதுதான் அடிப்படை. ஆனால் இங்கு நல்ல நோக்கத்திற்காக அந்த சுதந்திரத்தை பயன்படுத்தாமல் அவர்கள் தம் சுயலாபத்திற்காக தான் பயன்படுத்துகின்றார்கள்.

அதனைவிட தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் இன்று சங்கை ஊதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஈ.பி.டி.பி அப்படி அல்ல ஈ.பி.டி.பி அதிலிருந்து மாறுபட்டது. ஈ.பி.டி.பி கொள்கைகளை நீண்டகாலமாக முன்வைத்து அதனை அடைவதற்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து வருகின்றது. இன்றும் அதை நோக்கியே செயற்பட்டு வருகின்றது.

ஈபிடிபிக்கு போதிய ஆசனங்கள் இல்லை போதிய ஆசனங்கள் இருக்குமாக இருந்தால் மக்களுடைய அபிவிருத்திக்கான, அரசியல் உரிமைக்கான தீர்வு என மூன்று வகையான பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாண ரயில்வே நிலையத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் யுத்தத்துக்கு பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட புகையிரதத் திணைக்களத்தின் பத்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ரயில் நிலைய சூழலில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும் யாழ்ப்பாணம் புகையிரத திணைக்களமும் கிரீன் லேயர் அமைப்பும் இணைந்து இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தது.

அத்துடன் பயணிகளுக்கு இதன்போது மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.



## தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை

# கட்சி உறுப்பினர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளால் மக்கள் அதிருப்தி

## மன்னார் வேட்பாளர் எஸ்.டினேசன்

**மன்னார் குறூப் நிருபர்**

தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சி உறுப்பினர்கள் சிலரின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் கட்சி மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாக தமிழரசு கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை மன்னார் இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மன்னாரில் இரண்டு வேட்பாளர்கள் தமிழரசு கட்சி சார்பாக போட்டியிடுகின்றனர். அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது எமது குறிக்கோளாக உள்ளது.

அவரது கருத்து எமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

எங்களை வெற்றி பெற வைக்க தமது முயற்சிகளையும் மக்கள் மத்தியில் தெளிவூட்டலையும் முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை.கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயற்பாடுகளையே மக்கள் வெறுத்து வருகின்றனர்.



பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்திக்கும் போது குறித்த குற்றச்சாட்டுக்களை மக்கள் என்னிடம் முன்வைத்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நாங்கள் செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் காலத்தில்

# கட்சியிலிருந்து வெளியேறுபவர்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கின்றனர்

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

தமிழரசு கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் கொள்கைப்பிடிப்பில் வெளியேறுவதெனில் தேர்தல் காலத்தில் வெளியேறாமல் வேறு நேரத்தில் வெளியேறிருக்கலாம். எனவே தேர்தல் காலங்களில் வெளியேறுபவர்கள் குறித்து மக்களுக்கு அவதானம் இருப்பதாக பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரின் பொதுவான சின்னத்தை திருடி விட்டார்கள். சின்னத்தை திருடியவர்கள் அதற்கு முன்னர் எங்களுடைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரை திருடினார்கள். திருடுவது என்பது அவர்களுடைய வாழ்க்கை வழிமுறையாகவே இருந்துள்ளது. ஒரு காலகட்டத்தில் திருடர்களாக, கப்பம்பெற்றவர்களாக, கடத்தல்காரர்களாக, கொள்ளையர்களாக, கொலையாளிகளாக இருந்தவர்கள் திருந்திவிட்டார்கள் என்று நம்பி கூட்டமைப்பிற்குள் சேர்த்து வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் திருந்தவில்லை. அதேபோல எங்கள் கட்சியிலிருந்து வெளியேறிய ஒருவர் அபலைப் பெண்ணுக்கு மதுபானசாலை உரிமம் கொடுத்தேன் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். இப்படியானவர்களை மக்கள் இனம் கண்டு ஓரம் கட்ட வேண்டும். அதேவேளை தமிழரசு கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் கொள்கைப்பிடிப்பில் வெளியேறுவதெனில் தேர்தல் காலத்தில் வெளியேறாமல் வேறு நேரத்தில் வெளியேறிருக்கலாம். தேர்தல் காலங்களில் வெளியேறுவர்களை குறித்து மக்களுக்கு அவதானம் இருக்கின்றது. அதனை நாம் மக்களுக்கு சொல்லத் தேவையில்லை எனத் தெரிவித்தார்.



மீசாலை பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வுகள் நேற்று மீசாலை கிழக்கு நாவலர் முன்பள்ளியில் நடைபெற்றன.

## இலங்கை விமானப்படையினால்

# யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம்







இலங்கை விமானப்படையினால் யாழ்ப்பாணம் வடக்கு மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருடத்தை முன்னிட்டு வட மாகாணத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட 'நட்பின் சிறகுகள்' எனும் அமைப்பின் கீழ் 'என்னிடமிருந்து வடக்கிற்கு ஒரு புத்தகம்" எனும் செயற்றிட்டத்தின் ஊடாக வட மாகாணத்தில் 73 பாடசாலைகள் புனர்நிர்மானம், 73 ஆயிரம் புத்தகங்கள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கல், 73 ஆயிரம் மரக்கன்றுகளை வட மாகாணம் முழுவதும் நடுதல் போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்தவகையில் யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடமொன்று அண்மையில் இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக் ஷவினால் திறந்து வைக்கப்பட்டு பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

அத்தோடு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 பாடசாலைகள் மாணவர்களுக்கான புத்தகங்களும் கையளிக்கப்பட்டன. விமானப்படை தளபதிக்கு கலைமகள் வித்தியாலயத்தின் அதிபரினால் நினைவுசின்னமும் பாடசாலையின் 200ஆவது வருட நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட புத்தகமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விமானப்படை நலன்புரி பணிப்பாளர் நாயகம் மற்றும் பலாலி விமானப்படை கட்டளை அதிகாரி, விமானப்படை சிரேஷ்ட அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைத்த பெருமை தமிழ் தலைமைகளையே சாரும்

## முன்னாள் எம்.பி அங்கஜன் குற்றச்சாட்டு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒன்பதாகவிருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை படிப்படியாக ஆறாக குறைத்த பெருமை தமிழ் அரசியல் தலைமைகளையே சாரும் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமான டி.என்.ஏ உள்ளது. அது போலவே இந்த ஜனநாயக தேசிய கூட்டணியும் (டி.என்.ஏ) தனித்துவமானது. எத்தனை போட்டியாளர்கள் வந்தாலும் எமக்கு பிரச்சினையில்லை. போட்டி இருப்பது நல்லது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒன்பதாகவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் தொகையை ஆறாக குறைத்த பெருமை எமது தமிழ் அரசியல்வாதிகளையே சாரும்.

எழுபது வருடங்களாக கதைத்த விடயத்தையே கதைத்துக் கதைத்து மக்களின் இருப்பை பற்றி சற்றும் சிந்திக்காமல் தமது சுயநலனை மாத்திரம் இவர்கள் சிந்திக்கின்றனர். இதனால் தான் எம் மக்கள் வாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார முன்னேற்றம் கருதி இடம்பெயர்ந்தனர். இதற்கு தீர்வு காணாவிட்டால் அடுத்த தேர்தலில் ஆறு எப்படி ஐந்தானது என்று கதைக்க வேண்டி வரலாம்.

வாய்ப்புக்கள் இருக்கும் போதே வெல்ல முடியாதவர்கள் இம்முறை செயல் வீரர்களைத் தாண்டி சொல் வீரர்கள் வெற்றி பெறுவது எப்படி? என மேலும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

# மாற்றுத்திறனாளிகளுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய அக்குறணை வி.எஸ்.எம். சுபைர்



அக்குறணையில் சமூக சேவைகள் இயக்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி இதன் தலைவராக காலஞ்சென்ற வி. எஸ். எம். சுபைர் செயற்பட்டார். 1978 இல் அவர் அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபராக இருந்தார்.

1999 இல் நாங்கள் எல்லோரும் ஓய்வு பெற்ற பின்னர் அனைவரும் சேர்ந்து இந்த சமூக சேவையை ஆரம்பித்தோம். இதன் மூலம் சில வேலைகளைச் செய்துகொண்டு இருந்தோம். அரசியல் தவிர்ந்த சமூக, சமய, பண்பாடு, பொருளாதாரத் துறைகளில் அக்குறணையை மையமாகக் கொண்டு இயங்கி வந்தோம்.

இதன் ஸ்தாபகத் தலைவர் மிகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றக்கூடியவர். அவர் எல்லா விடயங்களையும் நன்கறிந்தவர். எவரையும் நல்லநிலைக்கு தன் பேச்சினால் கொண்டுவரக் கூடியவர். அவர் பேராதனை ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில விரிவுரையாளராக ஆரம்பத்தில் கடமையாற்றினார். 1974, 1975களில் ஆங்கில மொழிக்கான ஆய்வு கூடம் ஒன்றை உருவாக்கி அதற்குப் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவர். பல நாடுகளுக்குச் சென்று வந்தவர். அவர் லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர். ரொட்ரிக் கழகத்தின் அங்கத்தவரும் கூட.

இந்தப் பிரதான இயக்கங்களில் கற்றுக் கொண்ட விடயங்களை ஏன் தமது சமூகத்திலும் முன்னெடுக்கக் கூடாது என்ற சிந்தனையுடன் இந்த விசேட தேவையுடைய நிலையத்தை ஆரம்பித்தார்.

அவர் இந்த விசேட தேவையுடைய நிலையத்தை ஆரம்பிக்கின்றபோது அவருடைய வயதை ஒத்த சக நண்பர்களுடன் அதாவது, மூன்று நண்பர்களுடன் ஆரம்பித்தார். இளம் வாலிபர்களுடைய ஆதரவு கிடைக்கவில்லை.

அவர் அல் அஸ்ஹரில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது நான் அவருடைய வலதுகையாக இருந்து படிப்பித்துக் கொண்டிருந்தேன். அவருடைய கல்விச் செயற்பாடுகளிலும் பக்க துணையாக இருந்தேன். எனது நடவடிக்கைகளை நன்கறிந்தவர். எனினும் ஆசிரியர் தொழிலில் இருந்து நான் கூட ஓய்வு பெற்றுவிட்டேன். அவர் ஒரு தடவை எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். அப்பொழுது, அவர்களுடைய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அதற்கு நானும் சென்றிருந்தேன். இரண்டு இளம் தாய்மார்கள் வந்தார்கள். அதில் ஒருவர் ஆசிரியை. மற்றையது ஒரு குடும்பப் பெண். இவ்விருவரும் எந்தவிதமான முன்னறிவித்தல் இல்லாமல் வந்தார்கள். அவர்கள் வந்து நாங்கள் இருவரும் வலது குறைந்த பிள்ளைகளின் தாய்மார்கள். நாங்கள் மிகவும் கடினமான வாழ்க்கையினை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் இந்தப் பிள்ளைகளை கண்டியில் தான் படிப்பிக்கின்றோம். இவர்கள் மாத்திரம் அல்ல நிறையப் பிள்ளைகள் ஒரு பஸ்ஸுக்கு வருவார்கள். கண்டி மணிக் கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலுள்ள பஸ் தரிப்புநிலையத்தில் இருந்து இன்னுமொரு பஸ் ஒன்றில்தான் போகவேண்டும் என்றார்கள். அது பெண்கள் சமூக அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படுபவை. அது முல்கம்பொலவில் அமைந்துள்ளது. இந்தப் பிள்ளைகளை பஸ்ஸில் செல்லும் போது எச்சில்கள் துப்புவார்கள். வாந்தி எடுப்பார்கள். சிறுநீர் கழிப்பார்கள், பஸ்ஸில் இறங்கி அடுத்த பஸ்ஸைப் பிடிக்க ஏறும் முன்னர் அவர்கள் ஓடி விடுவார்கள். அவர்களை பின்னால் விரட்டவேண்டும். இவை ஒரு கடினமான காரியம். தயவு செய்து அக்குறணையில் ஒரு பாடசாலையை ஆரம்பியுங்கள் என்றார்கள். அந்த பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற செயல் வடிவம் அந்த இரு தாய்மார்களிடத்தில் இருந்துதான் வந்தன.

அந்த இரு தாய்மார்கள் இந்தக் கருத்தை முன்வைத்தபோது நாங்கள் இந்த விடயத்தை கலந்துரையாடலுக்கு எடுத்தோம். இந்த சமூக சேவை அமைப்பில் 50 பேர்வரை அங்கத்தவர்கள் இருந்தார்கள். இதில் பெரியளவில் படித்தவர்கள் இருந்தார்கள். பொறியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள் எனப் பலதரப்பட்டவர்களும் இருந்தார்கள். இந்த விடயத்தைக் கொண்டுவந்தவுடன் அவர்கள் இலகுவில் புரிந்துகொண்டார்கள். எனக்கு அதுபற்றி எவையுமே தெரியாது. உளவளம் மட்டும்தான் தெரிந்து இருந்தது.

மற்றைய விடயங்கள் பெரியளவில் தெரியாது. இதைச் செய்யும் போது நிறைய சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும் இதை எங்களால் செய்ய இயலாது. இதற்கு மாறாக மெல்லக் கற்போம் என்ற பாடசாலை ஒன்றைச் செய்வோம் என்றார்கள். அந்தத் திட்டத்தைச் செய்வதற்கு தீர்மானித்தார்கள். அதில் ஒரு பகுதியைச் செய்யலாம் என்று திட்டம் வகுத்தார்கள். சாதாரண பாடசாலைக்குச் செல்லுகின்ற நிறையப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அதைச் செய்யமுடியாது. அதைவிட முனைந்தனர்.

எப்படியோ இதைச் செய்வோம் என்றவிடயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினேன். இதைக் கட்டாயம் செய்யத்தான் வேண்டும் என்ற விடயத்தில் பின்னர் எல்லோரும் ஆர்வம் காட்டினர். காரணம் அந்த தாய்மார்களின் அனுதாபக் குரல்கள். அதைச் செய்வதற்கு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.




அப்படியானால் இதைச் செய்வதற்கு தற்காலிகமாக பாடசாலை ஒன்றை எடுப்பதற்கு எனக்கே பொறுப்புத் தந்தார்கள். அதைப் பார்ப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடமாகத் தேடினோம். அது பொருத்தமானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும். அப்படித் தேடிக் கொண்டுசெல்லும் போது எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் மிகப் பொருத்தமான இடம் ஒன்று வாடகைக்குகிடைத்தது. அந்த இடத்தின் பெயர் குருகொட. அந்த இடத்தைச் செய்வதற்கு முன்னர் ஆசிரியைமார்களைத் தெரிவுசெய்தோம்.

இப்போதுள்ள அதிபரும் தற்போது கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியையும் அந்நேரத்தில் நியமிக்கப்பட்டவர்கள்தான். அந்த மூன்று ஆசிரியைகளைத் தெரிவுசெய்து பயிற்றுவிப்பதற்காக கண்டியிலுள்ள பெண்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கீழ் இயங்கும் விசேட தேவையுடைய நிலையத்திற்கு அனுப்பி வைத்தோம். அவர்கள் தொடர்ந்து ஆறு மாதங்கள் பயிற்சியினைப் பெற்றார்கள்.

தாபகத் தலைவர் ஓமான் நாட்டில் கொஞ்சக் காலம் கடமையாற்றியவர். அவருக்கு நல்ல சம்பளம் இருந்தது. அவருடைய மகன் லரீப் சுபைர். அவர் ஒரு விஞ்ஞானி. தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். அக்குறணையில் காலநிலை அவதானநிலையம் ஒன்றை செய்துவருகிறார். பிள்ளைகளுக்குத் தேவையான கதிரை மேசைகளை கொள்வனவு செய்வதற்கு எவ்வளவு தேவை என்பதை தலைவர் சுபைர் என்னிடம் மதிப்பீடு அசெய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

அதற்கு இணங்க சகல தளபாட வசதிகளுடன் இஸ்லாமிய பண்பாட்டுக் கலாசார விழுமியங்களுடன் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதி விசேடதேவையுடைய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

அத்தினத்தில் எதிர்பாராமல் சுபைர் வர இயலாமற் போய் விட்டது. கடுமையான சுகயீனம் காரணமா கவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை அன்றிரவு சென்று பார்த்திட்டுவந்தோம். அவர் அன்றே மரணம் அடையலாம் என்ற நிலையில் இருந்தார். அவருக்கு அந்தளவு பேசக் கூட இயலாது. கதிரை மேசை எல்லாம் சரியா. அவர் எல்லாவிடயத்திலும் ஓர் சீரான மனிதர். கண்டிப்பானவர். அன்றையதினம் 18 பிள்ளைகள் வந்தார்கள். அன்றுபிள்ளைகளை எடுக்கும்போது அந்தப் பிள்ளைகளின் தரம் எந்தநிலையில் இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் எப்படி இருப்பார்கள். அவர்களுடைய நடத்தைகள் என்ன? என்ற விடயங்கள் தெரியாது. ஆனால் ஆசிரியை இருந்தார்கள். மூன்று ஆசிரியைகளும் 18 பிள்ளைகளுடன் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் பள்ளிநிர்வாக சபை , ஊரிலுள்ள படித்த முக்கிய பிரமுகர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் எல்லோரும் சமுகமளித்தார்கள். அக்குறணை பிரதேச சபையின் அப்போதைய தலைவர் சுலைமான் உட்பட இப்படி நிறையப் பேர் சமுகமளித்தார்கள். எவ்வாறாயினும் இது ஒருபுதிய அனுபவம். கடினமான அனுபவம். ஒரு இடத்தில் யாருக்கும் நிற்கமுடியாத கட்டமாக இருந்தது. எங்களுடைய ஆசிரியைகள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்கள். இதில் ஒருமகத்தான வெற்றியை அடைய வேண்டும் என்ற தியாக நோக்குடன் செயற்பட்டார்கள்.



இந்தப் பாடசாலையை தேவையைக் கருத்திற் கொண்டு செல்லும் போது இடைக்கிடையே பொருளாதார நெருக்கடிகள் வந்தன. பிள்ளைகளிடம் எந்தக் கட்டணமும் அறவிடவில்லை. ஊரிலுள்ள சிலமுக்கியமான பிரமுகர்கள் பண உதவிகள் செய்தார்கள். அப்பொழுது ஆசிரியைகளுக்கு தலா 30,000 சம்பளம் வழங்க வேண்டும். அதைக் கொடுப்பதற்கு சிலநேரம் வசதிகள் இல்லை. சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லை. போன தடவை அகடன் வாங்கிக் கொடுத்தேன். இந்தமாதம் எப்படிச் சம்பளம் வழங்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று நண்பரிடம் தெரிவித்தேன். அந்தச் சம்பளத்தை நான் தருகிறேன் என்றார். 21 வருடங்களுக்கு முன்னர் அவர் வழங்கிய அந்தச் சம்பளப் பணம் இன்று வரையிலும் அது கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அவர் இதுவரையிலும் ஒருகோடி ரூபாய் வரையிலும் தந்திருப்பார் என நான் நினைக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவர் வேறு கல்லூரியின் தேவைகளையும் நிறைவு செய்துள்ளார். அவர் இப்போது லண்டனில் இருக்கிறார். ஆரம்பத்தில் அவருடைய பங்களிப்பு பெரும் உதவியாக இருந்தன. அத்துடன் ஊரிலுள்ள நிறையப்பேர் வந்து உதவிகள் செய்தார்கள்.

விசேட தேவையுடையவர்கள் விளையாட்டுப் போட்டிகள், கலை கலாசார நிகழ்வுகள் என நடத்தினோம். சுற்றுலாக்கள் கூட்டிக் கொண்டு செல்வோம். வருடாந்தம் விசேட தேவையுடையோர் தினம் கொண்டாடுவோம். மருத்துவ முகாம்கள் நடத்துவோம். இப்படித் தொடர்ந்து செய்தோம்.

பிள்ளைகளுடைய அறிவுமட்டங்கள் கூடுதலாக இருந்தன. எங்களுக்கு யப்பானில் இருந்து கணினி இயந்திரங்கள் கிடைத்தன. 286 என்ற தர வகையிலான கணினி இயந்திரங்கள் கிடைத்தன. ஐந்து கணினி இயந்திரங்களை நாங்கள் வைத்துக் கொண்டு அத்துடன் கற்றலுக்குத் தேவையான உபகரணங்களை இலங்கை முழுவதும் பகிர்ந்தளித்தோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என்று இல்லாமல் எல்லாப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தோம். அந்தப் பொருட்கள் இன்னும் இருக்கின்றன. இந்தப் பொருட்களைப் பங்கிடுவதற்காக ஜப்பான் நாட்டிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் யப்பானிலுள்ள அக்குறணைப் பிள்ளைகளும் வந்தார்கள். அவர்கள் இந்த எல்லாப் பொருட்களை முன்னின்று வழங்கினார்கள். குறிப்பாக நிறையப் பாடசாலைகளுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



## புத்தளம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை; 2173 குடும்பங்களைச்சேர்ந்த 8810 பேர் பாதிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகளில் நேற்று (14) வரை 2173 குடும்பங்களைச் சேர்ந்த 8810 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 29 கிராம சேவகர் பிரிவுகளில் 1276 குடும்பங்களை சேர்ந்த 5744 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 21 கிராம சேவகர் பிரிவுகளில் 293 குடும்பங்களைச் சேர்ந்த 960 பேரும், தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 6 கிராம சேவகர் பிரிவுகளில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.



அத்துடன், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 5 கிராம சேவகர் பிரிவுகளில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேரும், சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 3 கிராம சேவகர் பிரிவுகளில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 557 பேரும், மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளில் 73 குடும்பங்களைச் சேர்ந்த 251 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளில் 305 குடும்பங்களைச் சேர்ந்த 965 பேரும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவுகளில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 129 பேரும், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒரு கிராம சேவகர் பிரிவுகளில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில் 18 பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம். எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

## கோபியாவத்தை மாதர் ஒன்றிய ஏற்பாட்டில் மீலாத் தின நிகழ்வு



பேருவளை விசேட நிருபர்

பேருவளை நகர சபை பகுதிக்கு உட்பட்ட கோபியாவத்த மாதர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான மாபெரும் மீலாதுன் நபிவிழா நிகழ்வு கோபியாவத்தவில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சிறார்களிடையே கிராத், கஸீதா, பேச்சு, அறிவுக்களஞ்சியம் உட்பட பல்வேறு இஸ்லாமிய போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சமூக சேவையாளரும் எழுத்தாளருமான எம்.பாஸி ஸுபைரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற விழா புனித ஸுப்ஹான மௌலீதுடன் ஆரம்பமானது.

பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.ஏ. குமார் பிரதம அதிதியாகவும் மொல்லியமலை ஹிழ்ரியா பள்ளிவாசல் கதீப் முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி எம்.எஸ்.எம்.பாஸில் (அஷ்ரபிஅம்ஜதி) விசேட பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

கோபியாவத்த கிராமத்தில் மாதர் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டு முதல் தடவையாக மீலாத் விழாவை நடத்தி பிரதேச சிறார்கள் திறமைகளை வெளிக் கொணர மேற்கொண்ட முயற்சியை அதிதிகள் இங்கு பாராட்டிப் பேசினர்.

பேருவளை பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி ஜெயந்த வட்டகெதர, மாதர் சங்கத் தலைவர் பாத்திமா ரிஹானா, செயலாளர் பாத்திமா ரிபாதா,உறுப்பினர் மௌலவியா நூருல் ஹனான், சமூக சேவையாளர் முகமது அக்ரம்.

முகத்தம் எம் எஸ் முர்தாஜ், சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம். முக்தார், தினகரன் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த எம்.என்.எம். றிம்ஸான், தர்கா நகரைச் சேர்ந்த சமூக சேவையாளர் முஹம்மத் பவ்மி, சமூக சேவையாளர் எம்.எம். பிஷ்ர் உட்பட பலரும் நிகழ்வில் பங்கு பெற்றினர்.

திருகோணமலை மாவட்டத்தில்

# தமிழர்களின் வாக்களிப்பு வீதம் 90% எனில் தமிழரசு கட்சி போனஸ் ஆசனத்தை பெறும்

## முன்னாள் எம்.பி.சண்முகம் குகதாசன்

**கிண்ணியா மத்திய நிருபர்**



பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் 90 சதவீதமாக அமையுமாயின், பாராளுமன்றத்தில் இரண்டு ஆசனங்களை தமிழர் தரப்பிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென, இலங்கை தமிழரசு கட்சியின் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில், தமிழ் பிரதிநிதித்துவத்தின் இருப்பை பாதுகாத்துக்கொள்வதே எமது ஒரே இலக்காகும்.

தமிழ் பிரதிநிதித்துவத்தின் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக டெலோ, புளோட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளோடு இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசி கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

வடகிழக்கில் ஏனைய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுகின்றோம்.

இம் மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் தனித்து போட்டியிடுவதானது, தமிழ் மக்கள் நலனுக்கு எதிரானதாகும்.

தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில், சண்முகம் குகதாசன், கந்தசாமி ஜீவரூபன், காளிராசா கோகுலராஜ், கதிர்காமத்தம்பி சுந்தரலிங்கம், திலகரத்தினம், துசியந்தன், ஆரியபால யதீந்திரா பற்றும் கனகசபை தேவகடாட்சம் ஆகியோர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலில்

# மட்டு. மாவட்டத்தில் 392 பேர் களத்தில் 22 கட்சிகள், 27 சுயேச்சை குழுக்கள் போட்டி

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

பாராளுமன்ற தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 22 அரசியல் கட்சிகள் மற்றும் 27சுயேட்சை குழுக்களிலிருந்து 392 பேர் போட்டியிடவுள்ளதாக, மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து, இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் கட்சி, புதிய ஜனநாயக கூட்டமைப்பு, தமிழர் விடுதலை கூட்டணி, உட்பட 23 அரசியல் கட்சிகளும் 27சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

மாவட்டத்தில் மொத்தமாக 49 குழுக்களில் இருந்து 392பேர் களத்தில் உள்ளனர். முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள், முன்னாள் ஆளுநர்கள், முன்னாள் முதலமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் புதிய முகங்களும் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது சிறுவன் உயிரிழப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை பிராதன வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 16 வயதுடைய சிறுவன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தானது, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

கல்முனையிலிருந்து களுவாஞ்சிக்குடியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில், கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 16 வயதுடைய ரவீந்திரன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

# விரிவுரையாளர் கலாநிதி ஹம்தூன் பேராசிரியராகப் பதவி உயர்வு

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



கிழக்குப் பல்கலைக்கழக அரபியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பீ.எம்.ஹம்தூன் அண்மையில் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கலைமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

அதனைத்தொடர்ந்து, மொழிபெயர்ப்பியலில் டிப்ளோமா பட்டத்தினையும், கலாநிதி பட்டத்தினையும் இந்தியா உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார்.

அட்டாளைச்சேனையில்

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பொருளாதாரம் பாதிப்பு ; மக்கள் கவலை

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை மீலாத்நகர் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை (14) புகுந்த காட்டு யானைகள் கிராமத்தில் பல தேசங்களை விளைவித்துள்ளன.

அக்கிராமத்தில், கடையினை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன் மரங்களையும் நாசமாக்கியுள்ளது.

மீலாத்நகர் கிராமம் மற்றும் சம்பு நகர் கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் தமது பொருளாதாரம் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக அக் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை முல்லைத்தீவு மீலாத் நகர் கிராமம் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தாக்கதலுக்குள்ளாகுவதால், இதனை தடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் வருடாந்த வர்த்தக கண்காட்சி நிகழ்வு

**கிண்ணியா மத்திய நிருபர்**



கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட, சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் வருடாந்த வர்த்தக கண்காட்சி நேற்று (14) பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும், கிண்ணியா பிரதேச சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, இக் கண்காட்சியை பிரதேச செயலாளர் எம்.எச்.எம். ஹனி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். உள்ளூர் உற்பத்தியை சந்தைப்படுத்தி, தொழில் முயற்சியளர்களை ஊக்குவிப்பதும், அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுமே இக் கண்காட்சியின் நோக்கம் என பிரதேச செயலாளர் எம்.எச்.எம். ஹனி தெரிவித்தார். இந் நிகழ்வில், பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. முஜீப் மற்றும் பிரதேச சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABD-9651 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABC-2729 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAU-0518 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAQ-2701 | பஜாஜ் | 2014 | கண்டி |
| AAR-1010 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAG-0996 | பஜாஜ் | 2013 | ராகம |
| YZ-5441 | பஜாஜ் | 2012 | ராகம |
| AAH-2696 | பஜாஜ் | 2012 | ராகம |
| YS-9891 | பஜாஜ் | 2011 | ராகம |
| YD-3258 | பஜாஜ் | 2010 | ரத்தினபுரி |
| QR-8528 | பஜாஜ் | 2008 | ராகம |
| QJ-2969 | பஜாஜ் | 2007 | ராகம |
| QY-0050 | பஜாஜ் | 2005 | ராகம |
| QD-5011 | பஜாஜ் | 2005 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KR-3408 | டாடா | 2011 | ராகம |
| KS-9169 | டாடா | 2011 | ராகம |
| 301-2298 | மிட்சுபிஷி | 1999 | ராகம |

| டூயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| HC-4314 | டொயோட்டா | 2003 | ராகம |
| 53-5575 | ISUZU | 1987 | ராகம |
| 52-2918 | டொயோட்டா | 1987 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAH-4889 | டாடா | 2019 | ராகம |
| DAF-9582 | மஹிந்திரா | 2018 | ராகம |

| QUADRICYCLE | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| GAA-1244 | பஜாஜ் | 2019 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285
திருகோணமலை 0773 382 612
ரத்தினபுரி 0774 857 351
கண்டி 0773 972 860
நுவரெலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
எம்பிலிபிட்டிய 0773 610 188
பாணடுரா 0775 215 263
மாத்தறை 0743 601 121
சிலாவ் 0770 288 804


# நாடு முழுவதும் ஒசுசல மருந்தகங்களின் வலைப்பின்னலை விரிவுபடுத்த நடவடிக்கை



பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்து வகைகளை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு அமைவாக, நாடளாவிய ரீதியில் ஒசுசல மருந்தகங்களின் வலைப்பின்னல் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒசுசல 62 ஆவது மருந்தக கிளையை கிழக்கு மாகாணத்தில் பொத்துவிலில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட மக்களுக்கு தரமான சுகாதார சேவையை வழங்குவதற்காக பொத்துவில் ஆரம்ப வைத்தியசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டதுடன், இந்த வைத்தியசாலையில் வழங்கப்படும் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு மாகாண சபையின் அனுமதி மற்றும் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் இதன் போது கூறினார்.

இதற்கமைவாக , கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ள இரண்டு புதிய கட்டிடங்களும், வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய கட்டிடமும், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பொதுமக்களிடம் கையளிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால மேலும் தெரிவித்தார்.

# மாவனல்லை ஸாஹிராவில் ஆக்கத்திறன் கண்காட்சி





மாவனல்லை ஸாஹிரா கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தும் நோக்கில் 'ZEEKIDEX 2024' எனும் தொனிப்பொருளில் கண்காட்சியயொன்று அதிபர் ஏ.எம். நௌஷாத் தலைமையில் நடைபெற்றது.

இரு நாட்களாக நடைபெற்ற இவ் கண்காட்சியின் ஒரு அங்கமாக மலசலகூடத் தொகுதி மற்றும் பழைய மாணவியர் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்ட செயற்பாட்டறையும் திறந்து வைக்கப்பட்டது. சுமார் ஏழாயிரம் பேர் அளவில் கலந்து சிறப்பித்த இவ் கண்காட்சியில் தொழிலதிபரான கமால்தீன் மரிக்கார், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ரிலாப் ஹலீல் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவ ,மாணவியர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# காலி பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாவின் நூல் நிலைய திறப்பு விழா 17ஆம் திகதி

**பேருவளை விசேட நிருபர்**




தென்னிலங்கையின் மிகவும் பழைமை மிகு அரபுக் கல்லூரியான காலி கோட்டை அல்பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் ஞாபகார்த்த நூல் நிலைய திறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி (20241017) போயா தினம் பிற்பகல் 3:30 மணிக்கு நடைபெறும்.

கலாபீட நிர்வாக சபைத் தலைவர் எம். நுஸ்கி முஹம்மத் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் முஹம்மத் அஹ்ஸன் மரிக்கார் பிரதம அதிதியாகவும், ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவும், காலி அலிய்யா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளருமான அல்உஸ்தாத் மௌலவி எம்.இஸட் முஹம்மத் ஸுஹூர் (பாரி) விஷேட அதிதியாகவும் கலந்து கொள்வர் என கலாபீட பணிப்பாளர் ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி எம்.எப்.எம் பாஸில் (பஹ்ஜி) தெரிவித்தார்.

அதிபர் கலீபதுஷ்ஷாதுலி முஹம்மத் ரஸூக் (பஹ்ஜி) யின் வழிகாட்டலின் கீழ் விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கிதாபுகள், ஹதீஸ் கலை நூல்கள் மற்றும் அரபு, தமிழ், சிங்களம், ஆங்கில நூல்களைக் கொண்ட வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் நூல் நிலையம் பல இலட்ச ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டிற்கும், சமூகத்திற்கும் தலை சிறந்த இஸ்லாமிய புத்திஜீவிகளை அல்பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யா கலாபீடம் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விஷேட அம்சமாகும். திறப்பு விழாவில் அதிபர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம். ரஸூக் (பஹ்ஜி) பணிப்பாளரும், கொழும்பு உம்மு ஸாவியாவின் பேஷ் இமாமுமான ரயீஸுல் முகத்தம் மௌலவி எம். எப்.எம் பாஸில் (பஹ்ஜி) கலாபீட நிர்வாக சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஸேர். முஹம்மத் மாக்கான் மாக்காரது குடும்ப உறுப்பினர்கள், உலமாக்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொள்வர்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் 09 ஆசனங்களுக்காக 312 பேர் இம்முறை தேர்தலில் போட்டி

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் 09 ஆசனங்களை பெற்றுக் கொள்வதற்காக 312 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதில் அங்கீகரிக்கப்பட்ட 17 அரசியல் கட்சிகளும் 09 சுயாதீன குழுக்களும் போட்டியிடுவதற்காக தகுதி பெற்றுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட செயலாளரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான ரஞ்சித் விமலசூரிய தெரிவித்தார்.

இம்முறை நடைபெறப்போகும் பாராளுமன்ற பொது தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த 18 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் பிரஜா தந்திரவாதி எக்ஸத் பெறமுன பக்ஷய என்ற கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு இறுதியில் 17 அரசியல் கட்சிகளும் 09 சுயேச்சை குழுக்களுமே தகுதி பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு மாவட்டம்

### மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2024

கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரித்தான சுகாதார நிறுவனங்களுக்கு 2024ஆம் வருடத்திற்கான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை 2024-10-15ஆம் திகதி முதல் 2024-11-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை பின்வரும் வகையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| லொட் இலக்கம் | உபகரணம் | எண்ணிக்கை | விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|
| 11 | Point of care ultra sound scan machine | 02 | 2,500.00 | 2024-10-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும். |
| 12 | Patient monitors | 10 | 2,000.00 | |
| | ECG machine | 02 | | |

தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 0112326248 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென) வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து இந்த அலுவலகத்தின் நிர்வாக அதிகாரியின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' லொட் இல. (……) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10**

### மாவட்டச் செயலகம் - பதுளை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

01. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 7.07 மில்லியன் ரூபா சிவில் மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான மாளித்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ளக வீதிகளுக்கு கொங்கிறீட் இடுதல் (BD/FMG/PROC/2024/18) எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதுளை மாவட்டச் செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் - CIDA (ICTAD) C7 அல்லது C6 தரத்தில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறும் தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு விலைமனுதாரர்கள் விலைமனு தரவின் 4.4 உப அத்தியாயத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள மூலப் பிரமாணங்கள் உட்பட, ஏனையவற்றிற்கு இடையே பின்வரும் குறைந்தபட்ச மூலப் பிரமாணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. நிதி நிலைமை

i. கடந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி அளவு குறைந்தபட்சம் 10 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

ii. அணுகக்கூடிய அல்லது கிடைக்கத்தக்க நிதி ஆதாரங்களின் குறைந்தபட்ச அளவு 5 மில்லியன் ரூபாவாக விருத்தல் வேண்டும்.

ஆ. நிர்மாண அனுபவம்

i. கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் 5 மில்லியன் ரூபா பெறுமதியான குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தின் அனுபவம்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை மாவட்டச் செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0552222048 மற்றும் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பதுளை மாவட்டச் செயலகம், நிதி முகாமைத்துவப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் மட்டும் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் பதுளை மாவட்டச் செயலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. சகல விலைமனுக்களுடனும் 70,700.00 ரூபா ரொக்கப் பணம் அல்லது 14,1400.00 ரூபா வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ரொக்கப் பணமாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்தால் அதை பதுளை மாவட்டச் செயலகத்தில் வைப்புச் செய்யலாம் அல்லது வங்கி உத்தரவாதத்தைத் தெரிவு செய்தால், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் மற்றும் 10ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும். (2025-01-30ஆம் திகதி வரை விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்).

08. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

09. விலைமனுக்கள் நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பதுளை மாவட்டச் செயலகத்தின் கூட்ட அறையில் (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி) சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரச அதிபர் கூட்ட அறையில் இடம்பெறும். (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**
**0552222465**

## உலர்ந்த விறகு/உலர்ந்த மருந்துகள் வழங்குவதற்காக வழங்குநர்களை பதிவு செய்தல் – 2025

### ஆயுர்வேத திணைக்களம் (மேல் மாகாணம்)

மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் காணப்படும் கீழ்க்காணும் வைத்தியசாலைகளுக்கு 2025.01.01 முதல் 2025.12.31 வரையான காலத்திற்குள் (அத்திகதியும் உட்பட) தேவைப்படும் உலர்ந்த விறகுகள்/உலர்ந்த மருந்துகளை வழங்குதல் சார்பாக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக இலங்கையரிடம் அல்லது பதிவு செய்த நிறுவனங்களில் இருந்து 2024.10.15 முதல் 2024.11.04 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உலர்ந்த மருந்துகள் / உலர்ந்த விறகுகள் வழங்குதல் மேற்கொள்ள வேண்டிய நிறுவனம்**

மீகொட, மீரிகம, மொல்லிகொட, லுனாவ, நேபொட, கந்துபொட, ஆனியாகந்த, ஜம்புரலிய மற்றும் வீதியகொட ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் நிட்டம்புவ மத்திய மருந்தகத்திற்காக

**02. விண்ணப்பங்கள் கோரல்**

2024.10.15 முதல் 2024.11.05 பி.ப.2.00 வரை

**03. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்**

- 2024.10.15 முதல் 2024.11.04 வரை திங்கள் மற்றும் வியாழன் தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை நுகேகொட, நாவல வீதி, இல.18 எனும் முகவரியில் அமைந்துள்ள மேல் மாகாண ஆயுர்வேத திணைக்கள பெறுகைப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**04. பதிவுசெய்தற் கட்டணம்**

பதிவு செய்தற் கட்டணம் ஒரு வழங்கல் பொருளுக்காக ரூ.500.00 அகும். உலர்ந்த விறகு மற்றும் உலர்ந்த மருந்துப்பொருட்கள் ஆகிய இரு பொருட்களும் ரூ.1000.00 ஆகும். 2024.10.15 முதல் 2024.11.04 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிவதுடன் (பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது) குறித்த தொகை ஆயுர்வேத திணைக்களம் (மே.மா) இல. 18, நாவல வீதி, நுகேகொட அலுவலகத்தின் கணக்குப் பிரிவு காசாளர் பிரிவிற்கு வருகைதந்து அல்லது ஆயுர்வேத ஆணையாளர் மேல் மாகாணத்தின் பெயரில் இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் கணக்கு இலக்கம் 2323338 இற்கு வைப்புச் செய்வதன் மூலம் மேற்கொள்ளலாம்.

**05. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை**

2024.11.04 பி.ப. 3.00 இற்கு முன் மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்குப் பிரிவு காசாளரிடம் குறித்த பதிவு கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் மே.மா-1 பற்றுச்சீட்டின் மூலப்பிரதி அல்லது வங்கிக்கு காசு செலுத்தும் போது கிடைக்கப்பெறும் பற்றுச்சீட்டு (Bank Slip)ஐ விண்ணப்பத்துடன் இணைத்து "தலைவர், பெறுகைக்குழு, ஆயுர்வேத திணைக்களம் (மே.மா) இல-18, நாவல வீதி, நுகேகொடை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது அம் முகவரியில் அமைந்துள்ள மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2024.11.05 பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு உள்ளிடலாம் அல்லது விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம். (குறித்த தினத்திற்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

விண்ணப்பங்களை அனுப்பும் உறையை முத்திரையிட்டு அனுப்ப வேண்டியதுடன், உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2025ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

**06. மேலதிக விபரங்களுக்கு**

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 4.00 இற்குமிடையில் வருகைதந்து அல்லது தொலைபேசி இல. - 0112820792 அல்லது 0112820796ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**07.** விண்ணப்பதாரிகளை பதிவுசெய்தல் அல்லது செய்யாதிருக்கும் உரிமை திணைக்கள பெறுகைக்குழு இற்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஆயுர்வேத திணைக்களம் (மே.மா)**
**இல.18, நாவல வீதி, நுகேகொடை**

Repeat Your ad For Better Offers

## பெறுகை அறிவித்தல்

### வெலிகேபொல பிரதேச சபை – சப்ரகமுவ மாகாணம்

01. பின்வரும் வேலை விடயங்களுக்காக வெலிகேபொல பிரதேச சபையின் செயலாளரினால் 2024-10-30ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | வேலை விடயம் | சராசரியாக மதிப்பிடப்பட்ட வேலையின் பெறுமதி (ரூ. மில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி (ரூபா) | ஒப்பந்தப் பதிவின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | முன் பள்ளிப்பருவ அபிவிருத்தி மற்றும் பகல்நேர காப்பக நிலையமொன்றை நிர்மாணித்தல் | 11.8 | 5,000.00 | 118,000.00 | C5/C6 |

02. இந்தக் கேள்வி கோரல் போட்டி ரீதியிலான பெறுகை நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதுடன், இந்த வேலை 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவானதால் 04/2016(II) மற்றும் 4/2016(III)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் இயைபுடைய (CIDA) தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரர்களின் தெரிவு இடம்பெறும். அந்தச் சுற்றறிக்கைக்கு இயைபாக அதன் பின்னர் வெளியிடப்பட்ட 03/2020 மற்றும் 03/2020(i) மற்றும் 04/2016(IV)ஆம் இலக்க சுற்றறிக்கையும் பெறுகை செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாகும்.

03. 2024-10-15ஆம் திகதி முதல் 2024-10-29ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் கட்டணத்தைச் செலுத்தி வெலிகேபொல பிரதேச சபை அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. சகல கேள்விதாரர்களும் இந்த வேலைகளுக்காக மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப் பிணையின் பெறுமதிக்கு இயைபான கேள்விப் பிணை முறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை 2024-10-30ஆம் திகதி முதல் 2025-02-29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ''செயலாளர், பிரதேச சபை, வெலிகேபொல'' என பயன்பெறுநரின் பெயரைக் குறிப்பிட்டு பெற்றுக்கொண்ட முறியொன்றின் மூலம் அல்லது இயைபுடைய வேலையின் பெயரில் கேள்விப் பிணை முறித் தொகையாக பிரதேச சபையில் இயைபுடைய பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இந்த வேலை தொடர்பான விபரங்களை வெலிகேபொல பிரதேச சபைக்கு வருகை தந்தோ அல்லது 045-2270410 எனும் தொலைபேசி இலக்கத்தில் ஊடாக அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தயாரித்து வெவ்வேறான உறைகளில் ஒவ்வொரு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு, முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட இரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. அவ்வாறே முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2024-10-30ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு வெலிகேபொல பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது அந்த கேள்வி ஆவணங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

08. 2024-10-30ஆம் திகதி மு.ப. 11.15 மணிக்கு வெலிகேபொல பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. கேள்விகளை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கலிகமுவ பிரதேச சபை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

10. அனைத்து கேள்விகளும் 2025-01-29ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**செயலாளர்,**
**வெலிகேபொல பிரதேச சபை.**
**ஓபநாயக்க.**
**2024-10-14**

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

# 2025ஆம் வருடத்தில் சிலாபம் பிரதேச சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்

1. 2025ஆம் வருடத்தில் இச்சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்வதற்காக ஆர்வமுள்ள தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. 2024.12.15ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விண்ணப்பங்களும், செயலாளர், சிலாபம் பிரதேச சபை, குருநாகல் வீதி, மாதம்பை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பங்களை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ‘2025ஆம் வருடத்தில் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்’ என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
3. வழங்கல் உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவிற்கான பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
4. ஒப்பந்தக்காரர்கள் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 10,000.00 ரூபாவிற்கான பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
5. காசாகச் செலுத்துவதாயின் சிலாபம் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். காசோலை மூலம் செலுத்துவதானால் ‘செயலாளர், சிலாபம் பிரதேச சபை,’ என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவ்வாறு காசுக்கட்டளையுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| இலக்கம் | வகுதி | உருப்படி இலக்கம் | உப வகுதி - பொருட்கள் வழங்குதல் |
|---|---|---|---|
| 1 | அலுவலக உபகரணங்கள் | 1.1 | தொலைநகல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், இலத்திரனியல் தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் |
| | | 1.2 | அலுவலக மற்றும் ஏனைய தளபாடங்கள் (மேசைகள், கதிரைகள் உருக்குக் கபட்டுகள் போன்றவை) |
| | | 1.3 | அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள் (Clips, Pins Pens, Pencils, File Covers, Ink & Batteries, Sharpeners, Scissors, Erasers, Highlighters, Tipex, Stapler Machines, Punchers Removers Glue Bottles, Cello Tapes, PVC Tapes, Masking tapes, Cello Tapes, dispensers, Foot Rulers, Filling Packets. Box Files, Marker Pens.. etc.) |
| 2 | கணனி சார்ந்த பாவனைப் பொருட்கள் மற்றும் பொருட்கள் | 2.1 | டோணர், ரிபன், காட்ரிஜ் CD மற்றும் DVD |
| 3 | கணனி, கணனி வன்பொருள் மற்றும் கணனி மென்பொருள் | 3.1 | PC’s Laptops, Printers, Scanners Monitors, etc.. |
| | | 3.2 | Networking equipment (Routers, Switches, etc......,) |
| | | 3.3 | Power Supply Unit (UPS) |
| | | 3.4 | Operating System, SW licence, Database & Application Software |
| 4 | கணனி சேவைகள் மற்றும் திருத்தவேலைகள் | 4.1 | கணனி சேவை துணைப்பாகங்கள் மற்றும் பராமரித்தல் |
| 5 | அச்சு வேலைகள் | 5.1 | கடிதத் தலைப்புக்கள், விஸிட்டிங் கார்ட்கள் அச்சுப் புத்தகங்கள் மற்றும் கடித உறைகள் |
| | | 5.2 | கணனி படிவங்கள், பெயர்ப் பலகைகள் மற்றும் பதாகைகள், கட்டவுட்கள், ஸ்டிக்கர் அச்சடித்தல், ஞாபகச் சின்னங்கள் |
| 6 | மின்சார உபகரணங்கள் | 6.1 | வீதி விளக்குகள் மற்றும் ஏனைய மின் உகரணங்கள் |
| 7 | வாகன உதிரிப்பாகங்கள் | 7.1 | பெற்றறி, டயர் மற்றும் டியூப்கள் |
| | | 7.2 | வாகன திருத்தவேலைக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் வழங்குதல் |
| 8 | பராமரிப்பு வேலைகளுக்குத் தேவையான கொங்கிறீட் பொருட்கள் | 8.1 | ஹியும் குழாய்கள், கொங்கிறீட் கம்பி தூண்கள், ஏனைய கொங்கிரீட் பொருட்கள் வழங்கல் |
| 9 | விளையாட்டுத்துறைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 9.1 | விளையாட்டுத்துறை உபகரணங்கள் |
| | | 9.2 | விளையாட்டுத்துறை சீருடைகள், சப்பாத்துக்கள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| 10 | சீருடைகள் மற்றும் திரைச் சீலைகள் | 10.1 | சீருடைகள், சப்பாத்துக்கள், முன்பள்ளி உபகரணங்கள் |
| | | 10.2 | திரைச்சீலைகளை வழங்குதல் மற்றும் ட்ரைகிளீன் வேலைகள் |
| 11 | நூலகப் புத்தகங்கள் சஞ்சிகைகள் செய்தித் தாள்கள் | 11.1 | நூலகப்புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், பழைய செய்திப் பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல் |
| 12 | கட்டிடப் பொருட்கள் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கல் | 12.1 | கொங்கிறீட் கல், மணல், பொறியியலாளர் செங்கற்கள், புளொக்கற்கள், ABC, முன்கலவை மற்றும் வீதி நிர்மாணிப்புக்களிற்கான பொருட்களை வழங்கல் |
| | | 12.2 | சீமெந்து இரும்பு, பூச்சு வகைகள், கூரைத் தகடுகள் மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள் |
| | | 12.3 | சுகாதாரப் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் (கிருமிநாசினிகள், களை நாசினிகள், ஹார்பிக் உட்பட பூங்கா அலங்காரப் பொருட்கள் மற்றும் உர வகைகள்) |
| | | 12.4 | விளக்குமாறுகள், தும்புத்தடிகள், தூரிகைகள், சிறிய கால் துடைப்பான்கள், லைசோல், கம்பூட்ஸ், குப்பைத் தொட்டிகள், கையுறைகள், வாய் கவசங்கள், பிரம்புக் கூடைகள் மற்றும் மழை அங்கிகள், ஹாபிக் சவர்க்கார வகைகள் |
| | | 12.5 | தார் மற்றும் கோலாஸ் |
| | | 12.6 | வீதி நிர்மாணத்திற்குத் தேவையான கிரவல் வழங்குநர்கள் மற்றும் கிரவல் போக்குவரத்து செய்வோர் |
| 13 | ஏனைய சேவைகள் | 13.1 | எரிபொருள்கள், எரிவாயு சிலிண்டர்கள் |
| 14 | நாய்களுக்கான கழுத்துப் பட்டிகள் | 14.1 | நாய்களுக்கான கழுத்துப்பட்டிகளை வழங்குதல் |
| 15 | வீட்டுத் தோட்டம் மற்றும் அலங்கரிப்பு உபகரணங்களை வழங்கல் | 15.1 | விதை வகைகள், செடிகள் மலர்ச்சாடிகள் |
| 16 | விவசாய உபகரணங்களை வழங்குதல் | 16.1 | வீச்சுக்கத்திகள், மனைக்கத்திகள், மண்வெட்டிகள், கத்திகள், சவல்கள் உட்பட விவசாய மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள். |
| **இல** | **வகுதி** | **உருப்படி இலக்கம்** | **உப வகுதி - சேவைகளை வழங்கல்** |
| 17 | சேவைகளை வழங்கல் | 17.1 | வாகனங்கள், இயந்திராதிகளை மற்றும் ஏனைய உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| | | 17.2 | அனைத்து வகையான உருக்கி ஒட்டும் வேலைகள் மற்றும் திருத்தவேலைகள் |
| | | 17.3 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| | | 17.4 | டயர்களை மீள் நிரப்புதல் |
| | | 17.5 | வளிச்சீராக்கி இயந்திரங்கள் மற்றும் ஏனைய மின் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| | | 17.6 | வீச்சுக்கத்தி, மனைக்கத்திகள், மண் வெட்டிகள், கத்திகள் சவல்களின் திருத்தவேலைகள் |
| | | 17.7 | வீதிகள் அழுத்தும் பெக்கோ இயந்திரங்கள், மோட்டார் கிரேடர்கள் மற்றும் ஏனைய இயந்திராதிகளை வாடகை அடிப்படையில் வழங்கல் |
| | | 17.8 | உற்சவங்களுக்கான மேடைகள் ஒலிபெருக்கிகள் மின்னொளி, பிளாஸ்டிக் கதிரைகள் கூடாரங்கள் உட்பட ஏனைய உற்சவங்களுக்கான பொருட்கள் வழங்குதல் |
| | | 17.9 | உற்சவ வேளைகளுக்குத் தேவையான உணவு பானங்களை வழங்குதல் |
| | | 17.10 | மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குதல் |
| 18 | ஒப்பந்தக்காரர்கள் | 18.1 | வடமேல் மாகாணத்தில் வசிக்கும் சீடா (CIDA) நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (விண்ணப்பப்படிவங்களின் மாதிரிப் படிவம் தரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்களுடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)<br>I CIDA நிறுவனத்தின் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதி<br>II பெ.சே.வரிக்கான (VAT) பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெட் வரி செலுத்திய சான்றிதழின் பிரதி (பதிவு செய்யவில்லையானால் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான பிரகடனம்) |

**நிபந்தனைகள்**

- பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக உரியவாறு வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் கட்டளை பிறப்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் பொருட்களையும் சேவைகளையும் முறைப்படி வழங்குவதற்குத் தவறுதல், மற்றும் வழங்கப்படும் பொருட்களினதும் சேவைகளினதும் தராதரம் உரியவாறு பேணப்படாமை போன்ற காரணங்களினால் உடனடியாக அவர்களின் பெயர்கள் வழங்குநர் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, அபகீர்த்தியானோர் பட்டியலில் உட்படுத்தப்படும்.
- வழங்குநர்கள், தம் இன்வொயிஸ் (INVOICE) களுக்காக குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் காலக்கெடு (Credit Period) வழங்குதல் வேண்டும்.
- சேதமடைந்த (Damage) அல்லது உரிய தராதரத்திற்கு மாறான பொருட்கள் திருப்பி அனுப்பப்படுவதுடன் உடனடியாக உரிய தரத்திலான பொருட்களை வழங்குவதற்கு வழங்குநர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.
- 1000.00 ரூபா செலுத்தி ஆகக் குறைந்தது இரண்டு (02) உருப்படிகளுக்கு மாத்திரமே பதிவு செய்து கொள்ளலாம்.
- பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படினும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பதிவு செய்யப்படாத வழங்குநர்களிடமிருந்தும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**விசாரணைகள்: 032-2247675/032-4994223**

**மின்னஞ்சல்: chillawprasa@yahoo.com**
**திகதி: 2024-10-10**

**ஆர்.எம்.பி.என். ரணதுங்க,**
**செயலாளர்,**
**சிலாபம் பிரதேச சபை**

**2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**
**சிலாபம் பிரதேச சபை**

1. வழங்குநரின் பெயர் : ..............................
2. முகவரி : ..............................
3. தொலைபேசி இலக்கம் : ..............................
4. வழங்கப்படும் பொருட்கள்/ சேவைகள் : ..............................
   I. ..............................
   II. ..............................
   III. ..............................
5. பதிவுக் கட்டணம் : ..............................
6. இதற்கு முன்னர் பொருட்கள் சேவைகள் வழங்கியிருப்பின் அதுபற்றிய விபரம்:- ..............................
7. பெ.சே.வ (VAT) இலக்கம் : ..............................
8. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம்: மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.

........................................ ........................................
விண்ணப்பதாரரின் ஒப்பம் திகதி

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**(அலுவலக உபயோகத்திற்கு)**

1. பற்றுச்சீட்டு இலக்கம்:
2. பதிவேட்டின் பக்க இலக்கம்:

..................................................
விடயப் பொறுப்பதிகாரி

வழங்குநரொருவராகப் பதிவு செய்துகொள்வதற்கு அனுமதிக்கின்றேன்/ அனுமதிக்கவில்லை.

........................... ........................................
திகதி தலைவர்

**2025ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**
**சிலாபம் பிரதேச சபை**

1. ஒப்பந்தக்காரரின் பெயர்: ..............................
2. முகவரி : ..............................
3. தொலைபேசி இலக்கம்: ..............................
4. பெசேவ (VAT) இலக்கம்: ..............................
5. CIDA பதிவு இலக்கம்: ..............................
6. துறை தரம்
   Building ...........................
   Highway ...........................
   Bridge ...........................
   ........................... ...........................
   ........................... ...........................
7. நிலையான சொத்துக்களின் பெறுமதி (ரூபா): ..............................
8. அனுமதிக்கப்பட்ட வங்கிக் கடன் எல்லை: ..............................
9. கடந்த 03 வருடங்களில் முடிவுறுத்தப்பட்ட ரூபா 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வேலைகள் மூன்றைக் குறிப்பிடவும்.

........................... ........................................
திகதி ஒப்பம் (உத்தியோக முத்திரை)

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**(அலுவலக உபயோகத்திற்கு)**

1. விண்ணப்பப் படிவக் கட்டணம்: ..............................
2. பற்றுச்சீட்டு இலக்கம்: ..............................
3. பதிவேட்டின் பக்க இலக்கம்: ..............................

..................................................
விடயப் பொறுப்பதிகாரி

வழங்குநரொருவராகப் பதிவு செய்துகொள்வதற்கு அனுமதிக்கின்றேன்/ அனுமதிக்கவில்லை.

........................... ........................................
திகதி தலைவர்


Trusted Marketplace of Classified Advertisers




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

www.adz.lk
it's what you want

## மாவட்டச் செயலகம் - பதுளை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

01. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 4.3 மில்லியன் ரூபா சிவில் மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான உடகொஹொவில வீடமைப்புத் திட்டத்தில் உள்ளக வீதிகளுக்கு கொங்கிறீட் இடுதல் (BD/FMG/PROC/2024/19) எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதுளை மாவட்டச் செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் - CIDA (ICTAD) C8 அல்லது C7 தரத்தில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறும் தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு விலைமனுதாரர்கள் விலைமனு தரவின் 4.4 உப அத்தியாயத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள மூலப் பிரமாணங்கள் உட்பட, ஏனையவற்றிற்கு இடையே பின்வரும் குறைந்தபட்ச மூலப் பிரமாணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. நிதி நிலைமை

i. கடந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி அளவு குறைந்தபட்சம் 10 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

ii. அணுகக்கூடிய அல்லது கிடைக்கத்தக்க நிதி ஆதாரங்களின் குறைந்தபட்ச அளவு 5 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

ஆ. நிர்மாண அனுபவம்

i. கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் 5 மில்லியன் ரூபா பெறுமதியான குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தின் அனுபவம்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை மாவட்டச் செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0552222048 மற்றும் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பதுளை மாவட்டச் செயலகம், நிதி முகாமைத்துவப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் மட்டும் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தைச் ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் பதுளை மாவட்டச் செயலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. சகல விலைமனுக்களுடனும் 43,000.00 ரூபா ரொக்கப் பணம் அல்லது 86,000.00 ரூபா வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ரொக்கப் பணமாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்தால் அதை பதுளை மாவட்டச் செயலகத்தில் வைப்புச் செய்யலாம் அல்லது வங்கி உத்தரவாதத்தைத் தெரிவு செய்தால், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் மற்றும் 10ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும். (2025-01-30ஆம் திகதி வரை விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்).

08. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

09. விலைமனுக்கள் நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பதுளை மாவட்டச் செயலகத்தின் கூட்ட அறையில் (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி) சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரச அதிபர் கூட்ட அறையில் இடம்பெறும். (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**
**0552222465**

## 2025 ஆம் வருடத்துக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## ஹங்குரான்கெத்த பிரதேச சபை

2025 ஆம் வருடத்துக்கென அட்டவணையில் தரப்பட்டுள்ள பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கென உத்தேசித்துள்ள கூட்டுத்தாபனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து 2024.12.13 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. அன்றைய தினத்தின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கலாம். அல்லது நேரில் கையளிக்க இயலும். விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வழங்கும் பொருட்கள் |
|---|---|
| 01 | காகிதாதிகள் |
| 02 | டோனர், ரிபன், காட்ரிஜ் போன்றவை |
| 03 | கணினிகள், அச்சிடும் இயந்திரங்கள், போட்டோ பிரதியிடும் இயந்திரங்கள், பெக்ஸ் இயந்திரங்கள் போன்றவை |
| 04 | அலுவலக உபகரணங்கள் (கதிரைகள், மேசைகள், அலுமாரிகள், கபட், ராக்கைகள் என்பன) |
| 05 | அச்சிடும் கருமங்கள் (அச்சிடப்பட்ட படிவங்கள், புத்தகங்கள், தின முத்திரைகள், இறப்பர் முத்திரைகள் போன்றவை) |
| 06 | சுகநலன் தொடர்பான உபகரணங்கள் (ஈர்க்குத்தடிகள், தும்புத்தடிகள், பிளாஸ்திக் குப்பைக் கூடைகள், கிருமிகொல்லித் திரவங்கள், சவர்க்காரம், பைனோல், கையுறைகள் போன்றவை) |
| 07 | மின் சேவைகள் வழங்குவதற்குத் தேவையான பொருட்கள் (மின்குமிழ்கள், வயர், சுவிட்ச், ப்ளக், மேலங்கிகள் போன்றன) |
| 08 | நீர்க்குழாய் உபகரணங்கள் (பி.வி.சி. / ஜீ.ஐ. குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்) |
| 09 | பெயர்ப் பலகைகள், வெற்றுக் கேடயங்கள், பதக்கங்கள், கிண்ணங்கள் போன்றவை) |
| 10 | சீருடைகள் வழங்குதலும் தைத்தலும் |
| 11 | கட்டடப் பொருட்கள் (மணல், கல், மெட்டல் கற்கள், சீமெந்து, பெயின்ட், இரும்பு, கம்பிகள், குளியலறை மற்றும் மலசலகூட பொருத்திகள், பிளாஸ்திக் நீர்த் தாங்கிகள், கூரைப் பொருட்கள்) |
| 12 | ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், சீமெந்து அச்சுக் கற்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்கள் |
| 13 | டயர், டியூப், பற்றரி மற்றும் உதிரிப்பாகங்கள் (வாகனங்களுக்கானவை) |
| 14 | மின்சக்திப் பொருட்கள் (மின்சார வாள், துளையிடும் கருவிகள், புஷ் கட்டர், செயின்சோ போன்றவை) |

**சேவைகள்**

| | |
|---|---|
| 01 | நீர்ப் பம்பிகள், நீர் மோட்டார்கள் திருத்தவேலை |
| 02 | வாகனங்களை சேர்விஸ் பண்ணுதல் |
| 03 | மோட்டார் வாகனங்களது திருத்தவேலை |
| 04 | கணினிகள், பிரிண்டர்கள், போட்டோ பிரதியிடும் இயந்திரங்கள், பெக்ஸ் இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலை |
| 05 | காய்ச்சி ஒட்டும் வேல்டிங் வேலைகள் மற்றும் கூடார உபகரணங்கள் வாடகைக்கு வழங்குதல் |
| 06 | வாகனங்கள் மற்றும் கட்டடங்களது காப்புறுதிச் செயற்பாடுகள் |
| 07 | ஏனையவை |

மேற்குறித்த ஒவ்வொரு வழங்கலுக்கும் சேவைக்குமெனத் தனித்தனியாக விண்ணப்பிப்பதற்கென ஒரு விடயத்துக்கென ரூ. 1000.00 பெறுமதியான கட்டணம் அறவிடப்படுவதுடன், விண்ணப்பப் படிவங்களுடன் வர்த்தகப் பதிவுச் சான்றிதழின் பிரதியையும் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

பதிவுக் கட்டணத்துக்கென வழங்கப்படும் காசோலைகள் "செயலாளர், பிரதேச சபை, ஹங்குரான்கெத்த" என்ற பெயரில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் ஹங்குரான்கெத்த (வழங்கல்கள்) என்பவரது 081 236 9203 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**டி.எம்.ஆர்.என். திசாநாயக்க**
**செயலாளர்**
**பிரதேச சபை, ஹங்குரான்கெத்த**
**2024-10-14**

## காலி மாநகர சபை – கேள்வி அறிவித்தல்

01. காலி மாநகர சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்படுள்ள, தர்மபால பூங்காவின் A சிற்றுண்டிச்சாலையை 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

02. 03 வருட அனுபவத்துடன் பேக்கரி உற்பத்தி அல்லது ஏனைய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மூலம் மாத்திரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

03. 2024.10.15ஆம் திகதி முதல் 2024.11.04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை கேள்வி நிபந்தனைகளுடன் கூடிய கேள்வி மாதிரிப் படிவங்களை காலி மாநகர சபையின் மாநகர கணக்காளரிடமிருந்து (வருமானம்) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் கேள்வி வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம். (கேள்வி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் வியாபார பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்)

04. 2024.11.05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

05. அனைத்துக் கேள்விகளும் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதியை ஒரு உறையிலும் நகல் பிரதியை இன்னொரு உறையிலும் இட்டு அரக்கு முத்திரை பொறித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என உறையில் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையிலிட்டு அரக்கு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''தர்மபால பூங்காவின் A சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குதல் - 2024'' எனக் குறிப்பிட்டு கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2024.11.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் காலி மாநகர ஆணையாளருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அனைத்துக் கேள்விகளுக்காகவும் கேள்வி நிபந்தனையில் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. வெற்றிகரமான கேள்வியைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனத்தின் விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை காலி மாநகர சபைக்கு செலுத்தி மற்றும் 03 மாதத்திற்குச் சமமான குத்தகைத் தொகையை பிணை வைப்பாகவும் மற்றும் நீர் மின்சாரம் வைப்புத் தொகையாக 75,000.00 ரூபா (எழுபத்தையாயிரம்) தொகையை காலி மாநகர சபையில் வைப்பு செய்து முறையாக உடன்படிக்கையொன்றுக்கு வருதல் வேண்டும். (அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சகல வரித் தொகைகள் மற்றும் கட்டணங்கள் ஏற்புடையதாகும்).

07. சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி தொடர்பில் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் அபிப்பிராயப் பேதம் ஏற்படும் பட்சத்தில் அல்லது இந்த நிபந்தனைகளுக்கு புறம்பாக கேள்விக்கு தாக்கம் செலுத்தும் விடயம் தொடர்பில் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை வைப்புத் தொகை (ரூபா) | நீர் மற்றும் மின்சார பிணை வைப்புத் தொகை (ரூபா சதம்) | மாதாந்த வாடகை (ரூபா) | ஆகக் குறைந்த ஒரு செலுத்தும் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01 | காலி தர்மபால பூங்காவின் A சிற்றுண்டிச்சாலை குத்தகைக்குவிடல் | 5,000.00 | 100,000.00 | 75,000.00 | 200,000.00 | 20,000,000.00 |

**மாநகர ஆணையாளர்**
**காலி மாநகர சபை.**

**2024.10.14 ஆம் திகதி**
**மாநகர சபை அலுவலகத்தில்.**

## சுற்றுச்சூழல், வனவிலங்கு, வன வளங்கள், நீர் வழங்கல், தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சகம்

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

## பின்வருவனவற்றிற்கான ஆர்வத்தின் வெளிப்பாடுகளுக்கு (EOI) அழைப்பு

**(1) கூட்டுத் திட்டங்கள்**

**(2) தேயிலை பதப்படுத்தும் இயந்திரங்கள்/ அமைப்பு மேம்பாடு/ மாற்றம்/ நிறுவல் மற்றும் வணிகமயமாக்கல்**

இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் (TRI) இலங்கையின் தேயிலை தொழிற்துறைக்கு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரே அரசாங்க நிறுவனமாக இலங்கையில் உள்ள புகழ்பெற்ற பொறியியல் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை பின்வரும் தேயிலை உற்பத்தி தொடர்பான திட்டங்களுக்கு மற்றும் இயந்திரங்கள்/ முறைமை மேம்பாடு/ மாற்றம்/ நிறுவல் மற்றும் வணிகமயமாக்கலுக்காக ஒத்துழைப்பதற்காக ஆர்வத்தை (EOI) சமர்ப்பிக்க அழைக்கிறது. வார நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை தலவாக்கலையில் உள்ள டி.ஆர்.ஐ.யின் (TRI) கொள்முதல் பிரிவினால் (Procurement Unit) வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அல்லது அதை **www.tri.lk** இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து நிரப்புவதன் மூலம் காலக்கெடுவிற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

**கூட்டுத் திட்டங்கள்**

1. ஆர்த்தடாக்ஸ்-ரோட்டார்வேன் (Orthodox-Rotorvane) தேயிலைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் பணிச்சூழலை மேம்படுத்த தூசி அகற்றும் அமைப்பை உருவாக்குதல்.
2. ஆர்த்தடாக்ஸ் ரோலருக்கான (Orthodox Roller) அரைத்தல் அளவுருக்களுக்கான (rolling parameters) கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் முறையின் வளர்ச்சி
3. தேயிலை தொழிற்சாலைகளில் நீராவி கொதிகலன்கள் (Boilers) மற்றும் சூடான நீர் ஜெனரேட்டர்களில் (Hot Water Generators) ஆற்றல் திறனை மேம்படுத்த கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கம்

**தேயிலை பதப்படுத்தும் இயந்திரங்கள்/அமைப்பு மேம்பாடு/மாற்றம்/ நிறுவல் மற்றும் வணிகமயமாக்கல்**

1. தேயிலை தொழிற்சாலைகளில் Air heater-dryer ருக்கு மரத் துண்டுகள் கடத்தும் அமைப்பை (Woodchip Feeding System)மேம்படுத்துதல்/ மாற்றம் செய்தல்/ நிறுவுதல் மற்றும் வணிகமயமாக்குதல்
2. குறிப்பாக கையால்செய்யப்படும்/ சிறப்பு தேயிலை உற்பத்திக்காக வடிவமைக்கப்பட்ட மினியேச்சர் உலர்த்தியின் (miniature dryer) மேம்பாடு/ மாற்றம்/ நிறுவல் மற்றும் வணிகமயமாக்கல்

TRI ஆல் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, பல்வேறு பணிகளுக்கான சாத்தியமான பொறியியல் நிறுவனங்கள் மற்றும்/அல்லது தனிநபர்களைத் தனித்தனியாக கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் மற்றும் தகுதி அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கும் உரிமையை கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியியல் நிறுவனங்கள் மற்றும்/அல்லது தனிநபர்கள் TRI உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

**சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்:** விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது Chairman, Department of Procurement Committee (minor), Tea Research Institute of Sri Lanka, Talawakelle என்ற முகவரிக்கு 2024.11.11ம் திகதி பிற்பகல் 2:00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும். **உறையின் மேல் இடது மூலையில், (1) கூட்டுத் திட்டங்களுக்கு (2) தேயிலை செயலாக்க இயந்திரங்கள்/அமைப்பு மேம்பாடு/மாற்றம்/ நிறுவல் மற்றும் வணிகமயமாக்கல் ஆகியவற்றுக்கான ஆர்வத்தின் வெளிப்பாடுகள் (EOI) எனக் குறிக்கப்பட வேண்டும்.**

விண்ணப்பங்கள் 2024.11.11ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு துணை இயக்குநர் (நிர்வாகம்) அலுவலகத்தில் திறக்கப்படும்.

மேலும் தகவல் அல்லது கேள்விகளுக்கு, துணை இயக்குநர் ஆராய்ச்சி (செயன்முறை தொழில்நுட்பம்) என்பவரை தொடர்பு கொள்ளவும். **(தொலைபேசி: 052 2258201 Ext: 355)**

**தலைவர்,**
**கொள்முதல் குழுவின் துறை (சிறியது),**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**தலவாக்கலை.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

மேற்கிந்திய தீவுகளுடனான 2ஆவது டி20

# முதல் போட்டியில் தோற்ற இலங்கை தொடர் தோல்வியை தவிர்க்க களத்தில்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்த இலங்கை அணி தொடர் தோல்வியை தவிர்க்கும் நோக்குடன் இன்று (15) இரண்டாவது டி20 போட்டியில் ஆடவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த டி20 தொடரில் இலங்கை அணி தற்போது 0–1 என பின்னடைவைச் சந்தித்துள்ளது. ரங்கிரி தம்புள்ளை சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில் இலங்கை அணி நிர்ணயித்த 180 ஓட்டங்களையும் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 19.1 ஓவர்களில் எட்டியது.

ஆரம்ப வீரர்களான பிரண்டன் கிங் மற்றும் எல்வின் லுவிஸ் 107 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். பிரன்டன் கிங் 33 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 63 ஓட்டங்களை பெற்றதோடு லுவிஸ் 28 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசினார்.

இதன்போது இலங்கை பந்துவீச்சாளர்களால் எதிரணியின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. மத்தீஷ பத்திரண மாத்திரம் 3.1 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைப் பதம்பார்த்தார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி ஆரம்பத்தில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் ஓட்டங்களை அதிகரிக்க முடியாமல் போனது. எனினும் மத்திய வரிசையில் கமிந்து மெண்டிஸ் 40 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார். அதே போன்று அசித்த பெர்னாண்டோ 49 பந்துகளில் 9 பௌண்டரிகளுடன் 59 ஓட்டங்களை குவித்தார்.

இதன்போது இருவரும் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். எனினும் கடைசி நேரத்தில் இலங்கை அணியால் வேகமாக ஓட்டங்களைப் பெற முடியவில்லை. இதனால் இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களையே பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டியும் அதே தம்புள்ளை மைதாயத்தில் நடைபெறவுள்ளது.

## மேலதிக சுழற்பந்து வீச்சாளரை சேர்க்க சரித் அசலங்க திட்டம்



முதல் டி20 போட்டியில் சுழற்பந்து வீச்சாளரின் குறைபாடு ஒன்று இருப்பதாகவும் அதனை சரிசெய்ய மேலதிக சுழற்பந்து வீச்சாளர் ஒருவரை அணியில் சேர்க்க வேண்டி இருப்பதாகவும் இலங்கை அணித் தலைவர் சரித் அசலங்க தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் இலங்கை அணி இரு விசேட வேகப்பந்து வீச்சாளர் மற்றும் இரு விசேட சுழற்பந்து வீச்சாளர்களுடனேயே களமிறங்கியது. இந்நிலையில் 180 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி பவர் பிளே ஓவர்களில் வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது அந்த அணியின் வெற்றிக்கு உதவியது. 'ஆடுகளம் இதனை விடவும் சுழலும் என்று நாம் எதிர்பார்த்தோம். அப்படி இருந்தால் நானும், கமிந்துவும் அதிக ஓவர்களை பந்து வீசவே இருந்தோம். துரதிஷ்டவசமாக பந்துவீச இடது கை துடுப்பாட்ட வீரர்கள் இருக்கவில்லை. அதனால் கமிந்து இரு ஓவர்கள் பந்துவீசினார். அவர் நன்றாகச் செயற்பட்டார். பெரும்பாலும் எதிர்காலத்தில் மற்றோரு சுழற்பந்து வீச்சாளர் ஆடுவார் என்று எதிர்பார்க்கிறேன்' என்று போட்டிக்குப் பின்னர் நடந்த ஊடக சந்திப்பில் சரித் அசலங்க தெரிவித்தார்.

'பவர் பிளே ஓவர்களில் ஓட்டங்கள் அதிகம் சென்றன. எதிர் காலத்தில் டி20 கிரிக்கெட்டில் அதிகம் மேம்படுத்த வேண்டிய பகுதியாக பவர் பிளே ஓவர்கள் உள்ளன. தொடர்ந்து பவர் பிளேவில் எம்மால் செல்லும் ஓட்டங்கள் அதிகம்.

அறு ஓவர்களுக்குப் பின்னர் எமது சிறந்த பந்து வீச்சாளர்கள் வந்தாலும் பவர் பிளேயில் ஏற்பட்ட பாதிப்பு அதிகம் என்பதால் அவர்களாலும் சமாளிக்க முடியாமல் போகிறது. எனவே, எதிர் காலத்தில் நாம் அதனை மேம்படுத்த வேண்டி உள்ளது' என்றும் அவர் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலிய கால்பந்து அணிக்கு 'இலங்கை தமிழர்' அபார ஆரம்பம்



அடுத்த பிஃபா உலகக் கிண்ணப் போட்டிக்கான ஆசிய தகுதிச் சுற்றில் அவுஸ்திரேலிய தேசிய கால்பந்து அணியில் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட நிஷான் வேலுப்பிள்ளை என்ற தமிழர் அறிமுகமாகியுள்ளார்.

இவர் கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதி நடைபெற்ற போட்டியிலேயே அவுஸ்திரேலிய தேசிய கால்பந்து அணியில் அறிமுகமானார். இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட 23 வயதான நிஷான் வேலுப்பிள்ளை 2019 முதல் அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் யுனைடெட் அணிக்காக விளையாடி வருகிறார்.

பிஃபா உலகக் கிண்ண தகுதிச் சுற்று போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்த நிலையில், அணியின் முகாமையாளராக புதிதாக பொறுப்பேற்ற டோனி போபாவிக், சீனாவுக்கு எதிரான போட்டியில் நிஷான் வேலுப்பிள்ளையை சேர்த்தார்.

அவுஸ்திரேலிய அணிக்காக மாற்று வீரராக போட்டியின் 83ஆவது நிமிடத்தில் களம் நுழைந்த நிஷான் அடுத்த 7 நிமிடத்தில் தனது அறிமுக போட்டியில் முதல் சர்வதேச கோலை அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களித்துள்ளார்.

அவர் அவுஸ்திரேலிய அணிக்காக கோல் அடித்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. மேலும், அவர் அணிந்திருந்த 7 எண் கொண்ட ஜெர்சியும் ரசிகர்களை கவர்ந்துள்ளது.

இதற்கிடையே, நிஷான் வேலுப்பிள்ளையின் கோல் மூலம் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய கால்பந்து அணி, பிஃபா உலகக் கிண்ண தகுதி வாய்ப்பை தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாதத்தின் சிறந்த ஐ.சி.சி. வீரராக கமிந்துவுக்கு மீண்டும் கௌரவம்



இலங்கையின் கமிந்து மெண்டிஸ் 2024 ஆம் ஆண்டில் முதல் வீரராக இரண்டாவது முறையாக சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் மாதத்தின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார்.

சக வீரர் பிரபாத் ஜயசூரிய மற்றும் அவுஸ்திரேலியாவின் ட்ரவிஸ் ஹெட் ஆகியோரை பின்தள்ளி செப்டெம்பர் மதத்தின் சிறந்த வீரர் எனும் ஐ.சி.சி. கௌரவத்தை கமிந்து பெற்றுள்ளார். இதற்கு முன்னர் அவர் இந்த ஆண்டின் மார்ச் மாதத்திலும் ஐ.சி.சி. சிறந்த வீரராக தெரிவானார்.

விருதுக்கான மாதத்தில் நான்கு டெஸ்ட் போட்டிகளில் ஆடிய கமிந்து 451 ஓட்டங்களைப் பெற்றதோடு இதன் ஓட்ட சராசரி 90.20 ஆக இருந்தது. இது இங்கிலாந்துக்கு எதிரான ஓவல் டெஸ்ட் மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான இரு டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெல்ல உதவியது.

'ஐ.சி.சியின் மாதத்தின் சிறந்த வீரராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பது கௌரவம் என்பதோடு நான் இன்றைய நிலைக்கு மாறுவதற்கு உழைத்த அனைத்து கடின உழைப்பும் பலனளிக்க ஆரம்பித்துள்ளது மற்றும் உலக அரங்கில் தொடர்ந்து அங்கீகரிக்கப்படுவதால் இந்தப் பாராட்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது' என்று கமிந்து மெண்டிஸ் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதத்தில் மெண்டிஸ் டெஸ்ட் வரலாற்றில் முதல் வீரராக தனது எட்டு டெஸ்ட் போட்டிகளிலும் 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற முதல் வீரராக சாதனை படைத்திருந்தார். இந்த மாதத்தில் கடந்த 75 ஆண்டு காலத்தில் 1000 டெஸ்ட் ஓட்டங்களை வேகமாக பெற்ற வீரராகவும் அவர் பதிவானார்.

## சமர் பிரீமியர் லீக் கிண்ணம் பொல்வத்த புலட்ஸ் வசமானது

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**




பலளுவெள திக்கந்தியாவ செவன் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சமர் பிரீமியர் லீக் மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பொல்வத்த புலட்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

திக்கெந்தியாவ பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் எம்.ஆர். டிரன்ஸ்போர்ட் அணியை ஏழு விக்கெட்டுகளால் புலட்ஸ் அணி வீழ்த்தியது. இதில் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக எம்.ஆர். டிரன்ஸ்போர்ட் அணியின் அஸ்கான் தெரிவானதோடு சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியின் நிரோஸ்கான் தெரிவானார்.

## இலங்கை–நியூசி. டி20, ஒருநாள் போட்டி அட்டவணை வெளியீடு



நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

நியூசிலாந்து அணி இரண்டு டி20 மற்றும் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டு டி20 போட்டிகளும் எதிர்வரும் நவம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் ஆடும் ஒருநாள் சர்வதேச போட்டிகள் நவம்பர் 13, 17 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதன் முதல் போட்டி தம்புள்ளையிலும் அடுத்த இரண்டு போட்டிகளும் பல்லேகலவிலும் பகலிரவு ஆட்டமாக நடைபெறும்.

## பாடசாலை கால்பந்து தொடரில் அசன்குத்தூஸ் அணி சம்பியன்

**புத்தளம் தினகரன்**



புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலயத்தின் 16 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணி அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று (14) நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் வியாவிழன் மத்திய கல்லூரியை எதிர்கொண்ட அசன்குத்தூஸ் அணியினர் 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர். இதன்போது அசன்குத்தூஸ் பாடசாலை சார்பில் முஹம்மது அப்ரான், முஹம்மது இர்பான் ஆகியோர் கோல் பெற்றனர்.

எந்த பயிற்சி வசதியும் இன்றி அசன்குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலய அணியினர் வெற்றியீட்டி இருப்பதாக அந்தப் பாடசாலை அதிபர் ஜே.எம். இல்ஹாம் குறிப்பிட்டார்.

## தெற்காசிய கால்பந்து தொடருக்கு இலங்கை மகளிர் அணி அறிவிப்பு



நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய மகளிர் கால்பந்து சம்பியன்சிப் போட்டிக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் கத்மண்டுவில் எதிர்வரும் ஒக்டோபர் 17 தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்கு பங்கேற்கவிருக்கும் இலங்கைக் குழாத்திற்கு 23 வீராங்கனைகள் உள்ளடங்குகின்றனர். அதேபோன்று அணியின் தலைமைப் பொறுப்பு துஷானி மதுஷிகாவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் ஆரம்ப சுற்றில் பி குழுவில் இடம் பெற்றிருக்கும் இலங்கை அணி மாலைதீவு, பூட்டான் மற்றும் போட்டியை நடத்தும் நேபாளத்தை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை மகளிர் அணி தனது முதல் போட்டியில் எதிர்வரும் ஒக்டோபர் 18 ஆம் திகதி மாலைதீவை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை மகளிர் அணியின் தலைமை பயிற்சியாளராக முஹமது ஹசன் ரூமி செயற்படுகிறார்.

**இலங்கைக் குழாம்:** பிரான்சிஸ் சலோமி, மஹேசிக்கா குமுந்தினி, ஷஷிகலா ரத்நாயக்க, சகுரா செவ்வந்தி, பிரவீனா பெரேரா, சச்சினி டி சில்வா, அச்சலா சஞ்சீவனி பெரேரா, ஷானிக்கா சோமரத்ன, பூர்ணிமா பெரேரா, செல்வராஜ் யுவராணி, அயோமி வீரசிங்க, துஷானி மதுஷிகா (தலைவி), மதுபானி பெரேரா, ஹாஸ்கரன் ஷானு, ஸ்டெபனி டயஸ், கீதாஞ்சலி மதுஷானி, அஷானி இமேஷா, துலினிகா சூரியாரச்சி, சுரேந்திரன் கௌரி, வர்ணகுலசூரிய இமேஷா, சிவனேஷ்வரன் தர்மிகா, தரிதி வெலிவிட்ட, சதுனி செவ்மினி.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மாவட்டச் செயலகம் - பதுளை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

01. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 4.21 மில்லியன் ரூபா சிவில் மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான வெலிமட, வங்கியகும்புர தேசிய கல்லூரி, பண்டாரவளை கொந்தஹெல கல்லூரி, ஹல்துமுல்ல கிரிவனாகம நவோதயா மத்திய கல்லூரி மற்றும் ஹப்புத்தளை எல்லகம மத்திய கல்லூரிகளில் புதிய கொங்கிறீட் பயிற்சி ஆடுகளத்தை (New Side Wicket) நிர்மாணித்தல் (BD/FMG/PROC/2024/22) எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதுளை மாவட்டச் செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் - CIDA (ICTAD) C8 அல்லது C7 தரத்தில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறும் தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு விலைமனுதாரர்கள் விலைமனு தரவின் 4.4 உப அத்தியாயத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள மூலப் பிரமாணங்கள் உட்பட, ஏனையவற்றிற்கு இடையே பின்வரும் குறைந்தபட்ச மூலப் பிரமாணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. நிதி நிலைமை

i. கடந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி அளவு குறைந்தபட்சம் 10 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

ii. அணுகக்கூடிய அல்லது கிடைக்கத்தக்க நிதி ஆதாரங்களின் குறைந்தபட்ச அளவு 5 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

ஆ. நிர்மாண அனுபவம்

i. கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் 5 மில்லியன் ரூபா பெறுமதியான குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தின் அனுபவம்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை மாவட்டச் செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0552222048 மற்றும் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பதுளை மாவட்டச் செயலகம், நிதி முகாமைத்துவப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 4ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான வேலை நாட்களில் மட்டும் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் பதுளை மாவட்டச் செயலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. சகல விலைமனுக்களுடனும் 42,100.00 ரூபா ரொக்கப் பணம் அல்லது 84,200.00 ரூபா வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ரொக்கப் பணமாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்தால் அதை பதுளை மாவட்டச் செயலகத்தில் வைப்புச் செய்யலாம் அல்லது வங்கி உத்தரவாதத்தைத் தெரிவு செய்தால், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் மற்றும் 10ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும். (2025-01-30ஆம் திகதி வரை விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்).

08. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

09. விலைமனுக்கள் நவம்பர் 04ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பதுளை மாவட்டச் செயலகத்தின் கூட்ட அறையில் (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி) சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரச அதிபர் கூட்ட அறையில் இடம்பெறும். (பதுளை மாவட்டச் செயலகத்தின் 5ஆம் மாடி).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**
**0552222465**

The Housewives' companion
Classifieds on
Daily News

## தெஹிவளை கல்கிசை மாநகர சபை

## 2025ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2025ம் ஆண்டிற்காக தெஹிவளை, கல்கிசை மாநகர சபைக்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் கொள்வனவாளர்கள், முகவர் நிறுவனங்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன், இந்நகர சபையின் (CIDA) 2025ம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.10.15 முதல் 2024.11.15 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வழங்குநராக பதிவு செய்வதற்காக குறித்த நிறுவனத்தின் கடிதத்தலைப்பின் கீழ் விண்ணப்பங்களை கோரும் கடிதத்தையும் கொண்டு, 2024.10.15 முதல் 2024.11.15 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை தெஹிவளை, கல்கிசை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது வழங்கல் பிரிவிற்கு கீழ்க்காணும் QR குறியீட்டின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள உருப்படியின் பிரகாரம், ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக ஒரு உருப்படிக்கு ரூ. 2000.00 + குத்தகைத்தொகை வீதம் செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை 2024.11.29ம் திகதிக்கு முன்பு மாநகர ஆணையாளர், தெஹிவளை, கல்கிசை மாநகர சபை, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வழங்கல் பிரிவிற்கு கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025"** என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வழங்கல் பிரிவின் தொ.பே. இல. 011-2721379 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்மாண வேலைகளுக்கு ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்காக குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விண்ணப்பங்களை வேண்டுதல் கடிதத்தையும் கொண்டு, அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் தெஹிவளை, கல்கிசை மாநகர சபையின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள மாநகர பொறியியலாளர் திணைக்களத்திற்கு வருகை தந்து கீழ்க்காணும் QR குறியீட்டின் பிரகாரம் தரப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பதிவு எல்லைக்கும் அறவிடப்படும் (குத்தகைத் தொகையுடன் உள்ள) தொகையை செலுத்தி விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள் :**

இச்சபையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக வெளி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களில் இருந்து தேவைப்பாட்டின் படி கேள்வி விலையை ஒப்பிட்டுக்கோரும் உரிமை சபைக்கு உரியது.

மேலதிக விபரங்களை மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் தொ.பே. இல. 011-2727208 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அவ்வாறே ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது மேல் மூலையில் "ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2025" என்று தெளிவாகக் குறிப்பிட்டு தெஹிவளை கல்கிசை மாநகர சபையில் மாநகர ஆணையாளரிற்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக கையில் கொண்டுவந்து மாநகர ஆணையாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்பு வைப்புச் செய்யலாம் குறித்த தினத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது அத்துடன் தபாலில் ஏற்படும் தொலைதல் அல்லது காணமல்போகும் விண்ணப்பங்கள் சார்பாக இச் சபையினால் பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

**ஒப்பந்த நிறுவன பதிவு** | **வழங்குநர்களின் பதிவு**

**எம்.எம்.சி.கே.கே. மான்னப்பெரும**
**மாநகர சபை ஆணையாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**தெஹிவளை கல்கிசை மாநகர சபை,**
**தெஹிவளை**
**2024.10.14**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்
## பெறுகை அறிவித்தல்

### பாலிந்தநுவர பிரதேச சபை

**Improvement of access facilities of Kalukandawa tourist area in Diganna**

2024 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் 13ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் 05ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படல் வேண்டுமென தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். முன்னர் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**05.** விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் CIDA நிறுவனத்தில் C6 அல்லது C7 (நெடுஞ்சாலை) தரத்தில் பதிவு செயல்நிலையில் இருத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**பாலிந்தநுவர பிரதேச சபை.**

**கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி,**
**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**
**கட்டிடங்கள் திணைக்களம்**

## கேள்விகளுக்கான அழைப்பு

### கொழும்பு - 08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகூடம் மற்றும் தாழ்வாரத்திற்கு அருகில் தற்போதுள்ள Vinyl கார்பெட்டை அப்புறப்படுத்துதல் மற்றும் Epoxy தரையிடலை வார்த்தல்

(ஒப்பந்த இலக்கம்: **BD-0036sp01-ZWN/RCT 11/24)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 12.2 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவை கொண்டதும் கொழும்பு - 08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகூடம் மற்றும் தாழ்வாரத்திற்கு அருகில் தற்போதுள்ள Vinyl கார்பெட்டை அப்புறப்படுத்துதல் மற்றும் Epoxy தரையிடலை வார்த்தல் எனும் பணிக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (மேற்கு தெற்கு) தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 91 நாட்கள்.

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C6 அல்லது C5 தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 03ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது''

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொழும்பு-7, டொரிங்டன் அவனியூ, இல. 213, கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு வடக்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 011-2582579, தொலைநகல்: 011-2588686

5. மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் ரூபாவை (ரூபா 4,000.00) 2024-10-15ஆம் திகதி முதல் 2024-10-29ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-7, டொரிங்டன் அவனியூ, இல. 213, கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு வடக்கு) பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வடக்கு மேற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வடக்கு மேற்கு), கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் அவன்யூ, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இதே முகவரியில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலம் முதல் 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்,

   *கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின்படி

   *கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட

   *180,000.00 ரூபா தொகைக்கு

   *2025 பெப்ரவரி 11ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்

   *கேள்வித் தரவின் ITB 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (மேற்கு தெற்கு),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**இல. 213, டொரிங்டன் அவன்யூ, கொழும்பு 07.**

## (2015) இல (05) எனும் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழ் 58(2) 119(1) மற்றும் 120(3) பிரிவின் பிரகாரம் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்

# இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

பத்துவே ஆரச்சிலாகே தமித்ர நிஷாமன் மற்றும் பட்டபெந்திகே பிரியங்கா பர்னதெத் குரே ஆகிய நாம் ஜா-எல மாக்கோவிட்ட இல. 270/5, இல் அமைந்துள்ள ஆரோக்யா பார்மசி என்ட் குரோசரியை நடத்திச் செல்வதுடன், காலாவதியான ஓமஸ்டீன் 20 வில்லைகளை வைத்திருந்தமையினால் வழக்கு இல. (3208/2/2024) இன் கீழ் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அக்குற்றச்சாட்டுக்கு குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் கௌரவ நீதிமன்றத்தினால் ரூபா ஐம்பதாயிரம் (ரூ. 50,000.00) தண்டத்தொகை விதிக்கப்பட்டதாக இலங்கை மக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

இக்குற்றம் எம்மால் இதன் பிறகு மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிப்பதுடன், மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை வாழ் மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# மாவட்டச் செயலகம் - பதுளை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதுளை, மாவட்டச் செயலக பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுச் செலவு (இல. ரூபா மில்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் 2025-02-20ஆம் திகதி வரை |
|---|---|---|---|---|---|
| BD/FMG/ PROC/ 2024/15 | எல்ல நகரிலுள்ள பீர எல்ல கந்துரவை மேம்படுத்துதல் | 37.23 | 45 நாட்கள் | C4 மற்றும் C5 - மழை நீர் அப்புறப்படுத்தல் மற்றும் காணி வடிகாலமைப்பு / நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | ரொக்கப் பணமாக ரூபா 372,400.00 / வங்கி உத்தரவாதமாக ரூபா 744,800.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைக் கோரல் முறையின் கீழ் இடம்பெறும்.
3. பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சட்டத்தின் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த ஏற்பாடுகளின் பிரகாரம் இது நிர்வகிக்கப்படும். அதனால் மொத்தப் பெறுமதி ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவை (இல. ரூபா 5,000,000.00) விஞ்சினால் மட்டும் கூறப்பட்ட சட்டத்தின் 11ஆம் பிரிவின் விதிகளின் உள்ள இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர்கள் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://drc.gov.lk/)
4. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) இயைபுடைய துறையில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் மற்றும் 5ஆம் பிரிவிலுள்ள அட்டவணையில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்தத் தரவு) உள்ளடக்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வார நாட்களில். 09.00 மணி முதல் 14.00 மணி வரையில் பதுளை மாவட்டச் செயலகம், மாவட்டச் செயலாளர் (0552222451), பதுளை - உள்ளூராட்சித் திணைக்களம், பிரதான பொறியியலாளரிடமிருந்து (055-2222407) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. மீளளிக்கப்படாத 7,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2024-10-14ஆம் திகதி முதல் 2024-11-04ஆம் திகதி வரையான காலத்தில் 09.00 மணி முதல் 14.00 மணி வரையில் பதுளை மாவட்டச் செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
8. விலைமனுக்களை 2024-11-04ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதுளை, மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-28ஆம் திகதி 10.00 மணிக்கு பதுளை - மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம், பதுளை.**
**055-2222465**

# ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு வழங்குநர்களாக பதிவு செய்துகொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2024-11-30ஆம் திகதி பி. ப. 3.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை, வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி, தகுதிகள் மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணம் செலுத்திய விபரங்களின் சகிதம் எனக்கு அனுப்ப வேண்டும். இதற்கெனப் பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு ஒவ்வொரு பொருள் அல்லது சேவை வழங்கலுக்காகவும் ஒரு உருப்படிக்கு 1500.00 ரூபா வீதம் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது காசோலை மூலம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம். (காசுக் கட்டளைகள் மூலம் கட்டணம் செலுத்த வேண்டாமென தயவுடன் தெரிவிக்கின்றேன்) பதிவுக் கட்டணத்தை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம் என்பதுடன் காசோலை மூலமான செலுத்தல்களை செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை எனும் பெயரில் அனுப்புதல் வேண்டும். 2024-11-30ஆம் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது நிறைவுறும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2025 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொருட்கள் வழங்கல்**

01. காகிதாதிகள்
02. அலுவலக இயந்திரங்கள் (கணனிகள், கணனி துணையுறுப்புகள், தொலைநகல் இயந்திரங்கள் அச்சுப்பொறிகள் போன்றன)
03. சகல வகையான மின் உபகரணங்கள் / தெரு விளக்கு உபகரணங்கள் / நிர்மாணப் பணிக்கான இயந்திரங்கள்
04. அலுவலக உபகரணங்கள் (இரும்பு, மரம், உருக்கு, பிளாஸ்திக்)
05. சகல வகையான கட்டிடப் பொருட்கள்
06. சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள்
07. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்
08. சகல வகையான டயர், ரியூப், கொலர், பற்றரி உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்கள்
09. ஹியூம் குழாய்கள், உள்ளிட்ட கொங்கிறீட் உற்பத்திகள்
10. அறிவித்தல் பலகைகள், பதாகைகள், ஸ்ரிக்கர், பெயர்ப்பலகை, இலச்சினைகள் மற்றும் நிறுவன அடையாள அட்டைகள்
11. விளையாட்டு உபகரணங்கள் / விளையாட்டுப் பொருட்கள், முன்பள்ளி உபகரணங்கள் சனசமூக நிலைய உபகரணங்கள் மற்றும் பூங்கா உபகரணங்கள்
12. சீருடைத் துணிகள், ஏனைய துணி வகைகள்
13. நீர்க் குழாய் உபகரணங்கள்
14. தார் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
15. CCTV கெமராக்கள், விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள்
16. நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உணவு வழங்குதல்

**சேவைகள் வழங்குதல்**

01. அச்சு வேலைகள்
02. அலுவலக இயந்திரங்களின் திருத்தவேலையும் பராமரிப்பும் (கணனி, அச்சுப் பொறிகள், ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் போன்றன)
03. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள்
04. வாகனங்களின் திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல், பராமரித்தல் (வாகன நிறப்பூச்சு வேலைகள், தகடு வேலைகள், என்ஜின் மற்றும் கியர் தொகுதி திருத்தம், வாகனத்திற்கு வளிச்சீராக்கம் செய்தல், வாகன மின்வேலைகள்)
05. நில அளவைச் சேவைகள்
06. CCTV கெமரா திருத்தவேலையும் பராமரிப்பும்
07. நிர்மாணப் பணிகளுக்கான மனிதவலு வழங்குதல் மற்றும் பட்டறை வேலைகள்
08. அபாயகரமான மரங்களை வெட்டுதல்
